132

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

# நஸீஹத்துல் இஸ்லாம்.

## ஹனபிய்யா.

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

சுத்தப் பதிப்பு.

1950

[அணா 12.

Q7:332
N50.
111219

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# நஸீஹத்துல் இஸ்லாம்.

## ஹனபிய்யா.

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

1950

இதன் விலை] [அணா 12.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

# நஸீஹத்துல் இஸ்லாம்

## ஹனபிய்யா.

## ஹக்குத் தஆலா துதி.

அறபு வாக்கியம்.

அவுதுபில்லாஹி மினஷ் ஷைத்தானிர் றஜீம்.

இதன் பொருள்.

எடுத்தெரியப்பட்ட ஷைத்தானுடைய தீங்குகளை விட்டு அல்லாஹு தஆலாவைக் கொண்டு காவல் தேடுகிறேன்.

---

அஸ்தஹீது பில்லாஹின் ஸமீஇல் அலீம் மினஷ் ஷைத்தானிர் றஜீம்.

இதன் பொருள்.

எடுத்தெரியப்பட்ட ஷைத்தானுடைய தீங்குகளை விட்டு சகல கலாம்களையுங் கேட்பவனும், சகல காரியங்களையு மறிப வனுமாகிய அல்லாஹு தஆலாவைக் கொண்டு நான் காவல் தேடுகிறேன்.

அறபு வாக்கியம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இதன் பொருள்.

சிறப்பாகிய அல்லாஹு தஆலா தனக்கும் தன்னுடைய றசூலுக்கும் வழிபட்டபேர்களை ஆகிறத்திற் சுவர்க்கலோகத்திலே புகுத வைக்கிறது கொண்டும் துன்யாவில் தனக்கு வழிபட்ட பேர்கட்கும், வழிப்படாத பேர்கட்கும் இரண்டுங் கொடுக்கிறது கொண்டும், கோவினைகளைத் தட்டிவிலக்கிற் சுவாத்தியங் கொடுக் கிறது கொண்டுமுள்ள றஹீம், றஹ்மானுகிய அல்லாஹு தஆலா தன் நாயகத்தனத்தவவிலே சேகரிக்கப்பட்ட வர்ணிப்புகளைக்

காணப்பட்ட உள்ளமையுள்ள நாயகனுடைய திருநாமங்கொண்டு நாமிந்த நஸீஹத்துல் இஸ்லாம் ஹனபிய்யா வென்னுங் கித்தாபைக் கோர்வை செய்தனம்.

ஆகையால் நமது நாயகம் நபி முஹம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம வர்கள் பொருட்டினுலும் அவர்கள் ஆல் அஸ்ஹாபுகளுடைய துஆ பேரினுலும், முஃமின் முஸ்லிமாகிய நம்மனைவோர்களுக்கும் இம்மையிலும், மறுமையிலும் அல்லாஹுதஆலா கிருபை ரஹமத்துச் செய்வானுகவும். ஆமீன்.

முற்றிற்று.

---

பரிசுத்தமான இஸ்லாம் மார்க்கமாகிறது கலிமா, தொழுகை, நோன்பு, ஸக்காத்து ஹஜ்ஜாகிய இவ்வைந்து காரியங்களைக் கொண்டெடுக்கப்பட்டதா யிருக்கும். ஆகையாலவ்வைந்து காரியங்களான அறபு வாக்கியங்களையும், தனித்தனியாக வெழுதியபின் அந்த அறபு வாக்கியங்களையும், அவையவைகளின் பொருள்களையும் தனித்தனி விளக்கமாகச் சொல்கின்றனம்.

---

### அவ்வல் கலிமா தையிபு

லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி.

---

### இரண்டாங் கலிமா ஷஹாதத்து.

அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறசூலுஹு.

### மூன்றுங் கலிமா தம்ஜீது.

ஸுபுஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பற் வலா ஹவ்ல வலாகுவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம்.

---

## நாலாங் கலிமா தௌஹீது.

லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹுலஹுல் முல்க்கு வலஹுல் ஹம்து யுஹியீ வயுமீத்து வஹ்வஹையுன் தாயிமுன், காயிமுன் காதிறுன், காஹிறுன், லாயனுமு, வலாய மூத்து அபதன் அபதா, துல்ஜலாலி வல்இக்றாம் பியதிஹில் கைறுவஹுவ அலாகுல்லி ஷைஇன் கதீற்.

---

## ஐந்தாங் கலிமா றத்துல் குபுர்.

அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மின் அன் உஷ்ரிக்க பிக்க ஷைஅன் வஅனு அஃலமு பிஹி வஅஸ்தகுபிறுக்க லிமாலா அஃலமு பிஹி துப்து அன்ஹு வதபற்றஹ்து அன்குல்லி தீனின் ஸிவாதீனில் இஸ்லாமி வஅஸ்லம்து, வஅக்கூலு லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி.

---

## அவ்வல் கலிமாவின் பொருள்.

(லாஇலாஹ இல்லல்லாஹு) வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் யாருமில்லை அல்லாஹு தஆலாவைத் தவிர, (முஹம்மதுர் றசூலுல்லாஹி) முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமாகிறவர்கள் அல்லாஹு தஆலாவுடைய திருத்தூதராக இருக்குமென் றுண்மையாக, நானறிந்து ஈமான் கொண்டே னென்பதாம்.

---

## இரண்டாங் கலிமாவின் பொருள்.

(அஷ்ஹது) திடனுக நானறிந்து உண்மை கொண்டு சாட்சி சொல்லுகிறேன், (அன்லாஇலாஹ இல்லல்லாஹு) உண்மையாக வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் யாருமில்லை அல்லாஹு தஆலாவைத் தவிர (வஹ்தஹு) அவன் ஒருவன், (லாஷரீக் லஹு) அவனுக்கு யாதொரு இணையுமில்லை, (வஅஷ்ஹது) இன்னும் திடனுக நானறிந்துண்மை கொண்டு சாட்சி சொல்லுகிறேன், (அன்ன முஹம்மதன்) உண்மையாக முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமாகியவர்கள்

(அப்துஹு) அல்லாஹு தஆலாவுடைய அடியாரென்றும் (வறசூலுஹு) அவனுடைய திருத்தூதரென்று உண்மையாக நானறிந்து ஈமான் கொண்டேனென்பதாம்.

## மூன்றாங் கலிமாவின் பொருள்.

(சுபுஹானல்லாஹி) அல்லாஹு தஆலாவாகிறவன் தூய்தானவன், பழுதற்றவன் (வல்ஹம்து லில்லாஹி) எல்லாப்புகழும் புகழ்ச்சியும், அல்லாஹுத் தஆலாவுக்கா யிருக்கும், (வலாஇலாஹ இல்லல்லாஹு) வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் யாருமில்லை, அல்லாஹு தஆலாவைத் தவிர (வல்லாஹு அக்பர்) அல்லாஹு தஆலா மிகவும்பெரியவன் (வலாஹௌல) பாவத்தைவிட்டும் யாதொரு திரும்புதலுமில்லை, (வலாகுவ்வத்த) இபாதத்தின் பேரில் யாதொரு பலனுமில்லை, (இல்லாபில்லாஹில் அலீயில் அலீம்) வலுப்பமாகிய, உயர்த்தியாகிய அல்லாஹு தஆலாவினுதவியைக் கொண்டே யொழிய வென்பதாம்.

## நாலாங் கலிமாவின் பொருள்.

(லாஇலாஹ இல்லல்லாஹு) வணக்கத்துக்குப் பாத்திரமாகிய நாயன் யாருமில்லை, அல்லாஹுத் தஆலாவை தவிர (வஹ்தஹு) அவன் ஒருவன் (லாஷரீக்கலஹு) அவனுக்குச் சரியும், இணையுமில்லை, (லஹுல்முல்க்கு) இராஜவாழ்க்கையடங்கலும் அவனுக்குண்டான தாயிருக்கும், (வலஹுல்ஹம்து) புகழடங்கலும் அவனுக்காயிருக்கும், (யுஹ்யி) மௌத்தானவர்களை ஹயாத்தாக்குவான், (வயுமீத்து) ஹயாத்தனவர்களை மௌத்தாக்குவான், (வஹுவ) அவனாகிறவன் (ஹையுன்) ஹயாத்தானவன் (தாஇமுன்) மாறுமலிருக்கிறவன் (காஇமுன்) தரிபாடா யிருக்கிறவன் (காதிறுன்) சக்தியுள்ளவன் (காஹிறுன்) அடக்கி யரசாளுகிறவன் (லாயனுமு) அவன்நித்திரை செய்யான் (வலாயமூத்து) அவன் மௌத்தாகமாட்டான், (அபதன் அபதா) அவன் காலா காலமெல்லா மிருப்பவன் (துல்ஜலாலி) அவன் வலுப்பத்தையுடையவன் (வல்இக்றாம்) அவன் சங்கையை யுடையவன் (பியதிஹில்கைறு) நலவடங்கலு மவன் வசமா

யிருக்கும், (வஹூவ) அவனாகிறவன் (அலாகுல்லி ஷையின் கதீர்) நாடிய வஸ்துக்களடங்கல் பேரிலும் மிகவும் சக்திபெற்றவனென்பதாம்.

## ஐந்தாங் கலிமாவின் பொருள்.

(அல்லாஹூம்ம இன்னீ) நாயனே நானாகிறது (அஊது பிக்க) உன்பக்க லடைக்கலமானேன், (மின் அன்உஷ்ரிக்கபிக்க ஷைஅன்) உன்னைக் கொண்டொரு வஸ்துவை நானிணைவைக்கிறதை விட்டும் (வஅனா அஃலமுபிஹி) நான் அதுகொண்டறிந்து (வஅஸ் தஃபிறுக்க லிமாலா அஃலமு) உன்னிடத்திற் பிழை பொருக்கத் தேடுகிறேன் (பிஹி) அதுகொண்டு (துப்து அன்ஹூ) நான் தௌபாச்செய்து மீண்டேன் (வதபற்றஹ்து அன்குல்லிதீனின் சிவாதீனில் இஸ்லாமி) இஸ்லாமுடைய தீனைத் தவிர மற்றும் தீனடங்கலை விட்டும் நான் நீங்கினவனா யிருக்கிறேன், (வஅஸ்லம்து) நானிஸ்லாமாகினேன், (வஅக்கூலு) நான் சொல்லுகிறேன், லாஇலாஹ இல்லல்லாஹூ முஹம்மதுர் றசூலுல்லாஹி யென்பதாம்.

முற்றிற்று.

---

தெளிவான ஈமானாகிறது, அல்லாஹூ தஆலா ஒருவனென்றும் மலாயிக்கத்துகளுண் டென்றும், நபிமார்கள் நிச்சயமென்றும், வேதம் உண்மை யென்றும் முடிவு நாளுண்டாமென்றும், அந்நாளில் இறந்தடங்கிய சகல வுயிர்ப்புகளையும் அல்லாஹூ தஆலா தனதுத்தரவினா லெழுப்பிக் கேள்வி கேட்டுக் கணக்குப் பார்த்து நன்மை செய்தவர்களைச் சொர்க்கத்திலும், தின்மை செய்தவர்களை நரகத்திலும் புகுதி விப்பானென்றும் உறுதி கொள்வனவாகிய ஆறு காரியங்களாம். அவ்வாறு காரியங்களான அறபு வாக்கியங்களையும் பொருளுடனே தனித்தனி விளக்கமாகச் சொல்லுகின்றனம்.

---

## ஸிபத்துல் ஈமான்.

ஆமன்து பில்லாஹி வமலாயிக்கத்திஹி வக்குத்துபிஹி வறுஸுலிஹி வல்யௌமில் ஆகிரி, வல்கதிரிகைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹித் தஆலா வல்பஃதிபஃதல் மௌத் ஹக்கு லாஇலாஹ இல்லல்லாஹூ முஹம்மதுர் றசூலுல்லாஹி.

## ஈமானில் ஆறுகாரியங்கள் பறுலாயிருக்கும்.

அவ்வாறு காரியங்கள் 1-வது பறுலாகிறது (ஆமன்துபில் லாஹி) அல்லாஹுத் தஆலாவாகிறவன் எல்லாப் படைப்புகளையும் படைத்து இரணம் கொடுக்கிற பெரியநாயன். அவன் முன்னுள்ள வன், துவக்க மில்லாதவன், பின்னுள்ளவன், முடிவில்லாதவன், குறிப்பில்லாதவன், ஒப்புவமை யில்லாதவன், தப்பில்லாதவன் வணியனுவான், தாய் தகப்பனில்லாதவன், பிறப்பில்லாதவன், பெறுதவன், ஊன், உறக்கம், மோகம், தாகம், மையலிவைகளில் லாதவன், அவனுடைய ஸிபத்தாகிறது தன் ஹயாத்துக்கொண்டு ஹயாத்துள்ளவன் உயிர்கொண்டல்ல, தன் நாட்டங்கொண்டு நாட்டமுள்ளவன் கல்புகொண்டல்ல, தன் சக்திகொண்டு சக்தி யுள்ளவன், மற்ற வஸ்துவைக்கொண்டல்ல, தன் கேள்வி கொண்டு கேட்கிறவன் செவிகொண்டல்ல, தன் பார்வை கொண்டு பார்க் கிறவன் கண்கொண்டல்ல, தன் பேச்சுக் கொண்டு பேசுகிறவன் நாவுகொண்டல்ல, கொடை கொடுக்கிறவன் கைகொண்டல்ல, அவனுடைய செயலாகிறது உண்டாக்கவும், அழிக்கவும், ஹயாத் தாக்கவும் தத்துவமுள்ளவ னென்றும் நானறிந்து ஈமான் கொண் டேனென்று முறுதி கொள்வதாம்.

2-வது பறுலாகிறது (வமலா இகத்திஹி) மலக்குகள் யா வரும் அல்லாஹுத் தஆலாவுடைய படைப்பென்றும், அவ னுடைய அடியார்களென்றும், அவனுடைய ஏவலுக்கு மாறு செய்யாதவர்களென்றும், அவர்களுக்குத் தாய் தகப்பனில்லை யென்றும், அவர்கள் வயிற்றுசை, அபத்தாசை இவைகளை விட்டுத் தூரம்பட்டவர்களென்றும், அவர்களுக்கு அடிதொடுத்து முடி வரைக்கும் நாவும் இறகு மிருக்குமென்றும், இன்னுமவர்களிற் சிலமலக்குகளை நூறென்னும் ஒளிவினலே படைத்தான், சில மலக்குகளை நெருப்பினலே படைத்தான் இவ்விதத்திலுள்ள மலக்குகள் எண்ணத்திலடங்காத பேர்களுண்டு. அவர்களிலே தலைமையான மலக்குகள் ஜிபரீலென்றும் மீக்காயிலென்றும், இசுறுபீலென்றும், இசுறயீலென்றும் நான்கு பேர்களுமுண்டு. அதில் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் மண்ணுக்கு ராஜாவாகவும் அல்லாஹுத் தஆலாவுக்கும், றசூல்மார்களுக்கு மிடையிலே வஹிகொண்டு வருகிறவர் களாகவுமிருக்கும். அப்படியவர்கள் இந்த வுலகத்தில் வஹிகொண்டு வந்தது, பாவா ஆதம் அலைஹிஸ்

ஸலாமவர்களுக்கு 10-தடவை, நூஹு அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு 23-தடவை, இபுறுஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு 4-தடவை, மூஸா அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு 4-தடவை, இன்னும் மூஸா அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு 400-தடவை, ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு 32-விசை, முஹம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு 2400-தடவை யாயிருக்கும். இப்படி வந்ததில் குற்ஆன் ஆயத்துகள் 5666-ஆயத்துகளையுங் கொண்டி ருக்கிறார்கள். இன்னும் வருஷந்தோரும் அல்லாஹுத் தஆலா ஏவுங் காலமெல்லாம் போவார், ஓடுக்கத்து நாளுக்கு முன்னுள்ள நன்மைகளைக் கொண்டு போவதற்காக வருவார்களென்றும்.

மீக்காயீல் அலைஹிஸ்ஸலா மவர்களாகிறவர்கள் மழைக்கு ராஜாவாகவும் படைக்கப்பட்ட வஸ்துக்களடங்கலுக்கும் இரணங் கொடுக்கப் பட்டவர்களென்றும் இசுறாபீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் காற்றுக்கு ராஜாவாகவும் இரண்டு சூறாதுவார். அதில் முந்தின சூறுகொண்டு ஆலத்திலுள்ள உயிர் பிராணிகளடங்கலும் ஹயாத்தாயிருக்கிற தெல்லாம் மௌத்தாகிப் போகும். அப்பால் நாற்பது வருஷத்திற்குப் பின்னர் இரண்டாம் சூறாதப்படும். அதுகொண்டு மௌத்தாகினவை களடங்கலும் ஹயாத்தாகிப் போகுமென்றும்.

இஸ்றாயீல் அலைஹிஸ் ஸலாமவர்களாகிறவர்கள் நெருப்புக்கு ராஜரென்றும், அல்லாஹுத் தஆலாவுடைய ஏவல்கொண்டு மலக்குகளுடைய ஹயாத்துகளையும், மற்றப் படைப்புகளின் ஹயாத்துகளையும், மற்றப் படைப்புகளின் ஹயாத்தடங்கலையும் அவையவைகளுடைய வீதப்படிக்கு வாங்குவார் களென்றும்.

அதில் மலக்குகளுயிர்களைத் தலைப்புறத்தாலும், முஸ்லிமீன் களுயிர்களை முகத்தின் புறத்தாலும், காபிரீன்களுயிர்களை முதுகின்புறத்தாலும், ஜின்களுயிர்களைக் காலின்புறத்தாலும் வாங்கப்படு மென்றும், மலக்குகளுக்கு அதாபும், கேள்வியு மில்லையென்றும் திடனாக நானறிந்து ஈமான் கொண்டேனென்று முறுதி கொள்வதாம்.

3-வது பறுலாகிறது (வுஜுத்துபிஹி) நபிமார்கள் பேரிலே இறங்கின வேதங்கள் நான்கு, சுஹ்புகள் நூறுமுண்மையென்றும் அவைகள் அல்லாஹுதஆலாவுடைய திருவசனமாயும், கலங்கமில்லாததாயும் படைக்கப்படாததாயுமிருக்கு மென்றும் இன்னுமொருக் கவ்லின்படி சுஹ்புகள் நூற்றிருபதாயிருக்கும். அதில் 50-சுஹ்புகள் ஷீது அலைஹிஸ்ஸலா மவர்களுக்கும் 30-சுஹ்புகள் இதுரீஸ் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கும், 2-சுஹ்புகள் இபுறாஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கும், இன்னுமொரு கவ்லின்படி இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாமவர் களுக்கும் பத்து சுஹ்புகளென்றும் வருகிறது.

வேதம் நான்கில் தௌறாத்து வேதம் அப்றானிப்பாஷையில் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும், சபூர் வேதம் யூனானி பாஷையில் தாவூது அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும், இன்ஜீல் வேதம் சுரியானிப்பாஷையில் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும், புறுக்கான் வேதம் அறபுப்பாஷையில் ஹலறத்து முஹம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்குமாக இறங்கினதென்றும் புறுக்கான் வேதத்தைத்தவிர மற்ற வேதங்க ளெல்லாம் மாற்றப்பட்டுப் போனதென்றும், புறுக்கான் வேத மாத்திரம் கியாமநாள் பரியந்தமு மாற்றப்படுகிறதில்லை. அதின் படியே அமல் செய்ய வேண்டுமென்றும் நான் திடனாக அறிந்து ஈமான் கொண்டேனென்று முறுதிகொள்வதாம்.

4-வது பறுலாகிறது (வறுஸுலிஹி) அல்லாஹுதஆலா யாத்திரையாக்கிய நபிமார்களடங்கலு முண்மை யென்றும் அவர்களிற் றுவக்கமாய் முந்தினநபி ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்கள், கடைசியாய்ப் பிந்தின ஒடுக்கத்து நபிமார்களெல்லாம் மானிடர்களில் நன்மார்க்கங் கொண்டனுப்பிவிக்கப் பட்டபேர்க ளென்றும் அவர்கள் பெரும்பாவம் சிறு பாவங்களை விட்டுங் கடுங்காவல் பெற்ற பேர்களென்றும் நபிமார்களுடைய எண் குறிப்பில்லை யென்கினும் ஒரு கவ்லின்படி இலட்சத்திருபத்து நான்காயிரம் நபிமார்கள், அதிலே தெரிந்தபேர்கள் முந்நூற்றுப் பதின்மூன்று முறுஸலீன்கள், அதிற்றெரிந்தவர்கள் ஆறு பேர்கள், அவ்வாறு பேர்களாகிறது ஆதம் ஸபீயுல்லா, இபுறாஹீம் கலீலுல்லா, மூஸாகலீமுல்லா, தாவூத் கலீபதுல்லா, ஈஸா றூஹுல்லா முஹம்மது றசூலுல்லா வென்றும் இவ்விதத்திலுள்ள நபிமார்கள் அவலியாக்கள் மலக்குகள் மற்றப் படைப்புகள் எல்லாத்தையும்விட ஏற்றமானவர்கள் முஹம்மது

ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்க ளென்றும் நான் திடனாக அறிந்து ஈமான் கொண்டேனென்று முறுதி கொள்வதாம்.

5-வது பறுலாகிறது (வல்யௌமில்ஆகிரி) கபறுடைய கேள்விக்குப்பின் ஒடுக்கமென்னும் கியாமத்துநாள் திடனாக வருமென்றும் அந்நாளில் அல்லாஹுதஆலா கல்க்குகளடங் கலையும் ஹயாத்தாக்கி யெழுப்பி மஹ்ஷறென்னும் மைதான வெளியிலே நிறுத்தித் தன்னுடைய நெறிநீதிகொண்டு கணக்குக் கேள்விகேட்டு ஹுக்கும் செய்வானென்றும் அதிலே, முஃமீ னென்னும் ஸாலிஹானபேர்களைத் தன்னுடைய நன்றிகொண்டு சொர்க்கம் புகுத்தி வைப்பான், காபிர்களைத் தன்னுடைய கோபங்கொண்டு நரகம் புகுத்தி வைப்பானென்றும், தௌபாச் செய்யாமல் ஈமானுடன் மௌத்தாகிப்போன பாஸிக்கான பாவ தாரிகளைப் பிழைபொருத்துச் சொர்க்கம் புகுத்திவைத்தலுமாம். அப்படிச் செய்தாலும் ஊடூழிகாலம் நரகத்திற் போடுகிறதில்லை. அவரவர்கள் செய்தபாவத்திற்குத் தக்கபடி அதாபு செய்யப் படுமெனறும் மீஸானென்கிற திராசிலே நன்மை தீமைகளை நிறுக்கிறதும், ஸிறுத்தல் முஸ்த்தக்கிமென்ற பாலமாகிறது வாளினுங்கூர்மை, மயிரினும் நேர்மை, முப்பதினாயிரம் வருஷத் தடிப்பாட்டுத்தூரம் அதின்மேல் நடக்கிறதும் நபி நாயகம் முஹம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் மன்றாடுகிறதும், வாய்க்கு முத்திரை போடுகிறதும், கண், காது முதலிய உறுப்புகளைப் பேசவைக்கிறதும், அந்தக் கியாமத்துடைய நாளினுண்டாகும் அமளியடங்கலும் உண்மையா யிருக்குமென்றும் நான் திடனாக அறிந்து ஈமான் கொண்டே னென்று முறுதி கொள்வதாம்.

6-வது பறுலாகிறது (வல்கதிரிகைரிஹி வஷர்ரிஹி மினல் லாஹி தஆலா வல்பஃதிபஃதல் மௌத்தி) ஆலத்திலுள்ள பேர்கள் நடக்கும் செயல்கள், சொற்கள், நன்மை, தீமை, ஈமான், குபா, பணிவிடை, பாவமுதலிய சகலவைகளும் அல்லாஹு தஆலாவுடைய கற்பனைகொண்டும் அவனுடைய கல்க்கொண்டும் அவனுடைய கட்டளைகொண்டுமா யிருக்கு மென்றும் அல்லாஹுதஆலா தன்னுடைய நாட்டங்கொண்டு அடியார்கள் செய்யும் செயல்களைப் படைக்கிறவன், அடியார்கள் அச் செயல்களைப் பரிமாறுகிறவர்கள், ஆனபோதே நன்மைக்கு அவனுடைய பொருத்தமும், உதவியு முண்டு, தீமைக்கு அவனுடைய பொருத்த மற்றுப் பொருத்தக்கேடுண்டு; ஆகையால்

நன்மை செய்தால் தவாபும் தீமை செய்தால் அதாபுங்கிடைக்கு மென்றும், திடனாக நானறிந்து ஈமான் கொண்டேனென்று முறுதி கொள்வதாம்.

முற்றிற்று.

---

## இஸ்லாமார்க்கத்தி லெடுக்கவேண்டிய பறுலான காரியங்கள் ஐந்தாயிருக்கும்.

---

1-வது பறுலாகியது (கலிமா ஷஹாதத்து) அதைச் சொல்லிப் பொருளையறிந் துறுதிகொள்வதாம்.

2-வது பறுலாகிறது (தொழுகை) அத்தொழுகையாகிறது நாளொன்றிற்கு ஐந்து நேரந் தொழவேண்டுமென்று முறுதி கொள்வதுடனே அதின் பறுலு, ஷறுத்து, வாஜிபு, சுன்னத்து, முஸ்தஹபு முதலானவைகளை நன்றாக அறிந்து தொழுகிறதாம்.

3-வது பறுலாகிறது (ஸக்காத்து) அதாகிறது இருபது களஞ்சி பொன்னுண்டா யிருக்குமாகில் ஆண்டொன்றிற்கு அரைக்களஞ்சிப் பொன்னும், காசானது இருநூறு திருக முண்டாயிருக்குமாகில், ஆண்டொன்றிற்கு ஐந்து திருகமும். அதாவது சுமார் கால்ரூபாயும் ஸக்காத்துக் கொடுக்கவேண்டு மென்றும், ஐந்து ஒட்டகமுண்டா யிருக்கில் ஆண்டொன்றிற்கு ஒரு ஆடும், பத்து ஒட்டகமுண்டா யிருக்கில் ஆண்டொன்றிற்கு இரண்டு ஆடும், பதினைந்து ஒட்டகமுண்டா யிருக்கில் ஆண் டொன்றிற்கு மூன்று ஆடும், இருபது ஒட்டகமுண்டா யிருக்கில் ஆண்டொன்றிற்கு நாலு ஆடும், இருபத்தைந்து ஒட்டகமுண்டா யிருக்கில் ஆண்டொன்றிற்கு இரண்டு வயதுப் பருவத்தை யுடைய ஓர் ஒட்டகக்குட்டியும், முப்பது பசுமாடுக ளுண்டா யிருக்கில் இரண்டு வயதுப் பருவத்தையுடைய ஒரு கன்றுக் குட்டியும், நாற்பது ஆடுகளுண்டாயிருக்கில் ஒரு ஆடும் கொடுக்க வேண்டும் இவ்விதமாக ஆண்டிற்கொரு தரம் ஸக்காத்துக் கொடுப்பதில் அதிலுள்ள பறுலு ஷறுத்து, வாஜிபு ஸுன்னத்து முஸ்தஹபு முதலான விதிகளையறிந்து கொடுக்கிறது மிகவு மேற்ற மென்றும் நானீமான் கொண்டேனென்று முறுதி கொள்வதாம்.

4-வது பறுலாகிறது (நோன்பு) அதாகிறது வருடந்தோறும் றமலான் மாதம் முப்பது நோன்பு பிடிக்கவேண்டும் அப்படி நோன்பு பிடிப்பதில் அதிலுள்ள பறுலு, ஷறுத்து வாஜிபு ஸுன்னத்து, முஸ்தஹபு, முதலான விதிகளையுமறிந்து நோன்பு பிடிக்க வேண்டுமென்றறிந்து நான் ஈமான் கொண்டேனென்று முறுதி கொள்வதாம்.

5-வது பறுலாகிறது (ஹஜ்ஜு) அதாகிறது மக்கத்திற்குப் போய் ஹஜ்ஜு செய்கிறதற்குப் போக வழித்துணையும், போக வரத் தன்செலவுக்கும் தனதுபரிகை யிலிருக்கிற பெண்சாதி, பிள்ளைகளுடைய செலவுக்கும் பொருட்சக்தி யுமுண்டாயிருக்கில் மக்கத்திற்போய் ஒரு ஹஜ்ஜு செய்ய வேண்டு மென்றும் பெண் பிள்ளைகளுக்கு மிகுந்த ஷறுத்துண்டாகி அவள் ஹஜ்ஜுக்குபோக காடினல் புருடனுகிலும், அல்லது தகப்பனுகிலும், அல்லது மகனுகிலும், அல்லது அண்ணன் தம்பியாகிலும், அல்லது சிற்றப்பன் பெரியப்பனுகிலும் அவள் கூட இருக்க வேணுமென்றும் நானறிந்து ஈமான் கொண்டேனென்று உறுதிகொள்வதாம்.

இவ்விதம் ஈமானில் ஆறுபறுலும், இஸ்லாத்திலைந்து பறுலுமாகிய பதினேறு பறுலுமறிந்து அதன்படி அமல் செய்கிறது அல்லாஹு தஆலாவுடைய அடியார்கள் நபி ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய மக்களும், முஹம்மது முஸ்தபா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய உம்மத்துகளுமான ஆண், பெண் அனைவர்கள் பேரிலும் விதித்த பறுலாயிருக்கும், நானு மென்பேரில் விதியாக்கிக் கொண்டேன். இவ்விதத்தில் ஐந்தும் ஆறும், பதினேறு காரியங்களையும் நன்ருயறிந்து நாவு கொண்டு விண்ணப்பஞ் செய்து இருதயத்திலே யீமானென்னு முத்திகொண்டு நான் முஃமீனுகிற இஸ்லாமாகினேனென்று முறுதி கொள்வதாம்.

ஹக்கு லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி.

முற்றிற்று.

இஃது

## ஈமானிலையையும் இஸ்லாத்தின் பூணிப்பையும் அறிகிறதாயிருக்கும்

## ஹதீது.

உமறிபுனு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டு முஸ்லிமென்பவர்கள் பேசிவருகிறார்கள். அஃது யாதெனில் உமறிபுனு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள்:— ஒருநாள் இருலோகத்திற்கும் காரணக் குருவாகிய நபி முஹம்மது·முஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடனே நாங்கள் சூழ்ந்திருக்கும்போது ஒரு மனிதன் துப்புரவான வெள்ளைப் புடவையை யுடுத்தினவராயும் உடலிலுள்ள ரோமங்களெல்லாங் கருமை யதிகமா யுள்ளவராயும் வந்து, நபிநாயகத்திற்கு முன்னிலே சென்று அவர்களுடைய முட்டுக்காலோடு தம்முடைய முட்டுக்காலைச் சேர்த்துத் தம்முடைய கையையு மவர்களுடைய துடையின்மேலே வைத்திருந்து கொண்டு அண்ணாந்து முகத்தைப் பார்த்து, வள்ளலாகிய முஹமமது நபியே! தாங்கள் தீனிலிஸ்லாமென்னு மார்க்கத்தை யெனக்குச் சொல்லித் தரவேண்டு மென்று கேட்டார்.

அதுகேட்டு நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள அம்மனிதனைப் பார்த்து, நீர்கேட்ட தீனிலிஸ்லா மார்க்க மாகிறது அல்லாஹு தஆலாவைக் கொண்டும், அவனுடைய றசூலைக்கொண்டும் ஈமான் கொள்கிறதும், நாளொன்றிற்கு ஐந்து நேரந் தொழுகிறதும், உண்டான திரவியங்களுக்கு கணக்குப்போலே ஸக்காத்துக் கொடுக்கிறதும், றமலான் மாதத்திலே முப்பது நோன்பு பிடிக்கிறதும வழிநடக்கச் சக்தியுண்டாயிருக்கில் மக்காவிலேயே போய் ஹஜ்ஜு செய்கிறதுமா யிருக்குமென்று சொன்னார்கள்.

அதுகேட்டந்த மனிதன் நபி நாயகமவர்களைப் பார்த்து முஹம்மதே! முஸ்தபாவே! நீங்கள் மிகவு முண்மை சொன்னீர்கள். இன்னும் ஈமானை யறிவித்துத் தரவேண்டு மென்று கேட்டார். அதற்கு நபிநாயகமவர்கள் அம்மனுடனைப்பார்த்து, ஓய் அறிவை யுடையவரே! நீர்கேட்ட ஈமானாகிறது அல்லாஹுத்

தஆலாவை விசுவதிக்கிறதும், அவனுடைய மலக்குகளை விசுவதிக்கிறதும், அவனை அனுப்பிவைத்த நபிமார்களை விசுவதிக்கிறதும், ஒடுக்கமாகிய கியாமநாளென்னும் முடிவுநாள் வருகிற துண்டென்று விசுவதிக்கிறதுமா யிருக்குமென்று சொன்னார்கள்.

அதுகேட்டந்த மனிதன் நபி நாயகமவர்களைப் பார்த்து, முத்தொளிவான முஹம்மதே! தாங்களுண்மை சொன்னீர்கள். இன்னும் நன்மையான காரியங்களைச் செல்லித் தரவேண்டுமென்று கேட்டார். அதற்கு நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அம்மனிதனை நோக்கித் தெளிவையுடையவரே! நீர்கேட்ட நன்மையான காரியங்களாகிறது அல்லாஹுத் தஆலாவுக்கு நீரடிமைப் பணிவிடை செய்கிறது, நீர் அவனைக்கண்டதுபோல அல்லது நீரவனைக்காணவில்லையானாலும், திட்டமாக அவன் உம்மைக் கண்டு கொண்டிருக்கிறு னென்று சொன்னார்கள்.

அதுகேட்ட அம்மனிதன் நபிகள் சிகாமணிகளாகியநாயகமே! கியாம நாளுண்டாகிறதைத் தொட்டு மெனக்கறிவியுங்க ளென்று கேட்டார். அதற்கு நபிநாயகமவர்கள் அம்மனிதனைப் பார்த்து, கியாம நாளுண்டாகிறதைப் பற்றிக் கேட்கிறதைக் காணக் கேட்கப்பட்டவர் மெத்த அறிந்தவரில்லை யென்று சொன்னார்கள். அப்போது அம்மனிதன் சந்தோஷமாய் நபிநாயக மவர்களைப் பார்த்து தாங்கள் கியாமநாளுடைய அடையாளங்களை யெனக்கறிவிக்க வேண்டுமென்று கேட்டார். அதற்கு நபிநாயகம் அம்மனிதனைப் பார்த்து அறிவுடையவரே! நீர் கேட்ட கியாம நாளுடைய அடையாள மாகிறது வெள்ளாட்டி நாச்சியாளைப் பெறுகிறதும் அதாவது பெற்றதாய் தகப்பனைக்கொண்டு மக்கள் வேலைசெய்கிறதும், ஆடு மாடுமேய்த்துத் திரிபவர்கள் காலுக்குச் செருப்பில்லாதவர்கள், மேலுக்குபோடத் துனியில்லாதவர்க ளிவர்களெல்லா முதலாளி மார்களாகி பெரிய மாளிகைகளைக் கட்டுவிக்கிறது மென்று சொன்னார்கள்.

இவ்விதம் நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொன்ன நஸீஹத்தை யம்மனிதன் கேட்டுப் புகழ்ந்துகொண்டு போய்விட்டார். அப்பால் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் அங்கிருந்த வுமறு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து, உமரே! இப்போதென்னிடத்தில் வந்திருந்து நஸீஹத்துக் கேட்டுக் கொண்டு

போன மனிதனை நீரின்னாரென்று தெரிவீராவென்று கேட்ட தற்கு உமறு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாவுக்கும், அல்லாவுடைய றசூலுக்குந் தெரியுமேயொழிய எனக்குத் தெரியாதென்று சொன்னார்கள்.

அதுகேட்டு நபி நாயகமவர்கள் உமறு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து, உமரே அம்மனிதனாகிறது ஜிபுரீலென்னும் மலக்காக இருக்கும். அவர் உங்களுடைய தீனைவுங்களுக்குப் படித்துக் கொடுக்கிறதற்காக வந்தார். ஆதலால் இஸ்லா மென்றதற்குப் பொருளாகிறது அல்லாஹு தஆலா ஏவின காரியங்களை யுண்மை கொள்கிறதும், அவன் விலக்கின காரியங்களை விலக்கிக் கொள்ளுகிறதுமா யிருக்குமென்று சொன்னார்கள். அதகேட்டு உமறு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மிகவும் மனமகிழ்ந்திருந்தார்கள் இந்தப்படிக்கு இறுஷது முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

ஆதலால் இவ்விதம் நபி நாயகமவர்கள் சொல்லிய பற்பல திருவாக்கியங்களைக் கொண்டு, ஒரு முஸ்லீமைப் பார்த்து ஒருவன், நீயிஸ்லாமா வென்று கேட்டாலதற்கு ஜவாபு அல்ஹம்து லில்லாஹி நான் இஸ்லாமா யிருக்கிறேனென்று சொல்லவேண்டும். 'அல்ஹம்து லில்லாஹ்' பொருளென்ன வென்று கேட்டால் அதற்கு ஜவாபு எல்லாப்புகழும் புகழ்ச்சிகளடங்கலும், அல்லாஹு தஆலா வொருவனுக்கா யிருக்கும். அவன் செய்த நிஃமத்திற்காக நானவனை ஷுக்றுச் செய்கிறேனென்பதாயிருக்கும். நீ யாருடைய அடியானென்று கேட்டா லதற்கு ஜவாபு அல்லாஹு தஆலாவுடைய அடியானென்று சொல்லவேண்டும். நீயாருடைய மக்களிலுள்ளவ னென்று கேட்டாலதற்கு ஜவாபு, நான் நபி ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய மக்களிலுள்ளவனென்று சொல்லவேண்டும். நீயாருடைய கோத்திரத் திலுள்ளவனென்று கேட்டால், அதற்கு ஜவாபு நான் நபி இபுறூஹீம் அலைஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களுடைய கோத்திரத்திலுள்ளவனென்று சொல்லவேண்டும். நீயார் உம்மத்திலுள்ளவ னென்று கேட்டால் அதற்கு ஜவாபு நான் முஹம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய வும்மத்தி லுள்ளவனென்று சொல்லவேண்டும். நீயாருடைய தோழனென்று கேட்டால் அதற்கு ஜவாப் நானாகிறது நான்குயார்களுடைய தோழனென்று சொல்லவேண்டும்.

அந்த நான்கு யார்கள் யார் யாரென்று கேட்டலதற்கு ஜவாபு முதலாவது அபூபக்கர் ஸித்தீக்கிபுனு அபீகுஹாபா றலியல் லாஹு அன்ஹு அவர்களென்றும், இரண்டாவது உமறிப்னு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்றும், மூன்றாவது உதுமானிபுனு அப்பான் றலியல்லாஹு அன்ஹு அவர்க ளென்றும், நான்காவது அலியிபுனு அபீத்தாலிப் றலியல்லாஹு அன்ஹு அவர்களென்றுஞ் சொல்லவேண்டும். நீ எந்த மது ஹபிலுள்ளவ னென்று கேட்டால் அதற்கு ஜவாபு நான் ஹனபி மதுஹபிலுள்ளவ னென்றும் சொல்ல வேண்டும். மதுஹபுக ளெத்தனை யென்று கேட்டாலதற்கு ஜவாபு மதுஹபுகள் நான்கென்று சொல்லவேண்டும். அந்நான்கு மதுஹபுகளுக்கும் விபரமென்ன வென்று கேட்டால், அதற்கு ஜவாபு, முதலாவது ஹனபி மதுஹபு. அதற்கு இமாம் அபூஹனீபா நுஃமானிபுனு தாபித் றலியல்லாஹு அன்ஹு அவர்கள். இரண்டாவது மாலிக்கு மதுஹபு, அதற்கு இமாம் மாலிக்புனு அஹமது றலியல் லாஹு அன்ஹு அவர்கள். மூன்றாவது ஷாபிஈ மதுஹபு அதற்கு இமாம் முஹம்மதிபுனு இதுரீஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள். நான்காவது ஹம்பலி மதுஹபு, அதற்கு இமாம் அஹ்மதிபுனு ஹம்பல் றலியல்லாஹு அன்ஹு அவர்களுமா யிருக்கு, என்று சொல்ல வேண்டும்.

ஓ முஸ்லிமாகிய எனதுடன் பிறந்தானே! உன்னைப் பார்த் தொருவன் நீ எப்போது இஸ்லாமாகினை யென்று கேட்டா லதற்கு ஜவாபு நான் ரோசுமீதாக்களுடைய நாளிலே இஸ்லா மாகினே னென்று சொல். அந்த ரோசு மீதாக்களுடைய நாளாகிற தெந்த நாளென்று கேட்டா லதற்கு ஜவாபு அல்லாஹு தஆலா தன் னுடைய குதறத்தினாலே அறுவாஹுகளை யெல்லாம் படைத்து அவைகளை ஹாலிருக்கி அவைகளைப் பார்த்து நானல்லவா வுங்களை யெல்லாம் படைத்தாள்கிற நாயனென்று கேட்டபோது அவ்வறு வாஹுகளெல்லாம் நீயே எங்களுடைய நாயனென்று சொல்லிக் கபூல்ச் செய்த நாளையிலே நான் இஸ்லாமாகினே னென்று சொல்.

இன்னும் ஈமானுடைய தலையென்ன, ஈமானுடைய கல் பென்ன, ஈமானுடைய சரீரமென்ன, ஈமானுடைய பேச்சென்ன ஈமானுடைய ஒளிவென்ன, ஈமானுடைய இருளென்ன, ஈமா னுடைய ருசியென்ன, ஈமானுடைய வளமை யென்ன, ஈமா னுடைய நெறியென்ன, ஈமானுடைய வழியென்ன, ஈமானுடைய

விதையென்ன, ஈமானுடைய பழமென்ன, ஈமானுடைய இலை யென்ன, ஈமானுடைய தோலென்ன, ஈமானுடைய மூளையென்ன, ஈமானுடைய வொப்பென்ன, ஈமானுடைய வீடென்ன, ஈமானுடைய வைப்பென்னவென்று கேட்டாலதற்கு ஜவாபு:—

ஈமானுடைய தலையாகிறது துப்புரவானகலிமா (லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹ்) யென்றும், ஈமானுடைய கல்பாகிறது குறுஆனையோதுகிறதென்றும், ஈமானுடைய சரீரமாகிறது ஐந்து வக்துத் தொழுகையைத் தொழுகிறதென்றும் ஈமானுடைய பேச்சாகிறது திக்றுகளை மிகுதமாய்ச் செய்கிற தென்றும் ஈமானுடைய ஒளிவாகிறது மெய்பேசுகிற தென்றும், ஈமானுடைய இருளாகிறது பொய்சொல்லுகிற தென்றும் ஈமானுடைய ருசியாகிறது துப்புரவாக இருக்கிறதென்றும், ஈமானுடைய வளமையாகிறது ஸக்காத்துக் கொடுக்கிறதென்றும், ஈமானுடைய நெறியாகிறது சொர்க்கத்தைக்கொண்டு கொண்டாட வைத்து நரகத்தைக்கொண்டு பயப்பட்டிருக்கிறதென்றும், ஈமானுடைய வழியாகிறது ஹலாலை ஹலாலென்றும், ஹறுமை ஹறுமென்றும் அறிகிறதென்றும், ஈமானுடைய விதையாகிறது இல்மைப்படிக்கிறதென்றும், ஈமானுடைய தோலாகிறது வெட்கம் ஹயாவென்றும், ஈமானுடைய மூளையாகிறது துஆக் கேட்கிற தென்றும், ஈமானுடைய கொப்பாகிறது 'குல்ஹு வல்லாஹு அஹதை ஓதுகிறதென்றும் ஈமானுடைய வீடாகிறது முஃமினான பேர்களுடைய கல்பென்றும் ஈமானுடைய வைப்பாகிறது நபில் தொழுகைகளைத் தொழுகிறதென்றும் நீ சொல்.

இன்னும் ஈமான் உன்னிலேயோ, அல்லது நீ ஈமானிலேயோ வென்று கேட்டாலதற்கு ஜவாபு ஈமான் என்னிலேயென்று சொல். இன்னும் ஈமான் கொண்ட ஒருவன் ஈமானுகிறது படைக்கப்பட்டதா, படைக்கபடாததாவென்று கேட்டாலதற்கு ஜாவாபு, ஈமானுகிறது நாயனுடைய ஹயாத்தாயிருக்கும். அந்த ஹயாத்திலே அடியார்களுடைய நாவிலே சொல்லுண்டாகிறதும், கல்பிலே யுறுதியுண்டாகிறதுமாம். ஆதலால் அது அல்லாஹு தஆலாவுடைய நன்கொடையாயிருக்கும். இவ்விதங்கொண்டதால், ஈமானனது படைக்கப்பட்ட வஸ்துவல்ல என்கிலும், அடியார்களுடைய நாவு கொண்டு சொல்கிறதும் கல்புகொண்டு குதி வைக்

கிறதும் அடியார்களுடைய செயலா யிருப்பதால் அது படைக்கப் பட்டதாயிருக்குமென்று சொல்

இனி ஈமான் பறுலா, ஸுன்னத்தாவென்று கேட்டாலதற்கு ஜவாபு, ஈமானுகிறது இஸ்லாமான பேர்களுக்கு ஸுன்னத்தும், காபிரான பேர்களுக்குப் பறுலுமாயிருக்கு மென்றுசொல். ஈமான் எப்படி யிருக்குமென்று கேட்டாலதற்கு ஜவாபு, ஈமானுகிறது ஒளிவாயிருக்கும். அந்த ஒளிவாகிறது முஃமினானபேர்களுடைய கல்புக்குள்ளே அல்லாஹு தஆலாவுடைய கற்பனை கொண்டும், வரிசைகொண்டும் தரிக்குமென்று நீ சொல். அவ்வொளிவு எவ்விதங் கிடைக்குமென்று கேட்டால் அதற்கு ஜவாபு நாயனை யொரு கோலமின்றியே அவனொருத்தனென் றறிகிற மட்டிலுங் கிடைக்கு மென்று சொல்.

ஈமானுகிறது எத்தனை வகைப்படுமென்று கேட்டாலதற்கு ஜவாபு, ஐந்து வகைப்படுமென்று நீ சொல். அவ்வைந்து வகைகளு மென்ன வென்று கேட்டாலதற்கு ஜவாபு, 1-வது தொடர்பிடியான ஈமான், அது மலாயிக்கத்துகளுடைய ஈமான், 2-வது காவலாக்கப் பட்ட ஈமான், அது நபிமார்களுடைய ஈமான், 3வது கபூல் செய் யப்பட்ட ஈமான், அது முஃமினான பேர்களுடைய ஈமான், 4-வது தட்டப்பட்ட ஈமான், அது முனபிக்கின் களுடைய ஈமானென்று நீர் சொல்.

நாயனைக்கொண்டு நீ யெப்படி ஈமான் கொண்டாயென்று கேட்டாலதற்கு ஜவாபு, அல்லாஹு தஆலா இணை துணை யில்லா தவன், கண்ணில்லாது காண்கும் வல்லவன், காதிலில்லாது கேட்கும் வல்லவனென்று நான் ஈமான் கொண்டேனென்று நீ சொல். மலக்குகளைக் கொண்டெப்படி ஈமான் கொண்டாயென்று கேட் டாலதற்குஜவாபு, மலக்குகளாகிறவர்கள் பலவகுப்பா யிருப்பார்கள் அவர்களிலேசிலர் அறுஷைக் சுமக்கிறவர்களும் சிலர்கள் றூஹானி யானவர்களும் சிலர்கள் அரூபியானவர்களுமா யிருப்பார்கள். அவர்களெலோர்களும் அல்லாஹுத் தஆலாவுடைய அடியார் களும், ஆணல்லாதவர்களும், பெண்ணல்லாதவர்களும், மோக மில்லாதவர்களுமா யிருப்பார்களென்று நான் ஈமான் கொண்டே னென்று நீ சொல்.

நபிமார்களளவிலே நாயன் எத்தனை கித்தாபுகளிறக்கினு னென்று கேட்டாலதற்கு ஜவாபு, நூற்றிருபது ஸுஹுபுகளையும், நான்கு வேதங்களையு மிறக்கினுனென்று நீ சொல். அவைகளையாரா ளவிலே யிறக்கப்பட்டதென்று கேட்டாலதற்கு ஜவாபு, பத்து ஸுஹ்புகள் நபி ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கும், ஐம்பது ஸுஹ்புகள் நபி ஷீது அலைஹிஸ்ஸலா மவர்களுக்கும், முப்பது ஸுஹ்புகள் நபி இதுரீஸ் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கும், இருபது ஸுஹ்புகள் நபி இப்ருஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கும, தௌ ரூத்து வேதம் நபி மூஸா அலைஹிஸ்ஸலா மவர்களுக்கும், ஸபூர் வேதம் நபி தாவூது அலைஹிஸ்ஸலா மவர்களுக்கும், இன்ஜீல் வேதம்நபி ஈசா அலைஹிஸ்ஸலா மவர்களுக்கும், புறுக்கான் வேதம் நபி நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்கு மிறக்கினுனென்று நீ சொல்.

எத்தனை நபிமார்களென்று ஈமான் கொண்டா யென்று கேட் டா லதற்கு ஜவாபு, நபிமார்களுடைய எண்ணங் குறிப்பில்லை, யென் கினும் ஒருகவ்லின் பிரகாரம் இலட்சத்திருபத்து நான்காயிரம் நபிமார்களென்றும், அதிலே தலைமைப்பட்டதை யுடையவர்கள் ஆறுபேர்களென்றும் நீ சொல் அந்த ஆறு பேர்களும் யாராரென்று கேட்டாலதற்கு ஜவாபு, ஆதம் நபி, நூஹு நபி, இபுருஹீம் நபி, மூசா நபி, ஈசா நபி, முஹம்மது நபியவர்க ளென்று நீசொல். கியாமத்து நாளை நீ எப்படி ஈமான் கொண்டா யென்று கேட்டா லதற்கு ஜவாபு அல்லாஹு தஆலா படைத்த படைப்புகளடங் கலையும் மௌத்தாக்குவான். அதில் நல்ல அமலாளிகள் சொர்க் கத்திலும், கெட்ட அமலாளிகள் நரகத்திலுமாகப் போய்ச் சேர்ந் திருப்பார்கள். அவர்களடங்கலையும் ஹயாத்தாக்கி மஹஷர் வெளி யிலே கூட்டங் கூட்டங்களாக நிறுத்திக் கணக்குக் கேள்வி கேட்டு நன்மை செய்தவர்களைச் சொர்க்கத்திலும், தீமை செய் தவர்களை நரகத்திலு மாக்குவானென்று காபிர்களை காலாகாலமும் நரகத்திலேயே போட்டெரிக்கப் படுமென்றும் நான் ஈமான் கொண் டேனென்று நீ சொல். இஸ்லாமும், காபிறுமெப்படியானதென்று கேட்டாலதற்கு ஜவாபு, அல்லாஹு தஆலா ஆதிகாலத்தில் எல்லா உயிர்களையும் படைத்து அவைகளுக்கு புத்தியையும், நினைப்பையுங்கொடுத்து நான்கு அணுகளாக நிறுத்தித் தனக்கு

ஸுஜூது செய்யச் சொன்னபோது அந்த அணிகளிலே முதலணி யுயிர்களும், இரண்டாவ தணியுயிர்களும் ஸுஜூது செய்தன. மூன்றாவதணி யுயிர்களும், நான்காவதணி யுயிர்களும் ஸுஜூது செய்யவில்லை.

ஆதலால் மறுபடியும் அல்லாஹு தஆலா அவ்வுயிர்களைப் பார்த்து ஸுஜூது செய்யச் சொன்னபோது முதலணி யுயிர்களும், மூன்றாவதணி யுயிர்களும் ஸுஜூது செய்தன. இரண்டாவதணி யுயிர்களும் நான்காவதணி யுயிர்களும் ஸுஜூது செய்யவில்லை. ஆகையாலிவ்விதத்தில் முதலணி யுயிர்க ளிரண்டுதரமும் ஸுஜூது செய்ததால் அவ்வுயிர்கள் இஸ்லாமானவர்களுடைய வயிற்றிலேயே பிறந்து இஸ்லாமாகவே யிருந்து மௌத்தாகுவார்கள். இரண்டாவதணி யுயிர்களாகிறது முதலிலே ஸுஜூது செய்து இரண்டாவது ஸுஜூது செய்யாததா லந்தவுயிர்கள் இஸ்லாமானவர்களுடைய வயிற்றிலே பிறந்து காபிராக இருந்து மௌத்தாவரர்கள்.

மூன்றாவதணி யுயிர்களாகிறது முதலிலே ஸுஜூது செய்யாதிருந்து இரண்டாவது ஸுஜூது செய்ததால் இவ்வுயிர்கள் காபிரானவர்கள் வயிற்றிலே பிறந்து இஸ்லாத்திலே வந்து இஸ்லாமாக இருந்து மௌத்தாகுவார்கள். நான்காவதணி யுயிர்களாகிறது இரண்டு தரமும் ஸுஜூது செய்யாததா லவ்வுயிர்கள் காபிரானவர்களுடைய வயிற்றிலே பிறந்து காபிராகவேயிருந்து இறப்பரென்று நீ சொல்.

இஸ்லாமானவர்கள் பேரிலே எத்தனை காரியங்கள் பறுலாக்கப்பட்டதென்று கேட்டாலதற்கு ஜவாபு, சுமார் 130 காரியங்கள் பறுலாக்கப்பட்டதென்று நீ சொல். அந்த நூற்றிமுப்பது காரியங்களென்ன வென்று கேட்டாலதற்கு ஜவாபு, நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய தலைமுறையிலே பறுலு 4, மதுஹபிலே பறுலு 4, இஸ்லாமார்க்கத்திலே பறுலு 5, ஸிபத்தில் ஈமானின் பறுலு 7, உலுவிலே பறுலு 4, தயம்மத்திலே பறுலு 2, குஸுலிலே பறுலு 3, தொழுகையின் நிய்யத்திலே பறுலு 6, தொழுகையின்வேளை யறிவதிலே பறுலு 5, தொழுகையினுடைய பறுலு 13, ஐந்துநேரத்துத்தொழுகையிலும்

பறுலு 17, றமலான் மாதத்திலே பறுலு 60, ஆகப்பறுலு நூற்றி முப்பதென்று நீ சொல்.

இந்த நூற்றிமுப்பது பறுலுகளின் விபரங்களை முன்னர் ஈமான், இஸ்லாத்திற் சொன்னதுபோக மற்றவைகளைப் பின்னர் அவ்வவ்விடங்களில் விளக்கமாகச் சொல்லப்படும். அல்லாஹு தஆலா எல்லோருக்கும் நன்மை செய்வானாகவும். ஆமீன் யாறப்பில் ஆலமீன்.

முற்றிற்று.

---

இஸ்லா மார்க்கத்தி லிரண்டாவது பறுலாகிறது தொழுகையா யிருக்கும். அந்தத் தொழுகையை விதியாகிய ஆக்கில், பாலிகான ஆண், பெண்க ளிருவகையாரும், தொடங்க முற்படச் செய்யவேண்டிய சரீரசுத்தி யிரண்டு வகைப்படும். அந்த இரண்டு வகைகளாவன, பெரிய சுத்தியென்றும், சிறிய சுத்தியென்றுஞ் சொல்லப்படும். அதிலே பெரிய சுத்தியாகிறது சரீரமுழுமையும் சுத்தியாகும்படி முழுகிற முழுக்காயிருக்கும். சிறிய சுத்தியாகிறது, முகம், கை, கால், தலை இவைகளைச் சுத்தியாகும்படி கழுவுகிற உலூவா யிருக்கும்.

## முழுக்காகிறது.

பறுலு முழுக்கென்றும், வாஜிபு முழுக்கென்றும், ஸுன்னத்து முழுக்கென்றும் முஸ்தஹப்பு முழுக்கென்றும் நான்கு வகைப்படும். அவைகளிலே பறுலு முழுக்கின் விபரம்:—

---

## பறுலு முழுக்காகியது 5-வகையாம்.

1-வது ஆணும், பெண்ணும் வரையளவு குறிமறையைச் சேர்க்கை செய்தாலும், 2-வது பெண்ணைக்கண்டு ஆணுக்காகிலும் அல்லது ஆணைக்கண்டு பெண்ணுக்காகிலும் மோகமுண்டாகி மணி வெளிப்பட்டாலும், 3-வது நித்திரையில் ஷைத்தான் ஹரக்கத்தாகி அடையாளத்தைக் கண்டாலும். 4-வது பெண்ணானவள்

மாத மாதம் ஷைத்தென்னும் மாதவிடாயாகிப் பற்றற்றுப்போ னாலும், 5-வது நிபர்ஸென்னும் பேறுகாலத்துடக்கு நின்ற பின் னாலும் முழுகுவது விதியாயிருக்கும். ஆக இவ்வைந்தும் பறு லான முழுக்குகளாகும்.

---

## வாஜிபு முழுக்காகிறது 2.வகையாம்,

1-வது மையித்தை முழுக்காட்டுவதும், 2-வது பாலிக்கான காபிறுகள் முழுக்குடனே இஸ்லாத்தில் வந்தால் அவர்களை முழுக் காட்டுவதும் ஆக இவ்விரண்டும் வாஜிபான முழுக்காம்.

---

## ஸுன்னத்து முழுக்காகிறது 4-வகையாம்.

1வது ஜும்ஆவுடைய நாட்பகலையில் முழுகிறதும், 2-வது வருஷத்தில் ஈதென்னு மிரண்டு பெருநாட்களில் முழுகிறதும், 3-வது மக்கத்தில் ஹஜ்ஜு செய்கிறதற்கு இஹ்றாம் கட்டும்போது முழுகிறதும், 4-வது அறபாவில் முழுகிறதும் ஆக இந்நான்கும் ஸுன்னத்தான முழுக்காம்.

---

## முஸ்த்தஹப்பு முழுக்காகிறது 3-வகையாம்.

1வது தலைமுடி யிறக்கினபோது முழுகிறதும், 2-வது ஆண் பெண்ணிவர்கள் வயதைக் கொண்டு பாலிக்கானபோது முழு கிறதும், 3-வது காபிர் துப்புரவா யிருக்கிற ஹாலில் இஸ்லாத்தில் வந்தபோது முழுகிறதும் ஆக இந்த மூன்றும் முஸ்த்தஹப்பான முழுக்காம்.

---

## முழுக்கில் தறுத்தீபுகள்.

முழுக்கில் தறுத்தீப்புகளாகிறது முதலிலே இஸ்தின்ஜாத் தலத்தைச் சுத்தி செய்கிறதும் பின்னர் கைகளை யிரண்டு மணிக் கட்டளவுங் கழுவுகிறதும், பின்பு பற்களையும், நாக்கையுந் தீட்டி வாயைக் கொப்பளித்துக் கையை நன்றாக சுத்திசெய்கிறதும், பிறகு மூக்கை குடைந்து கழுவி ஒலுச்செய்து கொள்கிறதும், அப்பால் வுச்சந்தலை தொடுத்துள்ளங்கால் வரைக்கும் நனையும்படி

தண்ணீர் வடித்துக் கலிமா ஷஹாதத்தோதி னன்று யுடலெல்லாம் நனைய மூன்றுதரந் தண்ணீர் வார்த்துக் கழுவுகிறதுமாம்.

---

## முழுக்கில் பறுலுகள் 3-வகையாம்.

1-வது வாயைக் கொப்பளித்து சுத்தி செய்கிறதும், 2-வது நாசிக்குத் தண்ணீர் செலுத்திச் சுத்திசெய்கிறதும், 3-வது சரீர மடங்கலும் நனையும்படியாகத் தண்ணீர் வார்த்துக் கொள்கிறது மாக முழுக்கின் பறுலுகள் மூன்றும்.

---

## முழுக்கில் ஸுன்னத்துகள் 5-வகையாம்.

1வது இஸ்தின்ஜாத் தலத்தைக் கழுவுகிறதும், 2-வது இரண்டு மணிக்கட்டளவுங் கைகளைக் கழுவுகிறதும், 3-வது ஒலூச் செய்கிறதும். 4-வது உடலி லெவ்விடத்திலேனும் நஜீசு பட்டிருந்தால் கழுவுகிறதும், 5-வது மூன்றுதரந் தண்ணீர் வார்த்துக் கழுவுகிறதும் ஆக முழுக்கில் ஸுன்னத் தைந்தாம்.

---

## பெருஞ் சுத்தியென்னும் முழுக்குவகைகள் முற்றிற்று.

இனிச் சிறுசுத்தியென்னும் உலூவாயிருக்கும். அவ்வுலூ வாகிறது பறுலென்னும், வாஜிபென்னும், ஸுன்னத்தென்னும், முஸ்தஹப்பென்னும் நான்கு வகைப்படும். அவைகளில் 1-வது அல்லாஹு தஆலாவுடைய தொழுகை வணக்க மிவைகளுக் காகவும் குறுஆனைத் தொடுகிறதற் காகவும், உலூச் செய்து கொள்ளுகிறது பறுலாம். 2-வது தவாபு செய்யவேண்டியதற்கு உலூச் செய்து கொள்கிறது வாஜிபாம். 3-வது தூங்கும்போது உலூச் செய்து கொள்கிறது ஸுன்னத்தாம். 4-வது பொய், புரணிக்குப் பின்னுலும் குற்ஆன் ஹதீது இவைகளைப் படிப்பதற் கர்கவும், கித்தாபுகளைக் கொடுக்கிறதற் காகவும் உலூச் செய்து கொள்கிறது முஸ்தஹப்பாம். ஆனுல் இவைகளிலே தறுக்கீபு, பறுலு, வாஜிபு, ஸுன்னத்து, முஸ்தஹப் பிவைகளை யறிந்து உலூச் செய்யவேண்டும்.

## உலூவிலே தறுத்தீபுகள்.

முதலில் இஸ்தின்ஜாத் தலத்தைச் சுத்திசெய்து பின்னர் நிய்யத்துடனே பிஸ்மிலேச் சொல்லி விரல்களைக் கோர்த்துத் தண்ணீரைக்கோதி யிருகைகளையும் மணிக்கட்டளவு மூன்றுதரங் கழுவிப் பின்பு பல்லைத்தீட்டி, நாக்கைத் தேய்த்து, வாயை மூன்று தரங் கொப்பளித்துப் பின்னர் மூக்குக்கு மூன்றுதரங் தண்ணீர் செலுத்தி குடைந்து சிந்திக் கழுவிப் பின்பு தலைக்கெல்லாம் நனைத்து துடைத்துப் பின்னர் காதைத் துடைத்துப் பின்னர்க் கழுத்தைத் துடைத்துப் பின்பு இரண்டு கால்களையுங் கணுக்கால் மட்டு மூன்றுதரங் கழுவிக்கொள்ளவேண்டும்.

இவ்வித முறுப்பினங்களைக் கழுவும்போது அஷ்ஹதென்னும் கலிமா ஷஹாதத்து மோதிக்கொண்டே வலது புரத்தை முற் படுத்திக் கழுவிக் கொள்ளவேண்டும்.

## உலூவிலே பறுலுகள் 4-வகையாம்.

1வது முகத்தைக் கழுவுகிறதும், 2-வது இரண்டு கைகளையும் முழங்கைமட்டும் நனைய கழுவுகிறதும் 3.வது தலையில் நான்கில் ஒருபங்கு நனைய மஸ்ஹு செய்கிறதும், 4-வது இரண்டுகால்களை யுங் கணுக்கால்மட்டுங் கழுவுகிறதும் ஆக உலூவில் நான்கு பறுலுகள்.

## உலூவிலே ஸுன்னத்து 13-வகையாம்.

1-வது நிய்யத்துச் செய்கிறதும், 2-வது 'பிஸ்மில்லாஹில் அலீம் வல்ஹம்துலில்லாஹி அலாதீனில் இஸ்லாம்' என்று சொல்லித் தொடங்குகிறதும் அல்லது அஊதுடன் பிஸ்மிலை மாத்திர மோதித், தொடங்குகிறதும், 3-வது இரண்டு கைகளையு மணிக்கட்டளவுங் கழுவுகிறதும், 4-வது மிஸ்வாக்குகிறதும் 5-வது நாக்கைத் தேய்த்து வாயைச் சுத்தி செய்கிறதும், 6-வது மூக்கைச் சுத்தி செய்கிறதும், 7-வது காதை மஸ்ஹுசெய்கிறதும் 8-வது தலையடங்கலையு மஸ்ஹுசெய்கிறதும் 9-வதுதாடியைக் கோதி கழுவுகிறதும், 10-வது கைவிரல்கள், கால்விரல்களிவை களைக் கோதிக்கழுவுகிறதும், 11வது ஒவ்வொரு உறுப்புகளையும்

மும்மூன்று தரம் கழுவுகிறதும், 12-வது தறுத்திபாகச் செய்கிறதும், 13-வது தொடர்பிடியாகச் செய்கிறதும் ஆக வுளூவில் ஸுன்னத்துப் பதிமூன்றும்.

---

## உளூவில் முஸ்தஹப்பு 5-வகையாம்.

1-வது வலது பக்கத்தை முற்படுத்துகிறது, 2-வது கழுத்தைப் பிடரிமட்டும் மஸ்ஹு செய்கிறதும் 3-வது கிபுலாவை முன்னோக்கிக் கொள்கிறதும், 4-வது ஒவ்வொரு உறுப்புகளைக் கழுகுமிடத்தில் கலிமா ஷஹாதத்தோதுகிறதும், 5-வது பேசாதிருக்கிறதும் ஆக உளூவில் ஐந்து முஸ்தஹப்பாம்.

ஆனால் வாயை மூக்கைச் சுத்திசெய்கிறது அதனல் முழுக்கிலும், உளூவிலே ஸுன்னத்து மாயிருக்கிறது. அதனல் முழுக்கிலுள்ள மூன்று பறுலு களிலொன்றையேனும், அல்லது கிஞ்சித்தேனும் விட்டு விட்டால் முழுக்குச் சுத்தியாகமாட்டாது. இது போலவே உளூவிலுள்ள பறுலுகள் நான்கிலொன்றையேனும் அல்லது கிஞ்சித்தேனும் விட்டுவிட்டால் உளூக்கூடாது. இஃதல்லாமல் இன்னுஞ்சில கருமங்களினலும் உளூகூடாமலும், முறிந்து போவதுமுண்டு, அவைகளையுமறிந்து உளூச்செய்ய வேண்டும்.

---

## உளூவை முறித்தல் 22-காரியமா யிருக்கும்.

## அவைகளில் முன்துவாரத்தி லாறு காரியமாம்.

1-வது குறியென்னுமுன் துவாரத்தாற் சிறுநீர் வந்தாலும், 2-வது சுகநீர் வெளிப்பட்டாலும், 3-வது தொகுநீர் புறப்பட்டாலும், 4-வது கல்லடைப்பு வெளியானலும், 5-வது கோவினை லிரத்தம் வெளிகண்டாலும், 6-வது மணிநீர் வந்தாலும் உளூ முறித்தலாம்.

---

## இனி பின்துவாரத்தில் ஐந்து காரியமாம்.

1-வது அபான வாய்வானலும், 2-வது மலோ பாதையானலும், 3-வது புழுப்பூச்சி வெளியிட்டாலும், 4-வது மூலத்

துடனே இரத்தம் வெளிப்பட்டாலும், 5-வது எவ்விதம் வெளிப் பட்டாலும் உலூ முறித்தலாம்.

---

### இனி உலூவில் மறைவான முறித்தல் ஆறும்.

1-வது தன்னை மறந்தாலும், 2-வது பயித்தியமானாலும், 3-வது மஸ்துவானாலும், 4-வது முசல்வலியுண்டானாலும், 5-வது பேதமாகச் சாய்மானங் கொண்டு நித்திரை செய்தாலும், 6-வது தொழுகையிலே வெடி சிரிப்புச் சிரித்தாலும் உலூ முறித்தலாம்.

---

### இனி உலூவில் வெளியானமுறித்தல் ஐந்தாம்.

1-வது உலூவிலே இரத்தம், 2-வது பொன்னீர், 3-வது தெளிந்த நீரிவை களிருக்குந் தானத்தை விட்டும் வெளியிலே வடிந்து தோற்றினாலும், 4-வது வாயில் நிரம்ப சத்தி யெடுத் தாலும், 5-வது திரையின்று அபத்தோடு, அபஞ்சந்தித் திறங்கினாலும் உலூ முறித்தலாம்.

ஆனலிவ்விஷயங்களில் எவ்விஷயங்களிலேனும் உலூ முறித் தலாகிப்போனால் மறுபடியும் உலூச்செய்து கொள்ளவேண்டும். என்கிலும் மணி வெளிப்படுமாகில் முழுகிக் கொள்ளவேண்டியது. இவ்விதம் உடலைச் சுத்திசெய்து கொண்டு அல்லாஹு தஆலாவை நாளொன்றிற்கு ஐந்து வேளையுந் தொழவேண்டும்.

---

### தயம்மத்திலே பறுலுகள் மூன்றாயிருக்கும்

1-வது நிய்யத்துச் செய்கிறதும், 2வது இரண்டுகைகளையும் விரித்துத் துப்புரவான மண்ணின் பேரிலே அடித்து முகமடங் கலிலுந் தடவிக்கொள்கிறதும், 3-வது கையின் விரல்களைப் பூமியின் பேரில் அடித்து முழங்கை வரைக்குந் துடைத்துக் கொள்கிறதும் ஆகத் தயம்மியத்தின் பறுலுகள் மூன்றாம்.

---

### தயம்மியத்திலே ஸுன்னத்துகள் ஏழாயிருக்கும்.

1-வது இரண்டு கைகளையும் பூமியிலடித்து முன்னே தள்ளு கிறதும், 2-வது அப்படிப் பூமியிலே முன் தள்ளிய இரண்டுகை களையும் பின்னே யிழுக்கிறதும், 3-வது இரண்டுகைகளின் விரல்

களைப் பூமியின்பேரிலே அடிக்கும் போது விரித்துக்கொள்ளு கிறதும், 4-வது கைகளின் விரல்கள் விரிய மேலெடுத்துப் பின்கை யிரண்டும் சேர்த்துதட்டி யுதறுகிறதும், 5-வது பிஸ்மிலேயோதிக் கொள்கிறதும், 6-வது தறுத்திபுடனே செய்கிறதும், 7-வது தொடர் பிடியாயகச் செய்கிறதும் ஆகத் தயம்மியத்தில் ஸுன் னத்து ஏழாம்.

முற்றிற்று.

---

இவ்விதம் இஸ்லாத் தியல்பையுடைய ஆண், பெண், இரு வகையார்களும், முன்னர் ஜுனுபென்னும் பெருந்துடக்கை நீக்கிச் சுத்தியாகிச் சிறுதுடக்கை நீக்குத லென்னும் உழூவை சிறப்ப மாகச் செய்து சுத்தியான பின்னர் நிலையில் நின்று மேலேபார்த்து இருகைகளையு மேந்தி யிந்தத் துஆவை யோதவேண்டும்.

## உழூவின் துஆ

"அல்லாஹும்ம மஜ்அல்னீமினத் தவ்வாபீன், வஜஅல்னீ மினல் முத்தத்தஹ்ஹிரீன். ஸுபுஹானக் கல்லாஹும்ம வபிஹம் திக்கஅஷ்ஹது அன்லாஇலாஹ இல்லா அந்த அஸ்தஃபிறுக்கவ அத்தூப் இலைக்க வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்" என்று ஓதி முடிக்கிறதாம்.

இனி முஅதின் திருவாங்கிட்ட திருமொழி செவியிற்கேட்ட வுடனே எப்பேச்சு மெப்பராக்கு மொழிந்து 'மறுஹபன்பில காபிலீன் அத்லன்வமறுஹபன் பிஸ்ஸலாத்தி அஹ்லன் வசஹலா' என்று சொல்லி அல்லாஹு அக்பர் என்றபோது அதுபோலே சொல்லிக்கொள்கிறது.

அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் என்றபோது, அதுபோலவே சொல்லிக்கொள்கிறது, அஷ்ஹது அன்ன முஹம் மதர் றசூலுல்லாஹ என்றபோது, அதுபோற் சொல்லிக்கொண்டு றசூல் நாயகமவர்களுடைய பேர்வரிசைக்காகவேண்டி குற்றத் ஐனீபிக்க யாறசூலுல்லாஹ் என்ற சொல்லோடு இருகையின் பெருவிரல்களையுஞ் சேர்த்துக் கண்ணிமைகளில் வைத்து முத்திக் கொள்ளுகிறது, ஹைய அலஸ் ஸலாஹ், ஹையா அலல்பலாஹ என்றபோது, லாஹௌல வலாக்குவ்வத்த இல்லாபில்லாஹில் அலீயில் அலீமென்று சொல்லிக்கொள்கிறது.

இனி ஸுபுஹுக்குச்சொல்லும் பாங்கிலே அஸ்ஸலாத்து கைறுன் மினன்னவ்ம், என்றபோது ஸதக்தவபரிர்த்த வபில் ஹக்கிநதக்த்த என்று சொல்லிக்கொள்கிறது. மற்றுஞ் சொற் களெல்லாம் முஅதின் சொல்லுகிறதுபோற் சொல்லிக்கொள்கிறது பாங்கில் வாஜீபாம். இவ்விதத்தில் பாங்கு சொல்லி முடித்த பின்னர் இருகைகளையு மேந்தி யிந்த துஆவை யோதிக்கொள்கிறது.

## பாங்கு துஆ.

லாஇலாஹ இல்லல்லாஹு மலிக்குல் ஹக்குல்மூமின் அல்லா ஹும்ம றப்பஹாதிஹித் தஅவத்தித் தாமத்தி வஸ்ஸலாத்தில் காயிமத்தி ஆத்தி செய்யிதினா முஹம்மதினில் வஸீலத்த வல் பலீலத்த வதறஜத்தர்றபீ அத்த வப் அதுஹு மக்காமன் மஹு மூதானில்லதீ வஅத்தஹு வறுஸுக்ஞஷபா அத்தஹு வஅவ் ரிதனு ஹௌலஹு இன்னக்க லாத்துகுலிபுல் மீஆத் என்றோது வதுடனே இன்னல்லாஹு வமலாஇக்கத்தா என்கிற ஆயத்தையு மோதி ஆகிறுதக்வாஹும் அனில்ஹம்துலில்லாஹி றப்பில் ஆல மீனென்றோதி முடிக்கிறதாம்.

## பாங்கு சொல்லுகிற விபரம்.

அல்லாஹு அக்பற், அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹ், அஷ்ஹது அன்ன முஹம்மதுர் றசூலுல்லாஹ், அஷ்ஹது அன்னமுஹம்மதர் றசூலுல்லாஹ், ஹையஅலஸ்ஸலாஹ், ஹையஅலஸ்ஸலாஹ், ஹைய அலல்பலாஹ், ஹைய அலல்பலாஹ், அல்லாஹு அக்பற், அல்லாஹு அக்பற், லாஇலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லி முடிக்க வேண்டும்.

இனி இக்காமத்தும் பாங்கைப் போலவே சொல்லுகிறதில் ஹைய அலல்பலாஹுக்குப் பின்னால் கத்க்காமத்திஸ்ஸலாத்து என்று ஓதிக்கொள்கிறது. இக்காமத்தைக் கேட்டவர்களும் அது போலவே சொல்லுகிறதில் கதக்கமாத்திஸ்ஸலாத் தென்றபோது, அகாமஹல்லாஹு வஅதாமஹா மாதா மத்திஸ்ஸமாவத்து வல்அறுலு வஜ்அலனீ மின்ஸாலிஹீ அஹ்லிஹா வென்றோத

வேண்டும். பின்னர் கிபுலாவை முன்னோக்கி நின்று இரண்டு கைகளையுஞ் சேர்த்துத் தக்பீறு கட்டுவதாம்.

### தக்பீறு கட்டுகிற நிய்யத்தின் விபரம்.

### பஜ்றுத் தொழுகைக்கு முன்னர் ஸுன்னத்து றக்அத்து 2.

அதற்கு நிய்யத்து.

---

நவைத்து அன்உஸல்லிய ஸுன்னத்தல் பஜ்ரி றக்அத்தைனி முத்த வஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ்ஷரீபத்திலில்லாஹி அல்லாஹு அக்பர் என்றுசொல்லி நிய்யத்துடனே தக்பீறுகட்டித் தொழவேண்டும்.

### பஜ்று பறுலு றக்அத் 2.

அதற்கு நிய்யத்து.

---

நவைத்து அன்உஸல்லிய பறுல ஸலாத்துல் பஜ்ரீ றக் அத்தைனி முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத் துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

### லுஹறுத் தொழுகைக்கு முன்னர் ஸுன்னத்து றக்அத்து 4.

அதற்கு நிய்யத்து.

---

நவைத்து, அன்உஸல்லிய ஸுன்னத்தில் லுஹரி அறுபஅறக் ஆத்தின் முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத் துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

### லுஹறுக்கு பறுலு றக்அத்து 4

அதற்கு நிய்யத்து.

---

நவைத்து அன்உஸல்லிய பறுலஸலாத்தல் லுஹரி அறுபஅறக்ஆத்தின் முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத் துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

ளுஹருடைய பறுலுத் தொழுகைக்குப் பின்னர்

ஸுன்னத்து றக்அத்து 2.

அதற்கு நிய்யத்து.

---

நவைத்து அன்உஸல்லிய ஸுன்னத்தல் ளுஹறி றக்அத தைனி முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

நபில் றக்அத்து 2.

அதற்கு நிய்யத்து.

---

நவைத்து அன்உஸல்லிய ஸலாத்தன் னபுலி றக் அத்தைனி முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

அஸ்றுடைய பறுலுத்தொழுகை றக்அத்து-4

அதற்கு நிய்யத்து.

---

நவைத்து அன்உஸல்லி பறுலஸலாத்தல் அஸரி அறுபஅ றக் ஆத்தின் முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீ பத்தி லில்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத் துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

மஃரிபுத் தொழுகைக்குப் பறுலு றக்அத்து-3

அதற்கு நிய்யத்து.

---

நவைத்து அன்உஸல்லிய பறுலஹாஸல் மஃரிபு ஸலாஸ றக் ஆதின் முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீர் கட்டித் தொழவேண்டும்.

மக்ரிபுடைய பறுளுத் தொழுகைக்குப் பின்னர்
ஸுன்னத்து றக்அத்து-2
அதற்கு நிய்யத்து.

---

நவைத்து அன்உஸல்லிய ஸுன்னத்தல் மஃரிபி றக்அத்தைனி முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

நபில் றக்அத்து-2
அதற்கு நிய்யத்து.

---

நவைத்து அன் உஸல்லிய ஸலாத்தன் னபுலி றக்அத்தைனி முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

இஷாவுடைய பறுளுத் தொழுகைக்கு முன்னர்
ஸுன்னத்து றக்அத்து-4
அதற்கு நிய்யத்து

---

நவைத்து அன் உஸல்லிய ஸுன்னத்தல் இஷாஇ அறுபஅ றக்ஆத்தின் முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஸ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

இஷாவுடைய பறுளு றக்அத்து-4
அதற்கு நிய்யத்து.

---

நவைத்து அன் உஸல்லிய பறுலஸலாத்தல் இஷாஇ அறுபஅ றக்ஆத்தின் முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

இஷாவுடைய பறுளுக்குப் பின்னர்
ஸுன்னத் றக்அத்து-2
அதற்கு நிய்யத்து.

நவைத்து அன் உஸல்லிய ஸுன்னத்தல் இஷாஇ றக்அத் தைனி முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி ல்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

### நபில் தொழுகை றக்அத்து-2
அதற்கு நிய்யத்து

நவைத்து அன் உஸல்லிய ஸலாத்தன் னபுலி றக்அத்தைனி முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி ல்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

### தஸ்பீஹுல் வித்றுத்தொழுகை றக்அத்து 3
அதற்கு நிய்யத்து

நவைத்து அன்உஸல்லிய ஸலாத்தல் வித்திரி ஸலாஸ றக் ஆத்தின் முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி ல்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

### தஹியத்துல் மஸ்ஜிதுத் தொழுகை றக்அத்து-2
அதற்கு நிய்யத்து.

நவைத்து அன்உஸல்லிய தஹிய்யத்தில் மஸ்ஜிதி றக் அத்தைனி முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி ல்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

### உளூவுடைய ஸுன்னத்து றக்அத்து.2
அதற்கு நிய்யத்து.

நவைத்து அன்உஸல்லிய ஸுன்னத்தல் உளூஇ றக்அத் தைனி முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி ல்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறுகட்டித் தொழவேண்டும்.

### ஜும்ஆவுடைய ஸுன்னத்து றக்அத்து-4
அதற்கு நிய்யத்து.

நவைத்து அன்உஸல்லிய ஸுன்னத்தல் ஜும்ஆ அறுபஅ றக்ஆத்தின் முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீ பத்தி ல்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி நிய்யத் துடனே தக்பீறுகட்டித் தொழவேண்டும்.

ஜும்ஆவுடைய பறுலு றக்அத்து-2
அதற்கு நிய்யத்து

நவைத்து அன்உஸல்லிய பறுலஸலாத்தல் ஜும் அத்தி றக் அத்தைனி முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பற் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

ஜும்ஆ பறுலு தொழுதபின்னர்
ஜும்ஆவுடைய ஸுன்னத்து றக்அத்து-4.
அதற்கு நிய்யத்து.

நவைத்து அன் உஸல்லிய ஸுன்னத்தல் ஜும்ஆ அறுபஅ றக் ஆத்தின் முத்த வஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பற் என்று சொல்லி நிய்யத் துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

ஜும்ஆக் கூடுமென்பதில் சந்தேகமான இடங்களில்
ஆகிறு லுஹறு என்று றக்கத்து-4
அதற்கு நிய்யத்து

நவைத்து அன் உஸல்லிய பறுலஸாத்த ஆகிரில்லுஹரி அறபஅ றக் ஆத்தின் முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பற் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

வக்த்துடைய ஸுன்னத்து றக்அத்து2
அதற்கு நிய்யத்து.

நவைத்து அன் உஸல்லிய ஸலாத்தஸுன்னத்தில் வக்த்தி றக் அத்தைனி முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹி அல்லாஹு அக்பற் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

தக்பீறு நிய்யத்து முற்றிற்று.

---

இவ்வித நிய்யத்துடனே தக்பீறுகட்டிய பின்னர் "ஸுபு ஹானக் கல்லாஹும்ம வபிஹம்திக்க வத்தபாறகஸ்முக்க வத்த ஆலா ஜத்துக்க வலாஇலாஹ கைரு" என்று ஓதி அஊது

பில்லாஹி மினஷ்ஷைத்தா னிர்றஜிம், என்றோதி பிஸ்மி லுடனே அல்ஹம்தை யோதியபின் கீழே சொல்லிக் காட்டப்பட்ட சூரத்துகளிலொவ்வொரு சூரத்தையுமோதி ஒவ்வொரு றக்ஆத்தையுந் தொழவேண்டும்.

## சூறத்துகளின் பெயர்.

வல்லைலி, வல்லுஹா, அலம்நஷ்றஹி, வத்தீனி, இன்னா அன்ஸல்னா, இதாஸுல்ஸிலத்தில், வல்ஆதியாத்தி, அல்க்காரி அத்து, வல்அஸ்ரி, வைலுன்லிக்குல்லி, அலம்தறக்கைப, லீலாபிக் குறைஷி, அறஐத்தல்லதீ, இன்னா அக்தைனா, குல்யாஐயு ஹல்க்காபிறூன, இதாஜாஅ, தப்பத்யதா, குல்ஹுவல்லாஹு, குல்அஊது பிறப்பில்பலக், குல்அஊது பிறப்பின்னாஸ் இவ்வகை சூறத்துகளிலொன்றை யோதிமுடித்து றுக்கூவிற் போய் ஸுபுஹான ரப்பியல் அலீம் என்று 3-தரம் ஓதவேண்டியது.

இனி றுக்கூவில் நின்றுந் தலையை யுயர்த்தும்போது ஸமி அல்லாஹு லிமன்ஹமிதா றப்பனா லகல்ஹம்து என்று சொல்ல வேண்டியது.

பின்பு ஸுஜூதிற்போய் ஸுபுஹானறப்பியல் அஃலா வென்று 3-தரம் ஓதவேண்டும்.

இவ்வித மிரண்டு றக்ஆத்துத் தொழுதபின்னர் இடையிற் சிற்றிருப்பென்று சொல்லும் இருப்பிலிருந்து அத்தஹிய்யாத்து ஓதவேண்டும்.

## அத்தஹிய்யாத்து.

அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலாத்து வத்தையிபாத்துஸ்ஸலாமு அலைக்க ஐயுஹன்னபிய்யு வறஹமத்துல்லாஹி வபறக்காத்துஹு, அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன், அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்தஹு வறஸூலுஹு

என்றோதி யெழுந்து மற்ற றக்அத்தைத் தொழுது பின்னர்க் கடைசியிருப்பிலிருந்து முன்னோதினதோடு அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின் கமாஸல்லைத்த அலா இப்றூஹீம வஅலா ஆலிஇபுறூஹீம் இன்னக்கஹமீதுன்

மஜீத்-வபாரிக் அலாமுஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின் கமா பாறக்கத்த அலா இபுருஹீமவஅலா ஆலி இபுருஹீம் இன்னக ஹமீதுன் மஜீத். அல்லா ஹும்மகுபிர்லீ வலிவாலிதைய வலி ஒஸ்தாதி வலிஜமீ இல் முஸ்லிமீன வல்முஸ்லிமாத், வல்அம்வாத், இன்னக்க முஜீபுத் தஅவாத் றப்பனு, ஆத்தினு பித்துன்யா ஹஸனத்தன் வபில் அகிறத்து ஹஸனத்தன் வக்கினு அதாபன்னுற் என்றோதி ஸலாங் கொடுக்கவேண்டியது.

அதாகிறது வலதுபுறமும், இடதுபுறமுமுண்டான மலக்கு களுக்கும், முஃமினுகிய ஜின்களுக்கும், முஃமினுகிய மனுடர் களிருந்தா லவர்களுக்கும் ஸலாம் சொல்லுகிறேனென்றும், இமாமைத் தொடர்ந்திருந்தால் அவர்கள் சொல்லும் ஸலாத்திற்குப் பிரத்தியென்றும் நினைத்து முதலாவது அஸ்ஸலாமு அலைக்கும் வறஹமதுல்லாஹ் என்கிற சொல்லோடு வலதுபுறம் முகத்தைத் திருப்பி ஸலாம் கொடுத்துப் பின்ன ரிரண்டாவது அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மத்துல்லாஹ் என்கிற சொல்லோடு இடதுபுற முகத்தைத் திருப்பி ஸலாம் கொடுக்கவேண்டியது. அதாவது கண்ணப்புறந் தெரியும்படியாக இருபுறமும் திரும்பி ஸலாம் கொடுத்துத் தொழுகை நிறைவேறின பின்னர் ஸுன்னத்தில்லா விட்டால் இஸ்த்திக்பாறு ஓதவேண்டும். ஸுன்னத்துண்டா யிருந்தால் அல்லாஹும்ம அன்தஸ்ஸலாம், வமின்தஸ்ஸலாம் வத்தபாறக்த றப்பனு யாதல்ஜலாலிவல் இக்றாம் வரைக்கும் ஓதி விட்டு ஸுன்னத்தைத்தொழுதபின் இஸ்த்திக்பாறு ஓதவேண்டும்.

## இஸ்த்திஃபாறு.

அஸ்த்தக்பிறுல்லாஹ் அஸ்தஹபிறுல்லாஹ் அஸ்தக்பிறுல் லாஹல் அலீமல்கரீ மல்லதீ மர்றஹீ மல்லதி லாஇலாஹ இல்லாஹு வல்ஹையுல்க்கையூம், மின்குல்லிதன்பின் வகத்தி அத்தின் வஅத்தூப இலைஹி வஅஸ்ஹலுஹுத் தௌபா.

அல்லாஹும்ம அன்த்தஸ்ஸலாம், வமின்கஸ்ஸலாம் வஇலைக்க யறுஜிஉஸ்ஸலாம், ஹையினு றப்பனுபிஸ்ஸலாம், வஅத்கில்னு பிறஹ்மத்திக்க தாரஸ்ஸலாம், தபாறக்த்த றப்பனு வத்த ஆலைத்த யாதல்ஜலாலி வல்இக்றாம் பிறஹ்மத்திக்க யாஅறுஹ மற்றுஹிமீன் என்றோதவும்.

பின்னும் ஓதவேண்டுமானால் யாஸல்ஜலாலி வல்இக்ருமென்ற தோடு லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல்முல்கு வலஹுல் ஹம்துயுஹயீ வயுமீத்து பியதிஹில்கைறு வஹுவ அலாக்குல்லி ஷைஇன்கதீர் என்று பத்து விசையோதிப் பிறகு.

ஹுவல் அவ்வலு வல் ஆகிறு வல்லாஹிறு வல்பாத்தினு வஹுவ பிக்குல்லிஷை இன் அலீம். லைஸக்கமித்லிஹி ஷைஉன் வஹுவஸ்ஸமீ உல்பஸீற். ஹஸ்புனல்லாஹு வநிஃமல்வக்கில், நிஃமல்மௌலா வநிஃ மன்னஸீறு.

அல்லாஹும்ம ஸல்லி அலா ஸெயிதினா முஹம்மதின் வஅலா ஆலிஸையிதினா முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் அலைஹி, வஸல்லிஅலா ஜமீஇல் அன்பியாஇ வல்முறுஸலீன் வஅலா மலா இக்கதில் முக்கர்றபீன் வஅலா இபாதிக் கஸ்ஸாலிஹீன வஅலா அஹ்லித் தாஅத்திக்க அஜ்மஈன். பின்பு, ஆயத்துல் குறுஸியும் ஓதி துஆவும் ஓதவேண்டும்.

### மையித்துக்குச் செய்யும் முறைகள்.

மையித்தைக் குளிபாட்டுகிறதும், கபனிடுகிறதும், தொழுவிக்கிறதும், அடக்கம் செய்கிறதும், பறுலுக்கிபாயாவாயிருக்கும். அத்தொழுகையின் விபரமாகிறது:—

### மையித்துத் தொழுகைக்குத் தக்பீறு நாலாயிருக்கும்.

அதற்கு நிய்யத்து

உஸல்லீலில்லாஹித் தஆலா தாஇபன் லிம்மையிதி மஅல் இமாமி அல்லாஹு அக்பற்.

இந்த மையித்துக்கு துஆச்செய்தவனாய் அல்லாஹுத ஆலாவுக்காக இந்த இமாமுடனே தொழுகிறேன் அல்லாஹு அக்பற் என்ற நிய்யத்துச் செய்துகொண்டு முதலாவது தக்பீறு கட்டவேண்டும்.

அதில் ஸுபுஹானகல்லாஹும்ம வபிஹம்திக்க வத்தபா றக்கஸ்முக்க வத்தஆலா ஜத்துக வலாஇலாஹ கைறுக்க, என்று தனாவோதிக்கொண்டு இரண்டாவது தக்பீறு கட்ட வேண்டும்.

அதில் அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமாஸல்லேத அலா இபுறாஹீம வஅலா ஆலி இபுறாஹீம் இன்னக்கஹமீதுன் மஜீது என்றோதிக்கொண்டு மூன்றாவதும் தக்பீறு கட்டவேண்டும்.

அதில் அல்லாஹும்ம மஃபிற்லிஹையினா, வமையத்தினா, வஷாஹிதினா, வகாயிபினா, வஸகிரினா, வகபீரினா, வதக்கரினா, வஉன்தானா, அல்லாஹும்ம மன் அஹயைத்தஹு மின்னாப அஹ்யிஹீ அலல் இஸ்லாமிவமன் தவப்பைத்தஹுமின்னா பதவப்பஹு அலல் ஈமானி யென்றோதி நாலாம் தக்பீறு கட்ட வேண்டும்.

அதில் றப்பனா ஆத்தினா, பித்துன்யா, ஹஸனத்தன் வபில் ஆகிறத்தி ஹஸனத்தன் வக்கினா அதாபன்னாற் என்றோதி அஸ்ஸலாமு அலேக்கும் வறஹமத்துல்லாஹி யென்று இருபுறமும் சலாம் சொல்லும்போது, ஜனாஸாவுக்கும், ஜனங்களுக்கும் என்று நிய்யத்துச் செய்துகொள்ள வேண்டும்.

### ஷைத்தான் ஹறக்கத்திற்காக முழுகிறபோது செய்கிற நிய்யத்து.

நவைத்து அன் அக்தஸில் மின்குஸ்லில் இஹ்த்திலாமிஹ றக்கத்துஷ் ஷைத்தானீ பறுலன் அலேயறபு அன்லி ஹத்தி வக்த ஹாறத்தன் லில்றகனி வகுஸ்லல் முஃமினி அஹலில் ஜன்னத்தி அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக் கலஹு வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வறசூலுஹு என்றோதி நிய்யத்துடனே முழுகவேண்டும்.

### ஜனுபத்துக்குச் சொல்லி முழுகிற நிய்யத்து.

நவைத்து அன் அக்த்தஸில் குஸ்லி ஜனுபத்தி பறுலன் அலேய வத்தஹாறத்தன் லில்பதனி வகுஸ்லில் முஃமினின் அஹ்லின் ஜன்னத்தி அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வறஸுலுஹு லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸுலுல்லாஹி யென்றோதி நிய்யத்துடனே முழுகவேண்டும்.

### றமலான் மாதம் நோன்பு பிடிக்கிற நிய்யத்து.

நவைத்து சௌமகத்தின் அன் அதாஇ பறுலி றமலானிஹாதிஹிஸ்ஸனதி லில்லாஹித் தஆலா. இந்த வருஷத்து றம

லான் மாதத்தில் பறுலான நோன்பை அதாவாக நாளைப்பிடிக்க நிய்யத்துச் செய்கிறேன் அல்லாஹுக்காக என்று நியத்து வைத்து நோன்பு பிடிக்கவேண்டும்.

### நோன்பு திறக்கும்போது ஓதுகிற துஆ

அல்லாஹும்ம லக்கஸும்து வபிக்க ஆமன்துவஅலைக்க அஸ்லம்து வஅல ரிஸ்க்கிக்க வஅபுதற்து என்று ஓதவேண்டும்.

### ஸுன்னத்து தருவீஹு இமாமுடன் தொழுகிற நிய்யத்து.

நவைத்து அன்உஸல்லிய ஸலாத்தத் தருவீஹி றக்அத்தைனி முத்தவஜ்ஜிஹன் இலல் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹித் தஆலா பிஹாஸல் இமாமி அல்லாஹு அக்பற் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

### தருவீஹுத் தொழுகையில் தஸ்பீஹு ஐந்துண்டு.

1-வது தஸ்பீஹு, அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வறசூலுஹு என்று தஸ்பீஹு செய்யவேண்டும்.

2-வது தஸ்பீஹு, அல்லாஹும்மஸல்லி அலாமுஹம்மதின் வஅலாஆலி முஹம்மதின் வபாரிக்கஸல்லிம் வஸல்லி அலாஜமீஇல் அன்பியாயிவல் முறுஸலீன வஅலா மலாஇக்கத்திக்கல் முக்கற்றபீன் வஅலா இபாதிக்கஸ் ஸாலிஹீன் வஅலாக் குல்லி மலக் என்று தஸ்பீஹு செய்யவேண்டும்.

3-வது தஸ்பீஹு, ஸுபுஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பற், வலாஹௌல வலாக் குவ்வத்த இல்லாபில்லாஹில் அலிய்யில் அலீம் என்று தஸ்பீஹ செய்யவேண்டும்.

4-வது தஸ்பீஹு, சுபஹானல்லாஹி வபிஹம்திஹி சுபுஹானல்லாஹில் அலிய்யில் அலீம் வபிஹம்திஹீ அஸ்த்தஃபிறுல்லாஹல் அலீம் மின்குல்லி தன்பின் தகத்தீ அத்தின் வஅத்தூபு இலிஹி யென்று தஸ்பீஹு செய்யவேண்டும்.

5-வது தஸ்பீஹு அஸ்த்தஃபிறுல்லாஹ், அஸ்த்தஃபிறுல்லாஹ், அஸ்த்தஃபிறுல்லா ஹல் அலீ மல்கரீ மல்க்கதி மல்லதீ

லாஇலாஹ இல்லாஹுᵘ வல்ஹையுல் கையும், கப்பாறுதுனுபு, சத்தாறுல்உயூபு, அல்லாமல் குயூபு, கஷ்ஷாபுல்க்குறூபு, யாமுக் கலிபுல்க்குலூபி வல்அபுஸாரி வஅத்தூபு இலைஹி என்று தஸ்பீஹுᵘ செய்யவேண்டும்.

## நோன்புப்பெருநாள் தொழுகைக்கு நிய்யத்து.

நவைத்து அன்உஸல்லிய ஸலாத்தஈதில் பித்ரி றக்அத்தைனி வாஜிபன் முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்தி ஷரீபத்தி வில்லாஹி மஃமூமன் அல்லாஹுᵘ அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

## ஹஜ்ஜுᵘப்பெருநாள் தொழுகைக்கு நிய்யத்து,

நவைத்து அன்உஸல்லிய ஸலாத்த ஈதில் அழுஹா றக்அத்தைனி வாஜிபன் முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபத்திஷ்ஷரீபத்தி வில்லாஹி மஃமூமன் அல்லாஹுᵘ அக்பர் என்று சொல்லி நிய்யத்துடனே தக்பீறு கட்டித் தொழவேண்டும்.

## இக்காமத்துச் சொன்னபின்னர் ஓதுகிற துஆ.

லாஇலாஹ இல்லல்லாஹுᵘ மலிக்குல் ஹக்குல் முபீன் இன்னீ வஜஹத்து வஜஹியலில்லதி பத்தறஸ்ஸமாவாத்தி வல் அறுல ஹனீபன் வமா அனுமினல் முஷ்ரிக்கின், றப்பனு, லலம்னு அன்புஸனு வஇன்னலம் தகுபிற்லனு, வத்தற்ஹம்னு, லெனக் கூனன்னமினல் காஸிரீன் வத்துபுஅலைனு, யாறப்பனு; இன்னக்க அன்தத்தவ்வாபுர்றஹீம் என்று ஓதவேண்டும்.

## தொழுதபின்இருந்து ஓதுகிற திக்குறுகள்,

இலாஹீ ஸுᵘபுஹானல்லாஹ், என்று 33. தரமும் ஸுᵘபுஹானல்லாஹில் அலிய்யில் அலீம் வபிஹம்திஹி தாஇமன், அல்ஹம்துலில்லாஹ் என்று 33- தரமும், அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் வதிக்கமுதாக்கிரீன் அலாதீனில் இஸ்லாம், அல்லாஹுᵘ அக்பர் என்று 33- தரமும் அல்லாஹுᵘ அக்பர் கபீரூவல்ஹம்து லில்லாஹிக் கஸீரூ, சுபுஹானல்லாஹி வபிஹம்திஹி புக்றத்தன் வஅஸீலா, லாஇலாஹ இல்லல்லாஹுᵘ வஹுதஹுᵘ லாஷரீக்கலஹுᵘ லஹுᵘல் முல்கு வலஹுᵘல்ஹம்து யுஹியீ வயுமீத்து வஹுᵘவ ஹையுன் தாஇமுன், காஇமுன்' காதிறுன், லாயனுமு வலாயமூது

பியதிஹில் கைறு வஹுவ அலாகுல்லி ஷைஇன் கதீற் அல்லா ஹும்மலனி மாலிமா அஃதைத்த வலாமுகுத்திய லிமா மனஃத் வலாருதலிமாக்கழத்த வலாமுபத்திலா லிமாஹக்கம்த வலாயன் பஉ தலஜத்திமின் கல்ஜத்துபஃலம் அன்னஹூ அபுலஹுதிக்றி, லாஇலாஹ இல்லல்லாஹ் என்று 10- தரம் சொல்லி லாஇலாஹ இல்லல்லாஹூ முஹம்மதற் றஸூலுல்லாஹி என்றுமுடிக்க வேண்டும்.

## வித்றுடைய குனூத்து.

அல்லாஹும்ம இன்னா நஸ்த்தஈனுக்க, வனஸ்த்தஃபிறுக்க, வனத்தூபு இலைக்க, வனூமினுபிக்க வனத்தவக்கலு அலைக்க, வனுதனீ அலைக்கல் கைறக்குல்லஹூ வனஷ்குறுக்க, வலாநக் புறுக்க, வனகுலஉ வனத்றுக்க, மன்ய்யபுஜுறுக்க, அல்லா ஹும்ம இய்யாக்க நஃபுது வலக்க, நுஸல்லுவனஸ்ஜுதுவ இலைக்கல் நஸ்ஆவன ஹபிதுவனறுஜூ றஹ்மத்தக்க, வனக்ஷா அதாபக்க, இன்ன அதாபக்கல் ஜித்தபில்குப்பாரி முல்ஹிக்குன் வஸல்லல்லாஹூ அலா முஹம்மதின் வஆலிஹிவஸஹ்பிஹி வஸல்லம் என்றோத வேண்டும்.

அப்பால் வித்றுத் தொழுது முடிந்த பின்னர் 'ஸுபுஹான மலிக்குல் குத்தூஸ்' என்று இரண்டுதரம் மெதுவாகவும் மூன்றாந் தரம் கொஞ்ச பலத்த சத்தமாகவு மோதி றப்புல் மலாஇக்கத்திவர் றூஹூ என்றோதி முடிக்கவேண்டும்.

## தொழுகைகளுக்குப்பின் மொத்தமாக ஓதுகிற துஆ.

அல்லாஹும்ம இன்னாநஸ்அலுக்க ஈமானன் முஸ்த்தக்கிமன் வபஹுலன் தாஇமன், வனஹுறன் றஹ்மத்தன், வஇல்மன் நாபி அன், வஅக்லன் காமிலன், வகல்பன் முனௌவறன், வத்தென பீக்கன் இஹ்ஸானன், வதௌபத்தன் நஸூஹன், வஸபுறன் ஜமீலன் வஅஜ்றன் அலீமன், வலிஸானன் தாக்கிறன், வபதனன் ஸாபிறன், வரிஸ்கன் வாஸிஅன், வஸஃயன்மமஷ்க்கூறன் வதன் பன்மஃபூறன், வஅமலன் மக்பூலன் வதுஆஅன் முஸ்த்தஜாபன், வஜன்னதல் பிறுதௌஸி நயீமன் பிறஹ்மதிக்க யாஅறுஹமர் றூஹிமீன், அல்லாஹும்ம மாக்கான ஸாலிஹன், வஅஸலிஹ் லனுமாக்கான பாஸிதன் அல்லாஹூம் மஃபிறுலனுறப்பி.

இறுஹாமாக் கமாரப்பயானீ ஸகிரு வஸல்லல்லாஹு தஆலா வஸல்லம் வபாறக் அலாகைரி கல்கிஹி ஸையிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன். ஸுபுஹான றப்பிக றப்பில் இஸ்ஸத்தி அம்மா யஸிபூன் வஸலாமுன் அலல் முறுஸலீன் வல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன், என்றோதவேண்டும்.

## ஸுபுஹுடைய துஆ

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின். அல்லாஹும்ம இன்னா அஸ்பஹ்னா மின்க பீ நிஃமதின் வஆபியத்தின் வஸித்ரின் பஅதிம்மா நிஃமதிக அலைனா வஆபியதக வஸித்ரக பித்தீனி வத்துன்யா வல்ஆகிரதி இன்னக அலா குல்லி ஷையின் கதீர். வபில் இஜாபதி ஜதீருன் நிஃமல் மவ்லா வநிஃமன்னஸீர். அல்லாஹும்ம அஜ்ரினா மினன்னார்.
7. அல்லாஹும்ம அஜ்ரினா மினன்னாரி ஸாலிமீன் வஅத்கில்னல் ஜன்னத பிஸலாமின் ஆமினீன். வகினா ரப்பனா ஷர்ரல்லாலிமீன் பன்ஸுர்னா அலல் கவ்மில் காபிரீன். இலாஹனா வர்ஸுக்னன் னஆர இலாலிகாயி வஜ்ஹிகல் கரீமி மஅலிகாயி ஸெய்யிதினா முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம அஜ்மயீன். அல்லாஹும் மஜ்அல் ஸபாஹனா ஹாஸா ஸபாஹன் முபாரகன் மினல் கரீபன் வஅனிஷ்ஷர்ரி பயீதன் லாகாஸிரன் வலா மஹ்ரூமன் அல்லாஹும்ம மஜ்அல் அவ்வல யவ்மினா ஹாஸாலனா ஸலாஹன் வஅவ்ஸதஹு பலாஹன் வஆகிரஹு நஜாஹன் வரபாஹன் அல்லாஹும்ம ஸப்பிஹ்னா மின்க ஸபாஹர்ரிலா வஅக்பினா ஷர்ர மாபில்கலா வலாது அஸ்ஸிப்னா பில்ஜராயிமி யாகரீம் யாரஹீம் அல்லாஹும் மஜ்அல் ஸபாஹனா ஸபாஹஸ் ஸாலிஹீன். வமஸ அனா மஸாஅஸ் ஸாகிரீன் வகுலூபனா குலூபல் காஷியீன் வஅப்தானனா அப்தானல் முதியீன். வஃமாலனா அஃமாலல் முத்தகீன் வஅல்ஸினதனா அல்ஸினதஸ்ஸாகிரீன் வநபிஹ்ஹுஸினா அன்நவ்மதில் காபிலீன். வஷாரிக்னா பீதுஆ யிஸ்ஸாலிஹீன். வஸல்லல்லாஹுதஆலா வஸல்லம அலாகைரி கல்கிஹி ஸெய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மயீன்.

## லுஹறுடைய துஆ.

அல்லாஹும்ம ஸல்லி அலா ஸையிதினாமுஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின் அல்லாஹும் மக்த்துப்லிக்குல்லிவாஹிதின்

மின்னு பருஅத்தன் மினன்னூரி வஅமானன் மினல் அதாபி வதலாஸன் மினல் ஹிஸாபி வஜவாஸன் அலஸ்ஸிரூத்தி வனஸீபன் மினல் ஜன்னத்தி வனஜாத்தன் மினன்னூரி வல்அபுவ இன்தல் ஹிஸாபி, அல்லாஹும்ம அஹ்ஸின் ஆக்கிபத்தனுபில் உமூரி குல்லிஹா வஅஜிர்னு மின்கிஸ் இத்துன்யா வஅதாபில் ஆகிறத் தித்தவப்பனு முஸ்லிமீன் வஅல்ஹிக்னு பிஸ்ஸாலிஹீன் வஸல்லல் லாஹு அலா கைரிகல்கிஹி ஸையிதினு முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன்.

## அஸ்றுடைய துஆ.

அல்லாஹும்மஸல்லி அலா ஸையிதினு முஹம்மதின்வ அலா ஆலிஸையிதினு முஹம்மதின் அல்லாஹும்ம இன்னு நஸ்அலுக ஸலாமத்தன் பித்தீனி வத்துன்யா வஆபியத்தன் பில்ஜஸதிவஸி யாதத்தன் பில்இல்மிவல்ஹுதா வபாறக்கத்தன் பிர்ரிஸ்க்கி, வஸிஹ்ஹத்தன் பில்அக்லிவத்தௌபத்தன் கப்லல்மௌதி, வரூஹத்தன் இன்தல்மௌதி, வமஃபிறத்தன் பஃதல்மௌதி யாஸாமி அகுல்லிமௌத், ஹவ்வின் அலைனுஸக்கருதல்மௌத், வஸல்லல் லாஹுவஸல்லம அலாஸையிதினுமுஹம்மதின் வஆலிஹி வ ஸஹபிஹி அஜ்மஈன் ஸுபுஹான றப்பிக்கறப்பில் இஸ்ஸதி அம் மாயஸிபூன் வஸலாமுன் அலல்முறுஸலீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

## மக்ரிபுடைய துஆ.

அல்லாஹும்மஸல்லி அலாமுஹம்மதின் வஅலாஆலி முஹம் மதின், அல்லாஹும்ம அந்தஸ்ஸலாம், வமின்கஸ்ஸலாம், வஇலைகயறுஜிஉஸ்ஸலாம், ஹையினு றப்பனு பிஸ்ஸாம், வஅதா தில்னு தாறஸ்ஸலாம், தபாறக்த்தறப்பனு யாதல்ஜலாலி வல் இக்ரூம். அல்லாஹும்ம இன்னு அம்ஸைனு மின்க பீநிஃமத்தின் வஆபியத்தின் வஸித்ரின் பஅத்திம்மநிஃமத்தக்க அலைனு வஆபி யதக்க வஸித்றக்கபித்தீனி வத்துன்யா வல் ஆகிறத்தி இன்னக்க அலாகுல்லி ஷைஇன்கதீர், வபில் இஜா பதிஜதீர், நிஃமல் மௌலா வநிஃமன்னஸீற் அல்லாஹும்ம அஜிற்னு மினன்னூற் (7) அல்லாஹும்ம அஜிர்னு மினன்னூரி ஸாலிமீன், வஅத்கில்னல் ஜன்னத்த பிஸலாமின் ஆமினீன். வக்கினுறப்பனு ஷர்றல் லாலிமீன், பன்ஸுற்னு அலல் கௌமில் காபிரீன், இலாஹனு வறுஸுக்

னன்னஹுற இலாலிக்காஇ வஜ்ஹிக்கல் கரீமிமஅலிக்காஇ ஸைபி தினா முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம அஜ்மஈன் ஸுபுஹான றப்பிக றப்பில் இஸ்ஸத்தி அம்மா யஸிபூன வஸலாமுன் அலல் முறுஸலீன வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

## இஷாவுடைய துஆ.

அல்லாஹும்ம ஸல்லி அலாமுஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் அல்லாஹும்மஹ்பலுனா பிலுல்மத்தில்லைலி கமாஹ பிலுத்தனா யாறப்பனா பிலெளஇன்னஹாரி வஸ்ரிபுஅன்னா பலா அல்லைலி கமாஸறபுத்த அன்னபலா அன்னஹாரி வஹ்ஷுர்னா மஅல் அபுறாரி வஜ்அல் முன்கலபனா இலாதாரில் கறாரிவனஜ்ஜினா மினன்னாற், வஹபு அன்னல் அவ்ஸார் யாகப்பாற், அல்லாஹும் மஹ்பலுனா யாபையாலு மின்ஜமீ இல்பலாயரவல் அஃதாஇ வல் அம்றாலி பிறஹ்மதிக யாஅறுஹமர்றாஹிமீன் வஸல்லல்லாஹு அலா ஸைபிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன் ஸுபஹான றப்பிக்க றப்பில் இஸ்ஸத்தி அம்மாயஸிபூன் வஸலாமுன் அலல் முறுஸலீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன், என்றுஓதி துஆக்களுடனே நாடிய நற்கருமங்களுக் கெல்லாம் அவசியமான மற்றும் துஆக்களையுஞ் சேர்த்து ஓதிக்கொள்வதாம்.

## பல துஆக்கள்.

அல்லாஹும்ம இன்னா நஸ்அலுக்கல் அபுள வல்ஆபியத்த வல்மு ஆபாத்தத் தாஇமத்த வஸ்ஸலாமத்த பித்தீனி வத்துன்யா வல் ஆகிரத்தி இன்னக்க அலாகுல்லி ஷையின் கதீறு.

## இதுவும் துஆ.

அல்லாஹும்ம அஹ்பினா பிஹாயத்தில் உலமாஇ, வஅமித்னாபீ மெளத்திஷ் ஷுஹதாஇ, வஹ்ஷுற்னாகதம் பிஸும்றத்தின் அவ்லியாஇ, பிஹக்கி முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வஜமீ இல் அன்பியாஇ வஆலிக்குல்லிஹிம் வஸஹ்பிஹிம் அஜ்மஈன் பிறஹ்மத்திக்க யாஅறுஹ மற்றாஹிமீன்.

## இதுவும் துஆ.

அல்லாஹும்ம ஸைபிதினா பிஸீனத்தில் ஈமான் வஷர்ரிபுனா பிஷறபில் குறுஆன், வஅக்ரிம்னா பிகறாமாதி முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

## இதுவும் துஆ.

அல்லாஹும்ம ஆபினா மின்குல்லி பலாயித்துன்யா வஅதா பில் ஆகிரு தவப்பனா முஸ்லிமீன் அவல்ஹிக்னா பிஸ்ஸாலிஹின் யாறப்பல் ஆலமீன் யாகப்பாறு இஃபிர்லீ பிறஹ்மத்திக்க யா அர் ஹமர்றாஹிமீன்.

## இதுவும் துஆ.

அல்லாஹும்ம ஷர்ரிபுனா பித்தஃவா வஜம்மில்னா பில்ஆபி யத்தி வறுஸுக்குனல் ஜன்னத்த யாறப்பல் ஆலமீன்.

இதில் ஒவ்வொரு துஆக்களுக்கு முடிவில் வஸல்லல்லாஹு அலா ஸையிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன் ஸுபுஹான றப்பிக்க றப்பில் இஸ்ஸத்தி அம்மா யஸிபூன் வஸ லாமுன் அலல் முறுஸலீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் என்றோதி முடிக்கவேண்டும்.

## கபுருளிகள் பேரி லோதுகிற துஆ.

அல்லாஹும்ம அவ்ஸில் தவாப மாக்கறஃனாஹு மின்கலா மிக்கல் அஸிஸ்ஹாதிஹி ஹதியத்தன் வாஸிலத்தன் வறஹமத் தன் ஷாமிலத்தன் வபறக்கத்தன் மக்பூலத்தன் மின்னா இலா றூஹி வகுபிற்லஹு வறஹம்ஹு வஹஷுறஹு பீஸும்றத்தில் ஸாலீ ஹீன், அல்லாஹும்ம மஜ்அல்க் கபுறஹு றௌலத்தன் மின்ரி யாலில்ஜின்ன வலாத்த ஜஅல்க் கபுறஹு ஹுபுறதன் மின்ஹு பரின்னிரான் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

## பாத்திஹா ஓதுகிற முறைமை.

இலாஹலரதி நபிய்யினா முஹம்மதின் முஸ்தபா அஹ்மதின் முஜ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் வஆலிஹிவ ஸஹ்பிஹி வதுர்ரியாதிஹி வஅஹலிபைத்திஹிரிஹு வனுல்லா ஹித்தஆலா அலைஹிம் வலிஸதாதின் வலிஜீரானினா வலிமன் லஹூம் ஹக்குன் அலைனா வலிஜமீஇல் உம்மதி முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அல்பாத்திஹா வென்று சொல்லிப் பாத்திஹா வோதவேணும்.

## பாத்திஹாவுக்குப்பின் ஓதுகிற துஆ.

அல்லாஹும்ம அவ்ஸில் தவாப மாக்கறஃனாஹு மின்கலா மிக்கல் அஸீஸ் ஹாதிஹி ஹதியத்தன் வாஸிலத்தன் வறஹ

மத்தன் நாஸிலத்தன்மின்க இலாஹஹுறத்தி நபிய்யிகஸையிதினு முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தும்மஇலா றூஹி மன்தலெளனல் குர்ஆனல் அலீம் மின் அஜ்லிஹி வஹ்ஷத்தஹு வறலியல்லாஹு குறுபதஹு வனவ்வறல்லாஹுலரீஹஹு வத்தகப்பலல்லாஹு மின்ஹஸ்னுத்திஹி வத்த ஜாவஷல்லாஹு அன்ஸையி ஆத்திஹி வகபறல்ல ஹு தூறூபஹு வஜ்ம அல்லாஹு பைனனு வபைனஹுபீ ஜன்னத்தின்னஈம் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

## தொழ ஆகாத வேளைகள் 3.

அவைகளில் 1-வது பொழுதுதயமாகும்போது 2-வது பொழுதுச் சந்திலாடுகிற நடுப்பகலிலும், 3-வது பொழுது அஸ்தமிக்கிறபோதிலும் ஆக இம்மூன்று வேளைகளும்தொழ ஆகாத வேளைகளாம்.

## தொழ மக்றுஹான வேளைகள் 23

அவைகளாகிறது 1வது கிழக்கு வெளுத்தபிறகும், 2-வது ஸுபுஹுத் தொழுகைக்குப்பிறகும், 3-வது அஸ்றுத் தொழுகைக்குப் பிறகும், 4-வது மஃரிபுத்தொழுகைக்கு முந்தியும், 5-வது ஜும்ஆ அன்றையில் கத்தீபு குத்துபா ஓதுகிறபோதும் 6-வது ஜும் ஆவில் இக்காமத்து சொல்லுகிறபோதும், 7-வது குறுபான் கொடுக்கிற ஹஜ்ஜுப் பெருநாளில் குத்துபாவுக்கு முந்தியும், 8-வது ஹஜ்ஜுடைய குத்துபா வேளையிலும், 9-வது கத்தீபு குத்துபா ஓத எழுந்ததற்குப் பின்னும், 10-வது நிக்காஹுடைய குத்துபாவிலும் 11-வது பித்றுப் பெருநாள் தொழுகைக்கு முந்தியும், 12-வது பித்றுப் பெருநாள் தொழுகைக்கு பிந்தியும், 13-வது சுபுஹுடைய பறுலுதொழ இடைஞ்சலான வேளையிலும், 14.வது லுஹறுடைய பறுலுத்தொழ இடைஞ்சலான வேளையிலும், 15-வது அஸ்றுடைய பறுலுத்தொழ இடைஞ்சலான வேளையிலும் 16-வது மஃரிபுடைய பறுலுத் தொழ இடைஞ்சலான வேளையிலும், 17-வது இஷாவுடைய பறுலுத்தொழ இடைஞ்சலான வேளையிலும், 18-வது சூரிய கிராணம் தீண்டும்போது ஓதப்பட்ட குத்துபா ஓதுகிற வேளையிலும், 19-வது மழைக்காக குத்துபா ஓதுகிற வேளையிலும்,

20-வது தொழுகைக்கு இக்காமத்துச் சொன்னதன் பிறகு ஸுன்னத்துத் தொழுகிறதும், 21-வது இஷாவுடைய பறுலைப் பாதி இரவானதின் பின்னர் தொழுகிறதும், 22-வது மலோபாதை ஜலோபாதை வந்தபோது அடக்கிக்கொண்டு தொழ ஆரம்பிக்கிறதும், 23-வது வஜீபனம் சமீபத்திலிருந்து அதை யுண்ணவும் நாட்ட முண்டாயிருக்கும்போது தொழுகிறதும், ஆக இந்த இருபத்திமூன்று வேளைகளும் தொழ மக்றூஹான வேளைகளாம்.

## பாங்கில்லாத தொழுகைகள் 10

அவைகளாகிறது 1-வது நபில்த்தொழுகை, 2-வது வித்றுத் தொழுகை, 3-வது தறுவீஹுத் தொழுகை, 4-வது இரண்டு பெருநாள் தொழுகை, 5-வது கஃபதுல்லாவைப் பிரதட்சணஞ் சுற்றிவருகிற தொழுகை, 6-வது பெண் பிள்ளைகள் தொழுகிற தொழுகை, 7-வது ஆண் பிள்ளைகள் தொழுகிற தொழுகை, 8-வது சந்திரனை கிரணந்தீண்டும் போது தொழுகிற தொழுகை, 9-வது மழைத் தொழுகை, 10-வது ஜனஸாத்தொழுகை, ஆக இப்பத்து தொழுகைளும் பாங்கில்லாத தொழுகைகளாம்.

## ஜுனுபாளிகளும் ஹைலு நிபாசுக்காரர்களும் செய்ய ஆகாத காரியங்கள் 7.

அவைகளில் 1-வது தொழுகிறதும், 2-வது மஸ்ஜிதிற்புகுதுகிறதும். 3-வது கஃபாவைத் தவாபு செய்கிறதும், 4-வது குற்ஆனோதுகிறதும், 5-வது குற்ஆனைத் தொடுகிறதும் ஆகிய இவ்வைந்து காரியங்களும் ஆண், பெண்ணென இருவர்களிலுமுள்ள ஜுனுபாளிகள் செய்யலாகாத காரியங்களாம். இனிப்பெண்பிள்ளைகளுக்குச் சொந்தமான காரியங்களாவது ஹைலு நிபாஸு நேரங்களில் நோன்பு வைக்கிறதும், ஜிமாஉ செய்கிறதுமா யிருக்கும், ஆக இவ்வேழுகாரியங்களும் ஜுனுபாளிகள், ஹைலு நிபாஸுக்காரர்கள் செய்யலாகாத காரியங்களாம்.

## உலுவில்லாதவர்கள் செய்ய ஆகாத காரியங்கள் 2.

அவைகளாகிறது 1-வது தொழுகிறதும், 2-வது குற்ஆனைத் தொடுகிறதுமாகிய இவ்விரண்டு காரியங்களாம்

## தொழுகையிற் புறப்பறுலுகள் 7-ம், உட்பறுலுகள் 7-ம் ஆகபறுலுகள் 14.

அவைகளிற் புறப்பறுலுகளாகிறது 1-வது தொழுகையுடைய வக்த்தறிகிறதும், 2-வது சரீரத்தைத் துப்புரவாக்குகிறதும், 3-வது உடுத்த புடவையைத் துப்புறவாக்கிறதும், 4-வது ஹயாவென்னும் அவுறத்து மறைய வுடையுடுத்துகிறதும், 5-வது தொழுகிற தலத்தைத் துப்புறவாக்கிறதும், 6-வது முகத்தைக் கிபுலாவுக்கு நோக்கி நிற்கிறதும், 7-வது தொழுகைக்கு நிய்யத்துச் செய்கிறதுமாகிய இவ்வேழுந் தொழுகையின் புறப்பறுலுகளாம்.

இனி உட்பறுலுகளாகிறது 1-வது முந்தின தக்பீறுசொல்லுகிறதும், 2-வது நிலையில் நிற்கிறதும், 3-வது குற்ஆன் ஆயத் தோதுகிறதும் 4-வது றுக்கூவுசெய்கிறதும் 5-வது இரண்டுஸஜதாக்கள் செய்கிறதும், 6-வது பிந்தின இருப்பிருக்கிறதும், 7-வது தொழுகிறவன் தன் செயல்கொண்டு புறத்திப் படுகிறதுமாகிய இவ் வழு முட்பறுலுகளாம். ஆனலிவ் விருவகையாய்ச் சொல்லப்பட்ட பறுலுகள் பதினன்கில் ஏதாவதொன்றை முரண்டாகவாவது, மறதியாகவாவது, மற்றெவ்விதமாயாவது விட்டுவிட்டாற் தொழுகை கூடாது. பின்னுமொரு கவ்லின்படி பறுலுகள் பதினைந்து. அதில் பதினறு போக பதினன்கு பறுலுகளையும் தறுத்தீபாகப் பேணிக்கொண்டு வருகிறது ஆகப்பறுலுகள் பதினைந்தாம்.

## தொழுகையில் வாஜிபுகள் 21

அவைகளாகிறது 1-வது அல்லாஹு என்றசொல்லை, அக்பறென்ற சொல்லுடன் சேர்த்துச் சொல்லுகிறதும், 2-வது கிறுஅத்து பாத்திஹா ஓதுகிறதும், 3-வது அதனேடே ஒருசூறத்தாவது, அல்லது மூன்று ஆயத்தாவது, அல்லது ஒருபெரிய ஆயாத்தாவது ஓதுகிறதும், 4-வது முந்தின அத்தஹிய்யாத்திருப்பி லிருக்கிறதும், 5-வது இரண்டு இருப்பிலும் அத்தஹிய்யாத்தை ஓதுகிறதும், 6-வது ஸலாமுடைய சொற்கொண்டு வெளிப்படுகிறதும் 7-வது தறுத்தீபுடன் தொழுகிறதும், 8-வது றுக்கூவு, ஸுஜூதிவைகளிலே ஒரு தஸ்பீஹு செய்கிற நேரமட்டிலுக் தரிபடுகிறதும், 9-வது முந்தின இரண்டுறக்ஆத்திலே கிறுஅத்தைக் குறிப்பிடுகிறதும், 10-வது சூறவுக்கு முன்பாக அல்ஹம்தை முற்படுத்துகிறதும், 11-வது முந்தின இரண்டு றக்ஆத்துகளில் ஒவ்வொரு றக்ஆத்திலும் ஒவ்வொரு

தரம் அல்ஹம்தை யோதுகிறதும், 12-வது முன்னர் அல்ஹம்தை யோதிய பின்னர் சூறத்தை யோதுகிறதும், 13-வது இமாமானவர் மஃரிபுத் தொழுகை இஷாத்தொழுகை ஸுபுஹுத்தொழுகை, ஜும்ஆத் தொழுகை, ஈதுத்தொழுகை, தருவீஹுத் தொழுகை யாகிய இத்தொழுகையிலே யிரைந்தோதுகிறதும், 14-வது இமாமானவர் லுஹறுத்தொழுகை, அஸ்றுத்தொழுகை இவைகளிலே மெதுவாக அமர்ந்துசத்தம் வெளிக்கிடாமலோதுகிறதும் ஆக இப்பதினான்கி லொன்றையேனு மறதியாக விட்டுவிட்டால் ஸஜதா ஸஹ்வுகொண்டு வாஜிபா யிருக்கும். இனி 15-வது றுக்கூவும், ஸுஜூதும் தரிபாடாகச் செய்கிறதும், 16-வது முத்தக்தியானவன் தொழுகையிலே இமாமனவர் குறுஆனோதும் போது வாயை மூடியிருக்கிறதும். 17-வது முத்தக்தியானவன் எந்த ஹாலிலும் இமாமானவருடனே பின் சொல்லுகிறதும், 18-வது இமாமானவரும், தனித்துத் தொழுகிறவனும் ஸஜதாதிலாவத்துச் செய்கிறதும், 19-வது இரண்டு பெருநாள் தொழுகையிலும் ஆறுத் தக்பீறுகள் சொல்கிறதும் 20-வது இந்த இரண்டு பெருநாளையின் ருக்கூவுடைய தக்பீறு சொல்லுகிறதும், 21-வது வித்ருடைய குனுத்து ஒதுகிறதுமாகிய இவ்விருபத்தொன்றும் தொழுகையின் வாஜிபுகளாம்.

## தொழுகையிலே சுன்னத்துகள் 24.

அவைகளாகிறது 1-வது முந்தின தக்பீறிலிரண்டு கைகளையுமுயர்த்துகிறதும், 2-வது தக்பீறு சொன்னபோது விரல்களைக் கட்டிக்கொள்கிறதும், 3-வது இமாமானவர் தக்பீறுகளை உரக்கச் சொல்லுகிறதும், 4-வது தானுவோதுகிறதும் 6-வது ஆஊதுபில்லாஹி மின்ஷ்ஷைத்தானிற் றஜீமென்றோதுகிறதும், 7-வது பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம் மென்றோதுகிறதும் 8-வது ஆமீன் கூறுவதும், ஆனுலிதில்தனுவும், அஊதும், பிஸ்மிலும், ஆமீனுமாகிற இந்நான்கும் மெதுவாகச் சொல்லவேண்டியது, 9-வது வலதுகையை இடதுகையின் பேரில் வைக்கிறதும் 10-வது றுக்கூவுடைய தக்பீறு சொல்லுகிறதும், 11-வது றுக்கூவில் 'ஸுப்ஹானரப்பியல் அலீம்' என்று மூன்றுதரஞ் சொல்லுகிறதும், 12-வது றுக்கூவிலே விரலோடு கைகளாலிரண்டு முழங்கால்களையும் பிடித்துக்கொள்கிறதும், 13-வது அந்த முழங்காற் சிப்பியைப் பிடிக்கிறபோது கைகளுடைய விரல்களாற் கட்டிக்கொள்கிறதும்,

13-வது றுக்கூவில் நேரே நிற்கிறதுடனே தலையை முதுகுக்குச் சரியாக உயர்த்துகிறதும், 14-வது வஜாவுக்குப் போகும்போதுத் தக்பீறு சொல்லுகிறதும், 15-வது ஸஜதாச் செய்யும்போது இரண்டு கைகளையும், இரண்டு முட்டுக்கால்களையும் பூமியில் வைக்கிறதும், 16 வது ஸஜதாச் செய்யும்போது ஸுபுஹான றப்பியல் அஃலா என்று மூன்று தரஞ் சொல்லுகிறதும்; 17-வது இடுப்பில் இடது காலை விரித்து வலதுகாலை நிற்கவைக்கிறதும், ஆனால் பெண் பிள்ளைகளோ புட்டியின்பேரிலிருந்து இடதுகாலை வலது புறத்திலே கொண்டுவர வேண்டும், 18-வது இரண்டு ஸஜதாவுக்கு மிடையிலே யிருக்கிறதும், 19-வது அத்தஹிய்யாத் தோதும் போது இரண்டு கைகளையும் பெருந்துடைகளின் பேரில் வைக்கிறதும், 20-வது முந்தின அத்தஹிய்யாத்தோதும்போது றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்பேரில் வரிசைக்காகச் சலவாத்துச் சொல்லுகிறதும், 21-வது தனக்கும், தன்னுடைய தாய் தகப்பன் மார்களுக்கும் தன் உஸ்தாதுக்கும், இஸ்லாமான பேர்களடங்கலுக்கும் துஆச் செய்கிறதுடனே சலவாத்தையுமோதி அதினோடு சேர்ந்த துஆக்களையுமோதுகிறதும் 22-வது ஸலாம் சொல்லும்போது வலத்தே, இடத்தே முகத்தைத் திரும்பிச் சொல்லுகிறதும் 23-வது இமாமானவர் றுக்கூவை விட்டுத் தலையை யுயர்த்தும்போது 'ஸமி அல்லாஹு லிமன் ஹமிதா' என்றோதுகிறதும், 24-வது முத்தத்தானவர்கள் 'அல்லாஹும்ம றப்பனாலகல் ஹம்து' என்றோதுகிறதுமாகிய இவ்விருப்பத்திநான்கு செயலும் தொழுகையில் ஸுன்னத்துகளாம். இந்த ஸுன்னத்துகளிலே ஒன்று விட்டுப்போனாலும் தொழுகை கூடும், முரண்டாக விட்டபேர்கள் பாவியாவார்கள்.

## தொழுகையிலே முஸ்தஹப்பு 27.

அவைகளாகிறது, 1-வது முந்தின தக்பீறு சொல்லும்போது கைகளினாற் காதுகளின் சிறு சோணைகளைத் தொட்டுக் கொண்டு வருகிறதும் 2-வது தக்பீறு சொல்லும்போது ஆண்பிள்ளைகள் இரண்டு இளங்கைகளையும் சட்டைக் கைகளில் நின்றும் புறத்திப் படுத்துகிறதும், 3-வது நிலையில் நிற்கும்போது ஸஜதாச் செய்யுமிடத்தைப் பார்க்கிறதும் 4-வது தொழுகையில் நிலை நிற்கும் போது இரண்டு கால்களுக்கு மிடையில் நாலு விரல் பிரமாணம்

இடமிருக்கும்படி கால்களை யகட்டி வைத்துக் கொள்ளுகிறதும், 5-வது முக்கியமான பேர்கள் ஸுபுஹிலும், ளுஹறிலும், சூறத்துக் காபிலிருந்து சூறத்து புறூஜுவரைக்குமுள்ள சூறத்து களில் நின்றும் ஓதுகிறதும் இனி, அஸ்றிலும், இஷாவிலும் சூறத்து புறூஜிலிருந்து சூறத்து லம்யக்குன்னில்லதீன் வரைக்கு முள்ள சூறத்தில் நின்றுமோதுகிறதும், இனி மஃறிபில் சூறத்து லம்யக்கு னில்லதீக்கும் கீழாவுள்ள சூறத்தில் நின்று மோது கிறதும், 6-வது றுக்கூவிலே தலையையும் முதுகையும் நேர் சரி யாக வைக்கிறதும், 7-வது றுக்கூவில் ஸுபுஹான றப்பியல் அலீ மென்றும், ஸுஜூதில் ஸுபுஹான றப்பியல் அஃலாவென்று மூன்று தரத்திற் கதிகமாகச் சொல்லுகிறதும், 8-வது றுக்கூவு செய்யும் போது காற்பரண்டையைப் பார்க்கிறதும், 9-வது ஸஜதாச் செய்யும் போதிலே வயிற்றைத் துடையைவிட்டும், துடையைப் பின் காலை விட்டும் பின்காலைப் பூமியை விட்டும், தூரப்படுத்து கிறதும், 10-வது ஸஜதாச் செய்யும்போது மூக்கைப் பார்க்கிறது. 11-வது இரண்டிருப்புகளிலும் இரண்டு கைகளையும், இரண்டு துடைகளின்பேரில் வைக்கிறதும், 12 வது அவ்விருப்பு களில் மடியைப் பார்க்கிறதும், 13-வது கொட்டாவி வரும்போதிலே வாயை மூடிக்கொள்கிறதும், 14-வது இருமலைப் பேணிக்கொள் கிறதும், 15-வது குறுஆனில் ஒரு ஆயத்திற் கதிகமாக ஓது கிறதும், 16-வது ஸஜதாவுக்குப் போகு முதலிலே இரண்டு முழங் கால்களையும் பூமியில் வைக்கிறதும் அப்பாலிரண்டு கைகளையும் வைக்கிறதும் பின்னர் மூக்கை வைக்கிறதும், பிறகு நெற்றியை வைக்கிறதும், 17-வது ஸஜதாவை விட்டு மீளும்போது முதலில் நெற்றியை யெடுக்கிறதும், அப்பால் மூக்கை யெடுக்கிறதும் பிறகு இரண்டு கைகளை யெடுக்கிறதும், 18வது இரண்டு கைகளுக்கு மிடையிலே ஸஜதாச் செய்கிறதும், 19-வது ஸஜதாச் செய்யும் போது கைவிரல்களுடைய முன்பக்கங்களைக் கிபுலாவை நோக்கிக் கொள்கிறதும், 20-வது நெற்றியி லொட்டிய மண்ணை ஸலாம் கொடுக்கிறதற்கு முன்னதாய்த் தொடைக்காம லிருக்கிறதும், 21-வது ஸலாம் கொடுக்கும்போது வலது புறமும், இடது புறமு முகத்தைத் திருப்பித் தோளைப்பார்க்கிறதும், 22-வது பெண் பிள்ளைகள் தக்பீறு கட்டுகிறபோது கைகளைத் தோட்புயம் வரைக்கு முயர்த்துகிறதும் 23-வது பெண் பிள்ளைகள் 9-வயதிற்

சொன்னவைகளுக்கு மாற்றமாய் சேர்த்து கொள்கிறதும், 24-வது பறுலான தொழுகையிற் பிந்தின இரண்டு றக்ஆத்தில் அல்ஹம் தையோதுகிறதும், 25-வது சலாம் கொடுக்கும்போது இமாமானவர் முக்ததிகளையும், மலா இக்கத்துகளையும் நிய்யத்து வைக்கிறதும் 26-வது முக்ததிகள், இமாமையும் மலாஇக்கத்துகளையும் நிய்யத்து வைக்கிறதும், 27-வது ஒன்றியாய்த் தொழுகிறவன் மலாஇக்கத்துகளை மாத்திரம் நிய்யத்து வைக்கிறதும் ஆகிய இவ்விருபத்தேழும் தொழுகையில் முஸ்தஹப்புகளாயிருக்கும்.

## தொழுகையில் மக்ருஹுகள்-60.

அவைகளாகிறது 1-வது கழுத்திற்கிடக்குந் துப்பட்டாவின் சிம்புகளை யிரண்டு பக்கங்களிலும் நாலவிடுகிறதும், 2-வது ஸஜதாவிற்குப் போகும்போது சரீரத்திற் கிடைக்கிற துணிகளைத் தூக்கிக்கொள்கிறதும், 3-வது துணிகளைத் தொட்டுச் சேஷ்டை செய்கிறதும், 4-வது தன்னுடைய சரீரத்தைக்கொண்டு சேஷ்டை செய்கிறதும், 5-வது நீக்களிப்பான உடைகளை யுடுத்துகிறதும், 6-வது கிருஅத்தை விலக்காகிற ஷறுத்து கொண்டு பணங்காசுகளை வாயிலடக்கிக் கொள்கிறதும் (அப்படிக் கிருஅத்தை விலக்குமேயானால் தொழுகை முறிந்துபோகும்,) 7-வது தலையைத் திறந்து கொண்டு வெறுந் தலையாகிறதும், 8-வது மலோபாதை ஜலோபாதைகளை யடக்கிக்கொண்டு தொழுகிறதும், 9-வது அபான வாயுவை யடக்கிக் கொண்டு தொழுகிறதும், 10-வது தொழுகைக்கு முன்னிலே தலைமுடியைச் சேர்த்துக் கட்டுகிறதும், 11-ஸஜதாத் தலத்திலுள்ள கல்லுகளை யெடுத்தெறிகிறதும், (என்கிலும் ஸஜதாச் செய்ய முடியாத விஷயத்தில் ஒருதரஞ் செய்துக் கொள்ளலாகும்,) 12-வது கைவிரல்களை நெட்டி முறிக்கிறதும், 13-வது இரண்டு கைகளின்விரல்களைக் கோர்த்து முறுக்கிக்கொள்கிறதும் 14-வது இடுப்பைக் கை கொண்டு பிடித்து நெறிந்து நெட்டி விடுகிறதும், 15-வது அக்கம் பக்கங்களிலே முகத்தைத் திருப்பிப் பார்க்கிறதும் 16-வது அத்தஹிய்யாத்தி லிருக்கும்போது நாசிருப்பிருக்கிறதும், 17-வது ஸஜாதாவிலே ஆண் பிள்ளைகள் கொடுங்கைகளையும் பூமியிற்படும்படி வைக்கிறதும், 18-வது ஒருவனுடைய முகத்திற் கெதிரே தொழுகிறதும், 19-வது ஸலாத்திற்கு ஜவாபு கைகொண்டு சொல்லுகிறதும்

20-வது யாதாமொரு தங்கடமின்றி சம்மணங் கூட்டியிருக்கிறது. 21-வது கொட்டாயி யிடுகிறதும், 22-வது அப்படிக்கொட்டாவி வந்ததானால் கைகொண்டு மூடாமலிருக்கிறதும், 23-வது இரண்டு கண்களையும் மூடிக் கொள்கிறதும் (என்கிலும், கல்பு பரக்காகாம லிருப்பதற்காகக் கண் மூடுவதாகும்) 24-வது இமாமானவர் மிஹ்றாபுக்குள்ளே நிற்கிறதும், 25-வது உயிருள்ள வஸ்துக்களைபோர் சுரூபமெழுதப்பட்டவுடைகளை யுடுத்துகிறதும், 26-வது தொழுகிறவனுக்கு மேற்புறத்தில் அதாவது எதிரில் அல்லது வலது பக்கத்தில், அல்லது, இடது பக்கத்தில் மேற் சொல்லிய சுரூபமெழுதியவைகளை வைக்கிறதும், 27-வது ஆயத்துகளையும், தஸ்பீஹுகளையுங் கைகொண்டெண்ணுகிறதும், 28-வது பிஸ்மில்லை யிரைந்தோதுகிறதும், 29-வது தக்பீறை யிரண்டு தரம் மூன்று தரஞ் சொல்லுகிறதும், 30-வது பல்லிற் கிடையிலே ஒரு கடலைக்குங் குறைவான வஸ்துவு மிருக்கிறதும், (யாதாமொரு வஸ்துவை அதாகிறது விழுங்கிற வஸ்துவுங் கடலைப் பிரமாண்டமாயிருக்கிறது கொண்டு தொழுகை முறிந்துபோகும்), 31-வது தொழுகையுடைய ஸுன்னத்து களிருப்பத்துநான்கில் நின்றுமெதையேனு மொன்றை விடுகிறதும், 33-வது குற்ஆனை றுக்கூவில் முடிக்கிறதும், 33-வது ஸஜதாவிற் போகிறபோதிலே ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதாவென்றும், ஸஜதாவிலானபோது அல்லாஹு அக்பறென்றுஞ் சொல்லுகிறதும், 34-வது யாதொரு சங்கடமின்றி ஸஜதாவிற்காக முழங்கால்களைப் பூமியில் வைக்கிறதற்கு முன்னிலே இரண்டு கைகளையும் பூமியின்பேரில் வைக்கிறதும், 35-வது நிலையில் நிற்கிறபோது ஒரு காலின்பேரிலேயே பாரத்தைப் பொறுக்க நிற்கிறதும், 36-வது றுக்கூவல்லாததிலே கைவிரல்களாற் கட்டிக்கிறதும், 37-வது குற்ஆனைத் தீவிரமாக ஓதுகிறதும், 38-வது றுக்கூவுடைய நேரத்திலே தலையைப் புரட்டி முதுகுக்கு மேலாக்கிறதும் அல்லது தலையைப் புரட்டிக் கீழாக்கிறதும், 39-வது வாயிலூறுகிற உமிழ் நீர்களை வெளியிற் றுப்புகிறதும், 40-வது மோசாவைக் கழற்றுகிறது (ஆனால் அதைச் சிறிய செயல் கொண்டே யல்லாது பெரிய செயல்கொண்டு கழற்றினால் தொழுகை முறிந்து போகும்.)

41-வது தொழுகையில் பாத்திஹாவுக்கு முன்பாக மற்ற சூறத்துகளை யோதுகிறதும், 42-வது இரண்டு சின்ன சூறுக்களுக் கிடையில் ஒரு சூறுவை இரண்டாவது றக்ஆத்தில் விட்டு

விடுகிறதும், 43-வது முக்தியோதின சூறுவுக்கு மேலுள்ள சூறுவை யெடுத்தோதுகிறதும், அதாகிறது ஒரு றக்ஆத்தி லாவது, 44-வது தொழுகையிலே சிறு பிள்ளையைச் சுமந்து கொண்டிருக்கிறதும், 45-வது இமாமானவர் காலடிச் சத்தத்திற் காகவேண்டி றுக்கூவைத் தாமதப்படுத்திக் கொண்டு வழிபார்த்தி ருக்கிறதும், 46-வது முதல் றக்ஆத்தைக்காண இரண்டாம் றக் ஆத்தைத் தாமதப்படுத்துகிறதும், 47-வது தலைப்பாவை நுனியின் பேரிலே ஸஜதாச் செய்கிறதும், 48-வது வயிற்றைத் துடை யுடனும் துடையைப் பின்றட்டுடனும், பின்றட்டைப் பூமி யுடனுஞ் சேர்த்துக் கொள்கிறதும், 49-வது சட்டை, தொப்பி முதலியவைகளைக் கழற்றுகிறதும், அல்லது அவைகள்போற் கொற்றவைகளைப் போடுகிறதும், அது சிறு செயல் கொண்டா னாலுஞ்சரி, 50-வது முக்ததிகளுக்குச் சடைவு வருகிற மட்டிலும் இமாமானவர் தொழுகையை நீட்டித் தொழுகிறதும், 51-வது முக்ததிகளுடைய தீவிரத்திற்காக இமாமானவர் தொழு கையைச் சுருக்கமாகத் தொழுகிறதும், 52-வது பகலையிற் றொழுகிற நபில்த் தொழுகையிலே குர்ஆனை யிரைந் தோது கிறதும், 53-வது இமாமானவர் வாஜிபான கிறுஅத்தை யோதி னதின் பின்னர் திக்கின விடத்திலே முக்ததிகளே சொல்லிக் கொடுப்பார்க ளென்பதை யெதிர் பார்க்கிறதும், 54-வது இமா மானவர் அவர் ஓதும்படியான தொழுகையிலே ஸஜ்தாவுடைய ஆயத்தை யோதுகிறதும், ஆனால் ஸூறத்துடைய கடைசியிலே ஸஜதாவுடைய ஆயத்திருந்தாலொழிய, 55-வது பறுலான தொழு கையிலே ஒரு ஆயத்தைத் திருப்பி யோதுகிறதும், 56-வது இமாமானவர் றஹ்மத்தான ஆயத்தை அல்லது பயங்கரமான ஆயத்தை யோதும் போது முக்ததிகள் ஸதக்கல்லாஹு என்று சொல்லுகிறதும், 57 வது யாதாமொரு சங்கடமின்றிப் பறுலான தொழுகையிலே தூண்கள் பேரிலேனும் அல்லது மகளின் பேரி லேனுஞ் சாய்ந்து கொள்கிறதும், ஆனால் நபில் தொழுகையிற் சாய்ந்து கொள்கிறதும், மக்றூஹ் இல்லை 58-வது காசியை யுறுஞ்சிக் கொள்கிறதும், 59-வது வானத்தளவிலே தலையை யுயர்த்துகிறதும், பூமியளவிலே தலையைக் கவிழ்த்துகிறதும் ஆகிய இவ்வறுபதும் தொழுகையில் மக்றூஹுகளா யிருக்கும். இன்னுஞ் சில ரிவாயத்தின் படி இவைகளிற் சிலதை ஹறா மென்றும் சிலதை மக்றூ ஹென்றுஞ் சொல்லப்படுகிறது.

## தொழுகையின் முறிவுகள் 5

அவைகளாகிறது 1-வது யாதாமொரு பேச்சை மனுடருடனே பேசுவது போல பேசினாலும், 2-வது மனமுரண்டினாலாவது, அல்லது அறியாமற் றூக்கத்தின் பேரிலாவது பேசினாலும், 3-வது தனக்குக் கேட்கும்படியாக வெடிசிரிப்புச் சிரித்தாலும், 4-வது யாதாமொரு வஸ்துவைத் தின்றாலும், 5-வது மிகுதியான செயலைச் செய்தாலுமாகிய இவ்வைந்து காரியங்களாற் றொழுகை முறிந்து போகும்.

இன்னும் சங்கடத்தால் வாந்தி வந்தாலும் அஃ என்றாலும் உஃ என்றாலும், சங்கடமின்றியே கனைத்தாலும் தும்பினவனுக்கு யனஹமுக்கல்லா வென்று ஜவாபு சொன்னாலும், முஸீபத்தான சங்கதியைக் கேட்டு இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் என்று சொன்னாலும், சந்தோஷமான சங்கதியைக் கேட்டு அல்ஹம்து லில்லாஹி யென்று சொன்னாலும், இன்னுமிவைகளைப் போலுள்ள சொற் செயல்களைக் கொண்டு தொழுகை முறிந்து போகும்.

## ஹஜ்ஜு செய்கிறதுடைய விபரம்.

ஹிந்திராச்சியத்தில் நின்றும், எமன் ராச்சியத்தில் நின்றும் ஹஜ்ஜு செய்வதற்காக மக்கத்திற்கு வருகிறவர்கள் யலம்லம் என்கிற தலத்திலே குளிக்க இடம் பாடிருந்தால் குளித்துக் கொண்டு இஹ்றாம் கட்டிக்கொள்ள வேண்டும். அந்த இஹ்றாம் கட்டுகிற தெவ்விதமென்றால் தலையைத் திறந்து 7 அல்லது 9 முழமுள்ள புடவையை யுடுத்திக் கொண்டு இரண்டு றக்ஆத்து ஸுன்னத்துத் தொழுதுக் கொண்டுப் பின்னர் இந்தத் துஆவை யோத வேண்டும்.

## துஆ

அல்லாஹும்ம இன்னீ உரீதுல்ஹஜ்ஜ பயஸ்ஸிர்வுலீ வத்தக்கப்பல்ஹு மின்னீ யென்றோதிக் கொண்டு மக்கத்திற் குள்ளே போன பின்னர் தொழுகைகளடங்கலுக்குப் பிறகும், உயர்ந்த

தலத்திலேறும் போதும், இறங்கும் போதும் மற்றொரு காபிலாக்களான ஜனங்களைச் சந்திக்கும் போதும் மக்கத்திற் சேர்ந்தாலும், கஃபாவைக் கண்டாலும் தக்பீறும், தஹ்லீலும், தல்பியத்தும் அதிகமாகச் சொல்ல வேண்டும். தல்பியத்தாகிறது லப்பைக்க அல்லாஹும்ம லப்பைக்க லாஷரீக்கலக்க லப்பைக்க இன்னல் ஹம்து வன்னிஃமத்தலகவல்முல்க்க லாஷரீக்கலக்க என்றோதிக் கொள்ள வேண்டும். பள்ளிவாசலாகிய பாபுஸ்ஸலாம் வழியாகச் சென்று ஹஜ்றுல் அஸ்லதென்னுங் கல்லை முத்தமிட வேண்டும். ஆனால் ஜனங்களுடைய நெருக்கத்தால் கிட்டப் போவதற்குக் கூடவில்லை யானால் கையை அல்லது அஸாவை அதின் பக்கமாக நீட்டிச் சொல்லுகிறதாவது தக்பீறு, தஹ்லீலு, துஆக்களிவைகளாயிருக்கும்.

ஒருவன் எப்போது இஹ்றாம் கட்டினானோ அப்போதிலிருந்து மணம் பூசுகிறது, தையலுள்ள ஆடையணிகிறது, வேட்டையாடுகிறது முதலிய விரோதமான செய்கைகளைச் செய்யக்கூடாது. இன்னுமக்கத்தில் பாபுஸ்ஸலாம் வழியாகப் போனவுடனே "அல்லாஹும்ம ஹாதா ஹாமுக்க வமாமனுக்க வக்குல்த்த வக்கௌலுக்கல் ஹக்கு வமன் தகலஹு காண ஆமினன் அல்லாஹும்ம ஹர்ரீம்லஹ்மீவதமீ அலன்னாரி வக்னீ அதாபக்க" என்றும், அந்த வாயலின் பேரில் நிறைவுடன் "பிஸ்மில்லாஹி வஅலாமில்லத்தி றசூலில்லாஹி அல்ஹம்து லில்லாஹில்லதி பலகனீ ஸ்பைத்தஹுல்ஹராம் அல்லாஹும்ம புத்தஹலீ அபுவாப றஹ்மத்திக்க வஅத்கில்னீபிஹா" என்று சொல்லிப் பின்பு தவாபு செய்வதற்காகத் திரேகத்தையும், துணிகளையும் சுத்தி செய்து ஆடையணிந்துக் கொள்ள வேண்டும். பின்பு கஃபாவை ஏழுதரம் தவாபு செய்ய வேண்டும். அப்போது மேல் வேஷ்டியின் கரையை வலது கையின் கீழாக இழுத்து இரண்டு சிம்பையும் இடது தோள் மீது போட்டு ஹஜ்றுல் அஸவதென்னுங் கற்பகத்திலிருந்து வலது புறமாக ஆரம்பித்து ஹத்தீமுக்கு பின்னாலே ஏழு விடுத்தம் தவாபு செய்வதில் முந்தினமூன்று விடுத்தத்திலும் றமலு யஃனீ அடிகளை முடுகவைத்து இரண்டு புயங்களையும் அசைத்து தீவிரமாய் நடந்து தவாபு செய்ய வேண்டும், பின்பு மற்றநாலுத் தவாபிலும் றம்லில்லை மற்றச் செயல்களை யெல்லாம் அவ்விடத்தில் ஹாஜிகள் செய்வதைப் பார்த்து நடந்து கொள்ள வேண்டியது.

## ஹஜ்ஜுடைய பறுலுகள் 3

அவைகளாகிறது, 1-வது இஹ்றாம் கட்டுகிறதும், 2-வது அறபாத் தென்னுந் தலத்திலே ஹஜ்ஜுப் பிறைப்பிறந்த ஒன்ப தாம் நாள் குத்துபா ஓதி முடிகிறவரைக்கும் தரிபட்டிருக்கிறதும், 3-வது தவாபு செய்கிறதுமாகிய இம்மூன்றும் ஹஜ்ஜுடைய பறுலுகளா யிருக்கும்.

## மான், மரை, கோழி, கொக்கு, இவைகளை அறுக்கிறதில் பறுலுகள் 4

அவைகளில் 1-வது இஸ்லாமா யிருக்கிறதும், 2-வது நாய னுடைய திருநாமமாகிய பிஸ்மிலைச் சொல்லுகிறதும், 3-வது கழுத்து முடிச்சிக்கும் குரல் வளைக்கும் நடுவிலே அறுக்கிறதும், 4-வது நான்கு நரம்புகளைத் தெறிக்கிறதுமாகிய இந்நான்கும் அறுப்புடைய பறுலுகளா யிருக்கும்.

## அறுப்புடைய ஸுன்னத்துகள்.

அவைகளில் 1-வது உலூசெய்துக் கொள்கிறதும், 2-வது பதமான கத்திக் கொண்டு பதிவாயறுக்கிறதும், 3-வது கிபுலா விற்கு நேராக நிற்கிறதும், 4-வது அறுக்கப்பட்ட உயிர் பிராணிகளை யுசுப்ப விடாமற் பிடித்துக் கொள்ளுகிறதுமாகிய இந்நான்கும் அறுப்பிலே ஸுன்னத்துகளாம்.

## அறுப்புடைய முஸ்தஹப்புகள் 4.

அவைகளில் 1-வது அறுக்கப்பட்ட உயிர் பிராணிகளின் உயிர் போகிறமட்டிலும் கத்தியைத் தண்ணீரிலே கழுவாம லிருக்கிறதும், 2-வது அறுத்தவர் வாய் பேசாதிருக்கிறதும், 3-வது ஸுன்னத்துகளைக் கவனித்துக் கொள்கிறதும், 4-வது அறுப்பதற்கு முன்னும் அறுத்ததிற்குப் பின்னும் கலிமாவையும், ஸலவாத்தையு மோதுகிறதுடனே இரத்தம்பட்ட கத்திமுதலிய விடங்களைத் தண்ணீராற் றுப்புரவு செய்கிறதுமாகிய இந்நான்கும் அறுப்புடைய முஸ்தஹப்புகளாம்.

## அடியார்களுடைய தேகத்திலும் இருதயத்திலுமுள்ள நல்வினை, தீவினை, இவைகளை அறியும் விபரம்

அல்லாஹு தஆலா குர்ஆனிலே திருவுளமாயிருக்கிறான், அதை நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் நமக்குத் திருவுளமானார்கள். அஃதென்னவெனில், துப்புரவாகிறது ஈமானிற் பாதியாயிருக்கும். பொல்லாத செயல்களெல்லாம் நஜீஸாயிருக்கும். அந்தப் பொல்லாச் செயல்களான நஜீஸை யறிவதற்கு எட்டுக் கருமங்களுண்டு. அவ்வெட்டுக் கருமங்களில் 1.வது வஜீபனங்களைக்கொண்டு வயிற்றை நிறப்புவதாம். அப்படிவயிற்றை நிறப்புவதில் ஆறு ஆபத்துகளுண்டாகிறது. அதில் 1-வது அல்லாஹுத் தஆலாவுடைய பணி விடையிலுண்டான இன்பத்தைப் போக்கும். 2-வது படித்த பாடத்தை மறதியாக்கும். 3-வது பசியையுடைய பிறர்கள் பேரிலிரக்கமில்லாமற் போய்விடும். 4-வது இபாதத்துகளெல்லாம் கனமாகிவிடும். 5-வது இச்சைகளடர்ந் தேறிவிடும். 6வது பள்ளிவாசலென்னும் ஆண்டவனுடைய வீட்டிலே யாவர்களுந் தொழுகை முதலிய இபாதத்துகளிலிருக்கும் போது இவன் புழக்கடைக்குப் போகிறதும், வருகிறதுமா யிருப்பான் ஆகிய இந்த ஆறு ஆபத்துகளாம்.

2-வது அல்லாஹுத் தஆலா குறுஆனிலே திருவுளமாயிருக்கிறான் அதென்னவெனில், "முஹம்மதே! உலகத்தில் நான் சிலபேர்கட்கு வாழ்வைக் கொடுத்ததுகொண்டு அவர் களொருவருக்கு மொன்றுங் கொடாமற் பகில்குணங் காட்டுவார்கள். அவர்களதை நன்மையென்றெண்ணி யிருக்கத் தகுமல்ல. அவர்களுக்கது தீங்காகவே யிருக்கும்" என்பதாக.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள் பகில்குணமாயிருக்கிறது, நரகத்திலே முளைத் துண்டாகிற மரங்களில் நின்று மொருமரமாயிருக்கும். ஆனால் பகீல் தனஞ் செய்தவன் நரகத்திற்குப் போவானென்று. இன்னும் வேறே யொரு ஹதீதில் வந்திருக்கிறது, பகில்க் குணமாயிருக்கிற குறைஷியைப் பார்க்கிலும், ஸஹியாயுள்ள ஹபஷியானவன் அல்லாஹு ஸுபுஹானஹுவத்த ஆலாவினளவிலே யேற்றமாயிருக்குமென்று. ஆனால் அப்படிப் பகில்க்குணமான நோயைத்தீர்க்கிறது

அறிவும், அமலுமென்கிற ஔஷதமாயிருக்கும். அப்படியல்லாமற் பகில்குணத்தை மேலிட்டுக்கொண்டு வந்தால் அது ஆகிறத்திலே கைசேதத்தைக் கொடுக்கும்.

அதுவுந்தவிர துனியாவிலேதான் சுகித்தது போக மீத முதல்கள் தன்னுடனே பின்றொடர்ந்து கூடவரப்பேரகிறதுமில்லை. ஆகையாலொருவன் தான் தேடியமுதல்களைச்சகிக்கும் குணங்கொண்டு கொடைகொடுத்தாலவன் இருலோகத்திலு மீடேற்றம் பெறுவான். அப்படியல்லாமல் பகில்குணத்தை மேலிட்டுத் தான் தேடிய முதல்களைத் திரட்டி வைத்துவிட்டு இறந்து போனாலும் பின்னர் அந்த முதலானவைகள் அவனுடைய பெண்சாதியைக் கொள்ள வருகிற மாப்பிள்ளைக்கிரங்கி வீண்செலவுசெய்ய உதவுமே யல்லாது ஆகிறத்தி லிவனுக்கு யாதொரு பிரயோஜனத்தையுங் கொடாது. அப்போதவன் அங்கேகடக்கிற அமளிகளாலே பரக்கப் பரக்க முழித்துப் பலதிக்கும் பார்ப்பான். அப்படிப் பார்த்ததினால் யாதொன்றும் பயன்படமாட்டாது. ஆனாலிவனுடைய பொருளைப் பாவவழியிலே செலவிடுகிற பாவமு மிவனுக்குண்டாம்.

ஆனதால் பகில்க்குணமுள்ளவன் மார்க்கத்தை வேண்டியும், ஜீவதயாளத்தைவேண்டியும், தன்பொருள்களை யெடுத்துச்செலவு செய்து வரவேண்டும். அதற்கு மிவனுடைய நெஞ்சும், சரீரமும் உபயோகப்படமாட்டாது என்றாலும், வலோற்காரமாகவாவது அல்லைக்கொண்டு மனதையுஞ் சரீரத்தையும் அடக்கியாண்டு ஸஹீஹான குணத்தைவிடாமல் ஆதத்தாக்கிக் கொண்டு வர வேண்டும்.

3-வது பூமியிலே தலைமைத்தனத்தையும் தகுதியையும் உவந்திருக்கிறதைக்கொண்டு அல்லாஹுத் தஆலா குறுஆனிலே திருவுளமானன், நானுங்களுக்கு ஆகிறத்துப் பதவியை யுண்டாக்கி வைத்திருக்கிறேன். ஆதலால் துன்யாவிலே தலைமைத்தனத்தையுந் தகுதியையும் வேண்டாமென்று தள்ளிவிட்டு நடத்த முத்தக்கிமான் அடியாருக்குச் சுவர்க்கபதவியா யிருக்குமென்று.

நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானர்கள், தலைமைத் தனத்தை யுவக்கிறது கொண்டு கல்பிலே முனபிக்குக் குணங்களை முளைப்பிக்கும். இன்னும் யாதாமொருவன் தன்னைப் பெருமையாக்கி தலைமையை யுவந்திருந்து

இறுமாப்புக் கொண்டு அரசாட்சி செய்கிறது எதுபோலேயானல் அநேக ஆட்டுக்கூட்டத்தில் ஓர் ஓநாய் புகுந்து அழிமானஞ் செய்வது போலாயிருக்கும். அவ்வழிமானமாவது யாதெனில் இராஜகிருத்தியங்களுக்காக வேண்டிச் சிலருக்கு வரி இறைபோடு கிறதும் சிலரை ஏவற்பணி விடைக்காக்கிறதும் சிலரைத் தனக்கு அடக்கமாக இருக்கத் தேடுகிறதும் அப்படி யடங்கமாட்டாத வரைக் கொல்ல நினைத்து அதுபோலவே செய்து முடிக்கிறதும் சிலருக்குவரும் நஷ்டங்களை யறியாது தான் எதிர்படுத்திய கட்டளைப்படி நடக்கவில்லை யென்று தண்டித்து அவமானப் படுத்துகிறதும் இதைபோற்கொற்ற அநேக வம்பு துன்புகளைச் செய்வதினல் தலைமைத்தனத்தை யுவக்கிறது பெரிய நோயா யிருக்கும்.

அப்படித் தலைமைத்தனஞ் செய்வதாலுண்டாகும் நோயைத் தீர்க்கிறது பூமியிலே அநேகரெல்லாந் தலைமைத் தனங்கொண்டு மனிதர்களைத் தாழ்ச்சி செய்யச்சொல்லி யடக்கி யரசாண்ட இராஜாராஜக்களும் அழிந்துபோனர்களே அவ்வழிவு நமக்கு முண்டாகித் தானிருக்குதென்று அஞ்சிப்பயந்து தன்னுயிர்போல் மற்றுயிரையும் பாதுகாத்து ஆண்டவனேவற்படிக்கு நடக்குகிற நடத்தையென்னு மருந்தா யிருக்கும்.

4-வது துன்யாவை யுவந்திருக்கிறதைக்கொண்டு அல்லாஹுத் தஆலா குறுஆனிலே திருவுளமானுன், உங்களுடைய பொருளும் மக்களுந் துன்யாவுடைய செய்கைக்கு அலங்காரமாக இருக்கும். தெண்டிப்பும் உள்ளச்சமும் ஸாலிஹான அமலும், விசுவாசமும், பொறுமையும் ஆகிறத்தில் அலங்காரமாக இருக்குமென்றும் என்பதாக.

நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானுர்கள், துன்யாவும் துன்யாவில் உள்ளவையெல்லா முனியப்பட்டதாயிருக்கும். ஆனல் அல்லாஹுத் தஆலாவுக்காக வேண்டிச் செய்கிற வணக்க முதலிய நன்மைச் செயல்கள் தவிர மற்றவை யெல்லா முனியப்பட்டவையா யிருக்குமென்று. இன்னும் நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுள மானுர்கள், யாதாமொருவனுக்குத் துன்யாவென்னுஞ் சலிப்பு ...துதமாயுண்டாயிருக்கில் அவனுடைய கல்பிலே சில காரியம்

பற்றிப்பிடிக்கும். அந்த காரியமாவது தீராத யராக்கும் ஒரு போதுந் தீராத நீடித்த எண்ணமுமாயிருக்குமென்று.

5-வது வேறொரு ரிவாயத்தில் வந்திருக்கிறது; கியாமநாளை யிலே சிலபேர்கள் புறப்படுவார்கள். அவர்கள் செய்த நன்மைகள் பெரிய மலைபோலிருக்கும். என்றாலும் அவர்களையும் அல்லாஹுத்த ஆலா நரகத்திலே போடச்சொல்லி ஏவுவானென்றும். அஸ்ஹாபிமார்கள் நாயகத்தைப் பார்த்து, அல்லாஹுத் தஆலாவுடைய றசூலே! அவர்கள் தொழாதவர்களோ வென்று கேட்பார்கள். அதற்கு நபிநாயகம் அவ்வசுஹாபிமார்களைப்பார்த்து, "ஆம் என்னுடைய பிரியமுள்ள நேசர்களே! அவர்கள் தொழுதும் வருவார்கள், தஹஜ்ஜத்துந் தொழுவார்கள். என்றாலும் அவர்களுக்குச் சில முதல்களுண்டானால் அதை இராஜாளி பறவையைப் பிடித்தாற்போலே பிடித்துக்கொள்வார்கள். அதே தவிர ஏழையெளியோர் இனத்தார் ஜனத்தார்களில் இளைத்தவர்களுக்கு ஓர் உதவி ஒத்தாசையும் கையிருத்துஞ் செய்யமாட்டார்கள். அப்படிப் பட்டவர்கள் அவர்கள்" என்பார்கள்.

இன்னும் ஈசா அலைஹிஸ்ஸலா மவர்கள் ஒரு போது துன்யாவைக் காணவேண்டுமென்று நாடினார்கள். அப்போது துன்யா அநேக ஆடையாபரணம் பூண்டு அலங்காரத்துடனே குணமு மணமுமாகக் கெட்ட சூறத்துடனே கிழவிபோலவந்து ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்கள் முன்னிலே நின்றாள். அப்போது ஈஸா அலைஹிஸ்ஸலாம் அந்தக் கிழவியைப்பார்த்து, ஓய் துன்யாவே! நீ எத்தனை பேருக்கு வாழ்க்கை பட்டாயென்று கேட்டார். அதற்கு துன்யாவென்ற பெண், ஈஸா அலைஹிஸ் ஸலாத்தைப் பார்த்து, நான் வாழ்க்கைப்பட்ட என் புருஷன் மார்களை எண்ணத் தொலையாதென்று சொன்னாள். அப்போது ஈஸா அலைஹிஸ்ஸாலாம் துன்யாவென்ற பெண்ணைப்பார்த்து,. ஆ துன்யாவே! உன் புருஷன்மார்கள் உன்னை நேராய்த்தலாக்குச் சொல்லிவிட்டார்களா அல்லது நியிருக்க இவர்களெல்லா மவுத்தாகிப்போனார் களாவென்று கேட்டார்கள். அதற்குத் துன்யா வென்ற பெண் ஈஸா அலைஹிஸ்ஸலாத்தை பார்த்து, அத்தனை பேர்களையும் நான் என்னுடைய மருட்டிலகப்படுத்தி வைத்துக் கொண்டு வந்தேனே தவிர அவர்களொருவருமென்னை நேராய்த் தலாக்குச் சொல்லவில்லை யென்று சொன்னாள். அது கேட்டு ஈஸா

அலைஹிஸ்ஸலாமவர்கள் துன்யா வென்னும் பெண்ணைப் பார்த்து, அஜபாகிய துன்யாவே! போதும் போதும் இனி யிருக்கிற புருஷர்களை நீயறிந்து பரிமாறக் கொண்டுவா வென்று சொன்னார்கள்.

ஆதலால் துன்யாவுடைய ஆசையாகிறது பெரிய நோயா யிருக்கும். அந்த நோயை வெறுப்பென்னும் ஔஷதத்தால் தீர்க்க வேண்டும். மேலுக் துன்யாவாகிறது ஆகிறத்துக்கு வேளாண்மைத் தலமாகவும் யாத்திரை யோறமன் விடுதிவிடுந் தலமாகவு மிருக்கும். ஆனபோதே துன்யாவான குதிரைக் காரன் தரித்தெழும்பும் ஓர் மன்சில் போலும், ஆகிறத்தானது அந்த யாத்திரையாளி இருப்பதற்குக் குறிக்கப்பட்ட தலம் போலும் மிருக்கும். இதன் மத்தியில் ஒரு பணங்கண்டெடுத்தால் அப்பணத்தை யாத்திரையாளி குறிக்கப்பட்ட தலம்போலும் இருக்கும். இதன் மத்தியில் ஒரு பணம் கண்டு எடுத்தால் அப்பணத்தை யாத்திரையாளி குறிக்கப்பட்ட தலத்திற்கு சுமந்துக் கொண்டுபோக முடியாது. ஆதலால் அதைத் துன்யாவிலேயே கைறு கயிருத்துக் கொடுத்து விட்டால் ஆகிறத்திலே ஒன்றுக்கு எழுபது லாபத்துடனே கிடைக்கு மென்று சொன்னார்கள்.

5-வது பெருமை செய்கிறதைக் கொண்டும் அல்லாஹுத் தஆலா குறுஆனிலே திருவுளமானன், பெருமையுக் தகுதியும் எனக்குள்ளதா யிருக்கும். அதைக் கொண்டும் யாதாமொருவன் இகழுவானகில் அவனை நான் பிடித்துப் போடுவே னென்று சொன்னன்.

அதின்படி நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள், யாதாமொருவன் இருதயத் திலே ஒரு கடுகுஅளவு பெருமையைக் கொண்டு சுவர்க்கம் புகுதவு மில்லை, புகுத எதுவுமில்லை. ஆதலாற் பெருமையுக் தகுதியுங் கொண்டு நடந்தவர்கள் கியாமநாளையிலே எறும்புபோலே படையுண் டாக்கப்பட்டு நடப்பவர்களுடைய கால்களிலேமிதிபடுவார்கள். இது தவிர இன்னும் பெருமை செய்வதினலே 3-ஆபத்துகளுண்டாகும். அதிலே 1-வது அல்லாஹுத் தஆலாவுடனே இசுனுகிறதும், 2-வது ஒரு ஹக்குகளைக் கொண்டு மனிதர்க ளெல்லாரையும் கண் குறைச்சலாகப் பார்க்கிறதும், 3-வது இடையிலே நற் குணங்களை மறந்துபோகிறதுமா யிருக்கும். அந்தப் பெருமை யாகிய நோய் தீருகிறதற்குச் செய்யும் ஔஷதம் தன்னைத்தான் விசாரித்துக் கொண்டு தன்னைத் தானறிகிறதா யிருக்கும்.

அப்படித் தன்னைத் தானறிகிறதாவது யாதெனில் ஒரு அறுகம்புல் நுனியிலே தொங்குகின்ற பனித்துளி போன்ற அருவருத்த நீரினாலே படைப்புண்டாக்கப்பட்டு அது திரண்ட இரத்தக் கட்டியாகி அந்த இரத்தக்கட்டி சதைக்கட்டியாகிய அந்தக் கட்டிக்குக் கேள்வியும், பார்வையும், எண்ணமும், உறுப்பும், ஹயாத்தும், பெலனுமில்லாம லிருக்குங் காலத்திலேயுந் தாயின்கற்ப அரையினுங் காப்பாற்றிப் பின்னர் சகல வுறுப்பும் ஹயாத்துங் கொடுத்து உலகத்திலே பிறப்பித்து இருக்குங்கால மெல்லாம் வருகிற பலபல இடைஞ்சல் ஆபத்து பசிதாகம் வயிறு முதலிய வுறுப்புகளைச் சுமந்து திருயத் தாக்கத்தும் ஆகிய இவைகளோடு கண்ணிமை கொட்டி விழிக்கவும், நாளொன்றிற் கிரண்டு மூன்று தரம் உண்ண அன்னமும், மானக் காப்பாத்து றதற்கு உடுத்த உடையும் புத்தி புரண்டு போகாமற் கண்டறிகிற தற்கு வேதகட்டளையும் தன்னை யறிகிற அறிவையுங் கொடுத்துக் கடைசியில் மவுத்தையும் கொடுத்தானே அந்த நாயனை வணங்காம லிருந்தால் மவுத்தாகி யிப்போது அடக்கப்பட்ட கபுருக்குழியிலே இடஞ்சலாகி மஹ்ஷறிலே கேள்வி கணக்கு கேட்கப்பட்டுச் சுத்த வாளிகளா யிருக்கிற சுவர்க்கத்திலே சேர்த்து அலங்காரமாக வைக்கப்படுமென்று. குற்றவாளிகளா யிருக்கில் நரகத்திலே செய்த குற்றத்திற்குத் தகுந்தபடி நாய் முதலிய மிருக ஜாதி யுருவமாக அதாபு செய்யப்படு மென்றும் அறிந்தவன் மேற்சொன்ன மேன்மையும் தகுதியும் தனக்குத் தகுமல்ல வென்று பார்த்து மல்லவென்றுந் தள்ளிடுவான்.

7-வது தன்னை மதிப்புச் செய்கிறதைக் கொண்டு அல்லாஹுத ஆலா குருஆனிலே திருவுளமானான். சில பேர்கள் ஹலாக்காகிப் போகிறதில் நின்று முள்ளதை விசாரித்திருப்பார்களென்று.

நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லந் திருவுளமானார்கள். நீங்கள் ஒரு பாவத்தையுஞ் செய்யாதிருக்கிலும் உங்களிடத்தில் எல்லாப் பாவத்தில் நின்றுமொரு பெரும் பாவ முண்டாகுதே யென்று சொல்லி, ஆயிஷா நம்பிராட்டியாரவர்களைப் பார்த்து, மனிதரில் தனித்தவன் யாராயிருப்பானென்று கேட்டார்கள் அதற்கவர்கள் நபிநாயகத்தைப் பார்த்து யாதாமொருவன் தன் தாய் செய்கிறதெல்லாம் நன்மையென்று விசாரித்

திருப்பானே அவனுக யிருக்கு மென்று சொன்னுர்கள். ஆனதி ஞலே தன்னே மதிப்புக் கொள்ளுகிறது பெரிய பிணியா யிருக்கும். அந்தத் தன்னே மதிப்பாகிற பிணி தீருகிறதற்கு அல்லாஹுத் தஆலா ஒருவனேத் தவிர எல்லா வஸ்துகளும் அழிந்து போகுமென்று தன்னே லோகத்தி லிருக்கிற கேமித்த நாள் வரைக்குந் தாழ்ந்து கிடக்கிறதா யிருக்கு மென்றும்.

இன்னும் நபிநாயகந் திருவுளமானுர்கள், கியாமநாளேயிலே சில அறிவாளர்கள் வருவார்கள். அவர்களேயும் நரகத்தில் போடப்படும். அப்போதந்த அறிவாளர்களுடைய குடல்க ளெல்லாம் வயிற்றைப் பீறிக் கொண்டு வெளியாகிக் கீழே விழுந்து புரண்டு இழுபட்டுக் கொண்டு கிடக்கும். அவர்களே நீங்கள் யாரென்று கேட்டவர்களுக்கு அவர்கள் நாங்களாகிறது துன்யாவிலே நன்மைகளே ஏவிக் கொண்டு தீமைகளே விலக்கிக் கொண்டு மிருந்தோம். அதுவுந் தவிர நாங்கள் செய்கிற தெல்லாம் நன்மை யென்று, யாதாமொரு தீமையில்லே யென்றுந் தன்னே மதிப்புக் கொண்டு நடந்து வந்தோமென்றும் சொல்லுவார்கள்.

## கிஸ்ஸா.

மூஸா அலேஹிஸ்ஸலா மவர்கள் காலத்திலே றைஹா னென்கிற ஊரிலிருந்த, பல்ஹாமிபுனுபாகூறென்னு மஷாயிகா னவர் தன்னுடைய தலேயை நிமிர்த்து மேலே பார்த்தாராகில் ஏழு வானமும் நீராயுருகி வடிந்து விடும். அப்பேர்ப்பட்ட மஷாயி கானவர் மவுத்துடைய நேரத்தில் அவருடைய ஈமான் அவர் தன்னே மதிப்புக் கொண்டதினுலே யல்லவா தறிபட்டு போனது

இன்னும் இபுலீசாகிறவன் அல்லாஹுத் தஆலாவை யுள்ள படி வணங்கி ஏழு வானத்திலு முள்ள மலக்குகளுக் கெல்லாம் அறிவு சொல்லுகிறவனுயு மிருந்தான். அப்படி யிருந்தும் அவன் தன்னே மதிப்புக் கொண்டதினுலல்லவா காபிருகி அல்லாஹு தஆலாவுடைய றஹ்மத்தை விட்டும் விலக்குண்டு நரகத்திற் புகுகிறவர்களுக் கெல்லாம் முதலில் நரகம் புகுகிறவனுயும் போனுன். ஆதலால் தன்னே மதிப்புக் கொண்டிருப்பவர்களுக் கெல்லாம் இவ்விதம் வந்து சம்பவிக்கு மென்பதை எண்ணிப் பயந்து கொண்டிருக்க வேண்டும்.

8-வது முகத்திச்சைக்காகவும் கீர்த்திக்காகவும் நடக்கிறதைக் கொண்டு அல்லாஹுத் தஆலா குறுஆனிலே திருவுளமானன், சில பேர்கள் முகத்திச்சைக்காக வேண்டித் தொழுவார்கள். அப்படித் தொழுகிற பேர்களுக்கு வயிலென்கிற வோடை நரகமா யிருக்கும். இன்னும் அல்லாஹுத் தஆலா திருவுளமானன் தன்னைப் படைத்தானுகிற நாயகனுடைய திருக்காட்சி காண வேண்டு மென்கிற ஆதரவு வைத்து வணங்குகிறவன் தன்னுடைய நாயனைக் கலப்பற்றுதலாக வணங்குகிற வணக்கத்திலே முகதாட்சிக்காக வென்ற நினைப்பு வைக்காதிருக்க வேண்டுமென்று.

அதின்படி நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானர்கள், அடியான் செய்கிற நன்மையிலே ஒரு அணுப்பிரமானமாவது முகத்திச்சைக்காக வென்கிற நினைப்பு வைத்தானுகில் அவன் வணங்குகிற வணக்கம் கையேற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இன்னும் முகத்திச்சைக்காக அறிவு சொல்லப்பட்ட அறிவாளர்களும் பொருளுள்ள சீமான்களும், ஸதக்காக் கொடுப்பவர்களும் பீஸபீல்ச் செய்பவர்களும் நரகத்தையுடையவர்களா யிருக்கு மென்று.

ஆதலால் முகத்திச்சையாகிறது மனிதர்கள் தன்னை யுவப்பாகவும் ஏற்றமாகவும் கொண்டாடுவதற்காக வேண்டி வணங்குகிறதும் பல பல நன்மைகள் செய்கிறதுமா யிருக்கும். அப்படி முகத்திச்சைக்காகச் செய்கிற செயலிலே மூன்று காரிய முண்டாகும். அதிலே முதலாவது வணக்கத்துடைய துவர்கக்கத்திலே முகத்திச்சைக்காக வென்கிற நிய்யத்து வந்து நேரிடுமே யானல் அதனலே பாவ முண்டாகும். அப்படிப் பாவ முண்டான போது அவனுக்கு யாதாமொரு பேறுமில்லாமற் போய்விடும். மறுபடி வணங்குகிற தென்பதற்கு அடையாள மாகிறது மனிதர்கள் காண்கின்ற இடத்தி லெல்லாம் அதிகமாக வணங்குகிறதும் காணத இடங்களிலே வணக்கத்தை விடுகிறதுமா யிருக்கும்.

2-வது நடுவணக்கத்திலே முகத்திச்சைக்காக என்கிற நிய்யத்து நேரிடுமானலும் அந்த வணக்கத்திலும் யாதொரு பேறுமில்லாமற் போய்ப் பாவ முண்டாகும். 3-வது வணக்கமுடிவிலே முகத்திச்சைக்காக என்கிற நிய்யத்து நேரிடுமாகில் அந்த வணக்கத்தினலும் யாதாமொரு பேறுமில்லாமற் போய்ப் பாவ

முண்டாகும். ஆதலால் முகத்திச்சையாகிற தெல்லாம் பெரிய மிடியாயிருக்கும். அந்த மிடி தீருகிறது யாதெனில் வணக்கத் திலே முகத்திச் சைக்காகக் கீர்த்திக்காக என்ற நிய்யத்து நேரிடு மேயானால் அது அல்லாஹு தஆலாவைப் பரிகாசம் செய்கிறது போலாயிருக்குமென்று. அந்த நிய்யத்து வைக்காமலுந் தன்னைப் பெருமையாக வெண்ணங் கொள்ளாமலும் தன்னுடைய உரித்துக் கொண்டே மனிதருடைய புகழ்ச்சி கொள்ளாமலிருக்கிறதும், அல்லாஹு தஆலாவுடைய முனிவு கொண்டு பிரயோசனத்தைக் கொள்ளாம லிருக்கிறதுமாகிய இவைகளெல்லாக் தனக்குக்கேட்க இருக்குமென்று விசாரித்துக் கொள்ளுகிறதாயிருக்கும்.

ஆனால் சிலகனிகள் தின்பதற்கு மிகவு மின்பமா யிருக்கும். அந்தக் கனிகளினாலே நஞ்சைக்கலந்திருந்தால் தின்ன ஆகாது. அதுபோலே தக்குவாவென்கிற கனியைக் கொண்டுள்ள இன்பத் திலே முகத்திச்சையென்கிற நஞ்சைக் கலந்தால் அது முகபங்க மாகிவிடு மென்கிறதை யறிந்துகொண்டு மேற்சொன்ன எட்டு காரியங்களிலே மிகவும் பயபக்தியாய் நடக்க வேண்டும். அப்படி நடப்பவர் களனைவோரையும் அல்லாஹு தஆலா கிருபை செய்து சுவர்க்க வாழ்வுக்குரியாக்கி வைப்பானாகவும். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

## ஹதீது.

நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், கியாம நாளையிலே என்னுடைய உம்மத்து களைப் பனிரண்டு வகையாக எழுப்பப்பட்டு வருவார்கள். 1-வது வகையார் காலில்லாமல் கபுறில் நின்றெழும்பி வருவார்கள். அவர்கள்தான் பிறத்தியாருடைய மனதை கோவித்தவர்களா யிருக்கும், 2-வது வகையார் பன்றியைப்போலுங் கபுறில் நின் றெழும்பி வருவார்கள். அவர்கள்தான் தொழுகையை இளக் காரமாக கண்டவர்களாயிருக்கும், 3-வது வகையார் வயிறெல்லாம் பாம்புந்தேளும் பற்றிப் பிடித்தவர்களாகக் கபுறில் நின்றெழும்பி வருவார்கள். அவர்கள் தான் ஸக்காத்துக் கொடாதவர்களா யிருக்கும். 4-வது வகையார் உடல் சொரிந்து வாயினாலே சீழும் இரத்தமும் வடிகிறவர்களாய் கபுறில் நின்றெழும்பி வருவார்கள். அவர்கள்தான் வாங்குவதில் விற்பதிற் பொய்ச்சத்தியஞ் செய்தவர்

களாயிருக்கும். 5-வது வகையார் மேலெல்லாம் ஊனும் இரத்தமும் பலவேசமாய் விடக்கு நாற்றத்தோடும் கபுறில் நின்றெழும்பி வருவார்கள். அவர்கள் தான் மனிதற்கு மறைந்து அல்லாவுக்கு பயப்படாமல் பாவஞ் செய்தவர்களாயிருக்கும், 6-வது வகையார் நாக்கைப் பிடறியாலே இழுக்கப்பட்டு பின் கட்ட கட்டுண்டு கபுறில் நின்றெழும்பி வருவார்கள். அவர்கள் தான் பொய்சாட்சி சொன்னவர்களாயிருக்கும், 7-வது வகையார் வாயிலே நாக்கில்லாமல் சீழும் இரத்தமும் வடியும்படியாய்க் கபுறில் நின்றெழும்பி வருவார்கள், அவர்கள் தான் கண்ணாலேகண்ட காட்சியைச் சொல்லாமல் மறைத்தவர்களாயிருக்கும், 8-வது வகையார் தலையைக் கவிழ்த்து இரண்டு காலையும் பிடரியின்பேரிலிழுத்துக் கட்டுப்பட்டு அபத்திலே சீழும் இரத்தமும் வடிந்தோட அருவருத்த துர்நாற்றத்தோடும் கபுரில் நின்றெழும்பி வருவார்கள். அவர்கள் தான் எத்தீம்களுடமையை மோசம் செய்தெடுத்துக் கொண்டவர்களாயிருக்கும். 9-வது வகையார் உடலெல்லாம் வெண்குஷ்டங் கருங்குஷ்டமுள்ளவர்களாய்க் கபுறில் நின்றெழும்பி வருவார்கள். அவர்கள்தான் தாய்தகப்பனுடைய மனத்தை நோவித்தவர்களாயிருக்கும். 10-வது வகையார் கண் மறைந்து மாட்டுக் கொம்பு போலே பற்கள் நீண்டு உதடு வடிந்து கபுறில் நின்றெழும்பி வருவார்கள். அவர்கள் தான் கள், சாராய முதலிய வெறிவஸ்துகளை யுண்டவர்களாயிருக்கும் 11-வது வகையார் தங்கள் முகம் பதினாலாம் பிறைபோற் பிரகாசிக்கக் கபுறில் நின்றெழும்பி அறுஷின்கீழே நடந்து மின்வெட்டி மறைவதுபோலே ஸிறுத்தில் முஸ்தக்கீம் பாலத்தையுங் கடந்து சுவர்க்கவாதிகளாய் வருவார்கள். அவர்கள்தான் ஐந்து நேரத் தொழுகையையும், குத்பாத் தொழுகையையும் தொழுது அல்லாறசூல் சொன்னபடி ஏவலையெடுத்து விலக்கலை விட்டு நடந்தவர்களாயிருக்கும். அவர்கள் சந்தேகமின்றிச் சொர்க்கபதி சேருவார்கள். அது போலே அல்லாஹுத்தஆலா நம்மனைவோரையும் சுவர்க்கபதி சேர்ப்பானாகவும். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

அல்லாஹுத்தஆலா திருவுளமானான், என்னுடைய அடியானே, ஐந்து காரியம் உங்களிலும் ஐந்துகாரியம் என்னிலுமுள்ளதென்று. அதிலே 1-வது காரியம் தௌபாச் செய்வது உங்களிலே, பிழையைப் பொறுக்கிறது என்னிலே. 2-வது காரியம் பணிவிடை

செய்கிறது உங்களிலே, சுவர்க்கத்தை தருகிறது என்னிலே, 3-வது துஆக் கேட்கிறது உங்களிலே, துஆவைக் கபூல்செய்கிறது என்னிலே. 4-வது செய்நன்றியறிகிறது உங்களிலே, வாழ்வு தருகிறது என்னிலே. 5-வது கலாவுக்கும் பொருத்தமாயிருக்கிறது உங்களிலே, கலாவை கற்பிக்கிறது என்னிலேயாகயிருக்கும்.

ஆதலால் என் கற்பனைகளைப் பொருந்தாமலும் நான் தந்த வாழ்வாகிய செய்நன்றியறியாமலும், நான்விடுகிற பலாய்களுக்குப் பொறுமை செய்யாமலும் நான் தந்த இரணத்திற்குக் கிறுஅத்துச் செய்யாமலு மிருப்பார்களே அவர்கள் என்னுடைய வானத்திற்குக் கீழே யிருக்கத் தகுதியல்ல. ஆனல் என்னையன்றி யுங்களுக்கு வேறே நாயனுண்டாயிருக்கில் தேடிக்கொள்ளலா மென்று திருவுளமானுன்.

இஃதறிந்த அபா எசீதுல் புஸ்தாமி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு போது அல்லாஹு தஆலாவிடத்தில், ஆண்டவனே! உன்னுடைய பொக்கிஷத்தில் இஸ்லாத்து முண்டோ வென்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹு தஆலா திருவுளமானுன், ஆய் அபா எஸீதே, என்னிடத்திலே ஐந்து காரியமில்லை யென்றும் அவ்வைந்து காரியத்தில் 1-வது என்னிடத்தில் பணமுறிவில்லை, 2-வது இராஜகுமாரனுக இருந்தபோதிலும் நான் சொல்ல அஞ்சமாட்டேன் 3-வது ஒருவலைக் கொண்டு நான் பயப்படுகிறதில்லை, 4-வது ஒருவரைத் தாவென்று நான் கேட்கிறதுமில்லை 5-வது என்னிடத்தில் யாதாமொருவன் கேட்டால் நானில்லையென்கிறது மில்லையென்று சொன்னுன்.

நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானுர்கள், ஐந்து காரியத்தை ஐந்து காரியந் தின்றுபோடு மென்றும் அவ்வைந்து காரியத்தில் 1-வது பொய் சொல்லுகிறது இரணத்தைத் தின்றுபோடும். 2 வது ஸதக்காக் கொடுக்கிறது, பலாய்களைத் தின்றுபோடும். 3-வது வியாகூலம் ஹயாத்தை தின்றுபோடும். 4-வது குபாடம் நன்மையைத் தின்றுபோடும். 5-வது புறம் பேசுகிறது கலப்பறுதலாகச் செய்கிற நல்ல அமலைத் தின்றுபோடும். ஆதலால் துன்யாவில் ஐந்து காரியத்தை விரைவிற் செய்து கொள்ளுங்கள், அவ்வைந்து காரியத்தில் 1-வது கலாவாக முற்பட விரைந்து வக்த்துடனே தொழுகிறதும், 2-வது

மவுத்துக்கு முன்னே விரைந்து தௌபாச் செய்கிறதும், 3-வது பெண் பிள்ளை யுண்டாயிருக்கில் அதை விரைந்து நிக்காஹு செய்து கொடுக்கிறதும், 4-வது கையில் முதலுண்டா யிருக்கில் விரைந்து கடனைக் கொடுக்கிறதும், 5-வது மையத்துண்டானல் விரைந்து அடக்கிறதும் ஆகிய இவ்வைந்துமா யிருக்குமென்று சொன்னார்கள்.

அல்லாஹு தஆலா தாவூது அலைஹிஸ்ஸலா மவர்களுக்குச் சொன்னன், என்னுடைய தாவூதே, நான் ஐந்து நல்லகாரியத்தைத் தணிவான ஐந்து காரியத்துடனே வைத்தேன். அதிலே மனிதர் நல்ல காரியத்தை விட்டு விட்டுத் தணிவான காரியத்தைத் தேடுவார்கள், அந்தத் தணிவான வைந்து காரியத்தில் 1-வது வரிசைபெருகிற விதத்தைத் தாட்சியில் வைத்தேன். அதை மனிதர் விட்டு விட்டுப் பெருமையைத் தேடுவார்கள், 2-வது இரகசியத் தொழுகையை முழிப்பில் வைத்தேன். அதை மனிதர்கள் விட்டு விட்டு நித்திரையைத் தேடுவார்கள் 3-வது அறிவைப்பசியில் வைத்தேன். அதை மனிதர் விட்டு விட்டுத் துன்யாவில் வயிற்றை நிறம்பத்தேடுவார்கள். 4 வது ஸகாத்தைச் சுவர்க்கத்தில் வைத்தேன். அதை மனிதர்கள் விட்டு விட்டுத் துன்யாவில் வாழ்வைத்தேடுவார்கள் 5-வது என்னுடைய திருவுளத்தை மனதில் வைத்தேன். அதை மனிதர்கள் விட்டு விட்டு மனதிற் கொத்த வண்ணம் செய்வார்கள், இவ்விதமானவர்கள் ஒரு நாளும் சுவர்க்கம் புகுத மாட்டார்கள்.

நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லந் திருவுளமானர்கள், பிற்காலத்திலே என்னும்மத்துகள் ஐந்து காரியத்தை மறந்து விட்டு ஐந்து காரியத்தை யுவப்பார்கள். அதிலே 1வது கபுறுக் குழியை மறந்து விட்டு மச்சுமாளிகையை யுவப்பார்கள். 2-வது மவுத்தை மறந்து விட்டு ஹயாத்தை யுவப்பார்கள். 3-வது நல்வினையை மறந்து விட்டுத் தீவினையை யுவப்பார்கள். 4-வது படைத்த நாயனை மறந்துவிட்டு மனிதரை யுவப்பார்கள். 5 வது உண்மையை மறந்து விட்டு பொய்யை யுவப்பார்கள்.

இன்னும் மனிதர்களைக் கபுறுக்குழி நாளொன்றுக்கு ஐந்து தரம் ஐந்து விதமாக சொல்லிக் கூப்பிடப்படும். அதிலே

1-வது ஆதமுடைய மக்களே நானுகிறது தனித்த வீடாயிருக்கும். ஆதலால் என் வீட்டுக்கு வரும்போது துணை தேடிக் கொண்டு வாருங்களென்று கூப்பிடும். அந்தத் துணையாகிறது குறுஆன் ஓதுகிறதா யிருக்கும், 2 வது நானுகிறது இருட்டு வீடாயிருக்கும் ஆதலால் என் வீட்டுக்கு வரும் போது விளக்குக் கொண்டு வாருங்க ளென்று கூப்பிடும். அந்த விளக்காகிறது இரகசிய தொழுகையா யிருக்கும், 3-வது நானுகிறது மண் வீடாயிருக்கும் ஆதலால் என் வீட்டுக்கு வரும் போது படுக்க விரிப்புத் தேடிக் கொண்டு வாருங்களென்று கூப்பிடும். அந்த விரிப்பாகிறது கலப்பறச் செய்கிற அமலாயிருக்கும், 4-வது நானுகிறது வெறும் வீடா யிருக்கும் ஆனதால் என் விட்டுச்கு வரும் போது புதையல் கொண்டு வாருங்க ளென்று கூப்பிடும். அந்தப் புதையலாகிறது ஸதக்காக் கொடுக்கிறதா யிருக்கும், 5-வது நானுகிறது பாம்புத் தேளுமுள்ள வீடாயிருக்கும். ஆதலால் என் வீட்டுக்கு வரும் போது தடி கொண்டு வாருங்களென்று கூப்பிடும். அந்தத் தடி யாகிறது கலிமாஷஹாதத்தா யிருக்கும்.

இன்னும் மனிதர்களுடைய சரீரத்திலே நாலு மாணிக்க முண்டாயிருக்கிறது, அதிலே 1-வது புத்தி, 2-வது அறிவு, 3-வது தீனை யுவந்திருத்தல், 4-வது கலப்பறச் செய்கிற நற் செயல்கள். ஆனால் கோபம் புத்தியை மாற்றிப் போடும். ஆசை அறிவை மாற்றிப்போடும். துற்செயல் தீனை மாற்றிப்போடும். பகில் கலப்பறச் செய்கிற நற்செயலை மாற்றிப்போடு மென்று சொன்னார்கள்.

இன்னும் நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள், சொர்க்கலோகத்திலே யோர்மர முண்டாயிருக்கிறது. அந்த மரத்தின் பெயர் அத்தஹிய்யாத்து, அதின் மேல் ஓர்பட்சியுண்டா யிருக்கிறது, அதின் பெயர் அஸ்ஸலாத்து, இன்னும் அம்மரத்தின் கீழே யோர் ஆறுண்டாயிருக் கிறது. அதின் பெயர் அத்தயிபாத்து. அதின் காரியமாகிறது யாதா மொருவன் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி என்று சொன்னானுகில் அம்மரத்தின் மேலே இருக்கிற பக்ஷி அவ்வாற்றிலே விழுந்து முங்கி யெழுந்து மறுபடியு மரத்தின் மேற்போய் நின்று இரண்டு இரகுகளையும் உதறும். அதிலே எத்தனை துளித் தண்ணீர் தெறிக்குமோ அத்தனை

எண்ணங் கொண்டுள்ள மலக்குகளை அல்லாஹு தஆலா படைப்பான். அந்த மலக்குக ளெல்லாரும் கியாம நாளளவும் கலிமாச் சொன்னவனுடைய பிழைகளை யெல்லாம் பொறுக்கத் தேடுவார்களென்று திருவுளமானார்கள்.

அல்லாஹு தஆலா குறுஆனிலே திருவுளமானான், அஃது யாதெனில் வயில் என்கிற ஓர் ஓடையுண்டும். ஆனால் மனிதர்கள் பெருநெருப்பைக் கண்டாலெப்படிப் பயப்படுகிறார்களோ அப்படி அந்த ஓடை நெருப்புக்கு மற்ற நரகங்களெல்லாம் பயப்படுகிற துடனே நாள் ஒன்றிற்கு 70-வது தரம் அந்த வோடை நெருப்பு எங்கள் மேலே விழாமற் காத்துக் கொள் ஆண்டவனே யென்று துஆச் செய்யுங்கள், அந்த ஓடையிலே தான் அந்தந்த வக்திற் றொழாமல் விடுகிற பாவிகளைப் போட்டு அதாபு செய்யப்படு மென்று சொன்னான்.

அதின்படி நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள், தொழுகை யில்லாதவர்களை அல்லாஹு தஆலா பதினைந்து வகையான அதாபு படுத்தி வைப்பான். அதிலே துன்யாவில் 6-வித அதாபும் மவுத்துடைய நேரத்திலே 3-வித அதாபும் கபுறுக்குழியிலே 3-வித அதாபும், மஹுஷரில் 3-வித அதாபுமா யிருக்கு மென்று சொன்னார்கள். அப்போது அசுஹாபிமார்கள் நபி நாயகத்துடனே, நாயகமே துன்யாவிலுள்ள ஆறுவித அதாபு என்னவென்று கேட்டார்கள். அதற்கு நபிநாயகம் சொன்னார்கள், துன்யாவிலுள்ள 6-வித அதாபுகளில் 1-வது தொழுகை யில்லாதவனுடைய நல்ல குணத்தையும் பறித்து அவனிரணத்தையு மாற்றி அவ்விரணத்தி லுண்டான பறக்கத்தையு மாற்றிப் போடப்படும். 2-வது தொழுகை யில்லாதவனுடைய ஹயாத்துக் குறைந்து போகும் 3-வது தொழுகை யில்லாதவனுடைய முகத்திலே சாலிஹான அடியாருடைய அடையாளம் யிருக்கமாட்டாது. 4-வது தொழுகை யில்லாதவன் இஸ்லாத்தி லுள்ளவனென்று சொல்லத் தகுதியுமில்லை 5-வது தொழுகை யில்லாதவன் கேட்கிற துஆவும் கபூலாக்க மாட்டாது. 6-வது தொழுகை யில்லாதவன் மவுத்தாகிற நேரத்திலே அவனுடைய உயிரை மிகுந்த வருத்தமான சங்கடத் துடனே வாங்கப்படுமென்று சொல்லக்கேட்டு.

மறுபடியும் அசுஹாபிமார்கள் நபி நாயகத்துடனே, நாயகமே மவுத்துடைய நேரத்திலுண்டாகிற 3- அதாபென்ன வென்று கேட்டார்கள். அதற்கு நபிநாயகம் சொன்னார்கள் மவுத்துடைய நேரத்திலுள்ள அதாபில் 1-வது தொழுகை யில்லாதவன் மவுத்துடைய நேரத்தில் அல்லாஹுத ஆலாவுடைய றஹ்மத்தை விட்டு தூரப்படுவான், 2-வது தொழுகை யில்லாதவன் மவுத்துடைய நேரத்தில் நரகத்தையும் நரகத்து ஸபானியாக்களையும் கண்டேயல்லாமல் மவுத்தாக்க மாட்டான் 3-வது தொழுகை யில்லாதவன் மவுத்துடைய நரகத்திற் கலிமாச் சொல்ல நாக்கு வழங்காமற்போவான்.

இவ்விதம் அவன் மவுத்தான பின்னர் அவனை கபுறுக் குழியிலே முறைபோல கொண்டு போய் அடக்கிய போது கபுறுக் குழியவனை நெருக்கும். இது எப்படி நெருக்கு மென்றால் வலப்புற விலாவிலுள்ள எலும்புகளெல்லாம் இடப்புற விலாவில் வரவும் இடப்புற விலாவிலுள்ள எலும்புகளெல்லாம் வலப்புற விலாவில் வரவும், பெரிய வேதனையாக நெருக்கு மென்று சொன்னார்கள்.

பின்னர் அசுஹாபி மார்கள் நபி நாயகத்துடனே, நாயகமே கபுறுக்குழியிலுள்ள 3-வித அதாபுக ளென்ன வென்று கேட்டார்கள். அதற்கு நபிநாயகம் சொன்னார்கள், கபுறுக்குழியிலுள்ள அதாபுகளிலே 1-வது தொழுகை யில்லாதவனுடைய கபுறுக் குழியில் நெருப்புப்பற்றி இரவு பகலாக யெரியும், 2-வது தொழுகை யில்லாதவனுடைய கபுறுக் குழியிலே அல்லாஹுதஆலா மலக்கை அனுப்பி வைப்பான். அந்த மலக்கு பாம்புருவாக இருப்பார். அவருடைய இரண்டு கண்ணும் நெருப்பினாலும் கை நகமெல்லா மிரும்பினாலாகிற பெரிய சுக்குமா ரென்னுந் தடியை பிடித்துக் கொண்டு வந்து அந்தமையித்தை யடித்துப் பெரிய கோபத்துடனே கோடை யிடியைப்போலே யலறி சப்தித்துக் கேள்விகள் கேட்டு சுபுஹுத் தொழுகையை விட்டவனே என்று கூப்பிட்டு லுகறு வரையிலும் அடிப்பார். பின்பு லுகறுத் தொழுகையை விட்டவனே என்று கூப்பிட்டு அசுறு வரையிலும் அடிப்பார். பின்பு அஸறுத் தொழுகையை விட்டவனே யென்றும் கூப்பிட்டு மஃரிபு வரையிலும் அடிப்பார். பின்பு மஃரிபுத் தொழுகை விட்டவனே யென்று கூப்பிட்டு இஷா வரையிலும் அடிப்பார். பின்பு இஷாத் தொழுகையை விட்டவனே யென்று கூப்பிட்டுச் சுபுஹு வரையிலும் அடிப்பார்.

இவ்விதம் அடிமேலடி விழுவதால் ஒவ்வோரடிக்கும் அவன் பூமியின் கீழே 70-வது முழம் அமிழ்ந்திடுவான். அப்படி அமிழ்ந்தவனை அந்த மலக்குத் தம்முடைய பெரிய இரும்பு நகத்தினலே கோரியெடுத்து வெளியிலே போட்டு மிகுந்த அதாபு செய்வார், அடிப்பார். அந்த அடிகளையும் அதாபையும் அவன் பொறுக்காமற் கூக்குரலிடுவான். அவனுடைய கூக்குரலையும் அதாபையும் அந்த மலக்கானவர் கடுகளவும் கவனிக்காமல் கியாம முடியுமளவும் அதாபு செய்கிறவரா யிருப்பார். பின்பு கியாமமான போது மலக்குகள் வந்து அவனைக் கபுறுக் குழியில் நின்று புறத்திப்படுத்தி முகத்தைக் குப்புறவாக்கி கீழேபோட்டு இழுத்துக் கொண்டு போவார்கள். அப்போது அல்லாஹுதஆலாவுடைய கோபப் பார்வை வுண்டாக்கி யவனைக் கேள்வி கேட்கப்படும். அந்தக் கேள்வியினுடைய சத்தத்தினலே அந்தத் தொழுகை யில்லாத மனுஷனுடைய முகத்திலுள்ள சதை யெல்லாம் பிளந்து பாவாயுருகி ஓடிப்போகும். இவ்விதம் தொழுகை யில்லாதவர்களை அல்லாஹு தஆலா விடாத கேள்வி கேட்டு அவர்கள் செய்த குற்றத்திற்காக நரகத்தில் போட்டு அதாபு செய்யும் படி யுத்தரவாக்குவான். அதுபோலே மலக்குகள் அவர்களை நரகத்திற் கொண்டு போய் போட்டு அதாபு செய்வார்கள்.

நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லங் திருவுளமானர்கள், யாதாமொருத்தன் இடையூறின்றி வலியத் தொழுகையை விட்டு விட்டிருந்தவனை 70-ஹுக்குபாவரைக்கும் நரகத்திலே அதாபு செய்யப்படுமென்று. ஆனல் ஒரு ஹுக்குபாவாகிறது 70 வருஷமா யிருக்கும். இன்னும் நரகத்திலே யொரு ஓடை யுண்டா யிருக்கிறது அந்த ஓடையிலே படைப்புண்டாயிருக்கிற தெல்லாம் பாம்புகளா யிருக்கில் அந்த பாம்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் ஒட்டகை போலும் ஒரு மாதம் பயணத் தொலைதூர முள்ளதாயு மிருக்கும். அப்பேர்பட்ட வோடையிலே கணக்கிலடங்காத பாவிகளைக் கொண்டு போய்ப் போடப்படும். அவர்களை அந்தப் பாம்புகள் தங்களுடைய உடலிலேசுற்றி வாங்கிக் கொண்டு வாயிலே போட்டு விழுங்கிறதும் கக்கிறதுமாக அதாபு செய்யும். இவ்விதம் அந்த வோடையிலே (7) வருஷங் கிடந்து அதாபுபடுவார்கள். அந்தப் பாம்புகளுடைய நஞ்சு அவர்களுடைய உச்சித் தொடுத்து உள்ளங்கால் வரையிலும் உடலெல்லாம் வடிந்து

நண்கொண்டு பார்க்க ஏலாதபடி சதைபிஞ்சு நசுங்கிப்போய் நஜீசுள்ளவர்களா யிருப்பார்கள்.

இன்னும் நரகத்திலே யோர் ஓடையுண்டா யிருக்கிறது. அதிற் படைப்புண்டா யிருக்கிறதெல்லாம் தேள்களாயிருக்கும். அந்தத் தேள்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெரிய கழுதை போலேயிருக்கும். அந்தத் தேள்கள் ஒவ்வொன்றுக்கும் 70 கொடுக்குகளுண்டும். ஆனல் முற்படப்பாம்பு வோடையிற் கிடந்து அதாபுப்படுகிற தொழாதவர்களை அதைவிட்டுப் புறப்படுத்தி இந்தத்தேள் ஓடையிற் கொண்டுவந்து போடுவார்கள். அங்குள்ள தேள்கள் தங்கள் தங்கள் 70 கொடுக்குகளினுலும் தொழுகையில்லாதவரைக் கொட்டி யதாபு செய்யும். அப்போதிந்தப் பாவிகளெல்லாரும் ஆண்டவனை நாடிச் சப்தித்து நாயனே! எங்களுக்கு இந்தத்தேள்களின் ஓடையிலேயுள்ள அதாபைப் பொறுக்கக்கூடவில்லை. ஆதலால், இப்போதே எங்களை அந்தப் பாம்புகளுடைய ஓடையிலே போட்டால் மிகவும் நன்மையாயிருக்குமென்று சொல்வார்கள்.

இவ்விதத்திலே தொழுகை யில்லாதவர்களை ஆயிர வருஷக் காலம் அல்லாஹு தஆலா அதாபிலாக்கிவைப்பான். அதனுலே அந்தத் தொழுகை யில்லாதவர்களுடைய சரீரத்திலுள்ள சதை எலும்பு, மூளை, தோல் இவைமுதலிய மற்றவைகளும் நஞ்சுபிஞ்சி வெந்துருகி பாவாய்க் கரைந்துபோகும் அவர்களுக்கு அல்லாஹு தஅலாவுடைய முனிவும் லஃனத்தும் எப்போது முண்டாகிக்கொண்டே யிருக்கும்.

இன்னும் நபிநாயகம் திருவுளமானுர்கள், யாதாமொரு இஸ்லாமான ஆண் பெண்கள் ஒரு தங்கடமின்றியே ஒரு நேரத்துத் தொழுகையை விடுவார்களாகில் அவர்களுடைய பெயரை நரகத்து வாசலிலே கியாமநாள் வரைக்கும் நரகவாதிகளென்று எழுதப்பட்டிருக்கும். ஆனுல் முஸ்லீம்கட்கும் காபிரீன்கட்கும் மிடையிலோர் பேருண்டாயிருக்கிறது. அது யாதெனில் தொழுதவர் களெல்லாரு முஸ்லிமாயிருக்கும். அப்படி தொழாதவர்கள் எல்லோரும் காபிரீன்களா யிருக்குமென்று சொன்னுர்கள்.

அல்லாஹு தஆலா திருவுளமானுன், நான் சொர்க்கத்தைப் படைத்தவன், ஏனெனில் என்னை வணங்குகிறபேர்கள் ஹபசியா

யிருந்தாலு மொக்கும், அவர்களை யந்தச் சுவர்க்கத்தில் வைக்கப் படுமென்று. அதின்படி நபிநாயகந் திருவுளமானார்கள், அல்லாஹுத் தஆலர் நரகத்தைப் படைத்தான். அதேதுக்கானால் அவனை வணங்காத பேர்களை அதிலே போட்டுச் சுட்டெரிக்க. ஆனல் என்னுடைய உம்மத்துக்களானாலு மொக்கும், என்னுடனே கிளைஞராகிய ஸெய்யிதுமாரானாலும் ஒக்கும். ஆகையால் தொழுகை யில்லாதவர்களுடனே யாதாமொரு பேச்சும் பேசாதீர்கள். அவர்களிருக்கு மிடத்திலு மிருக்காதீர்கள். அதேதென்றால் அவர்கள் அல்லாஹுத் தஆலாவுக்கும் எனக்கும் மலக்குகளுக்குந் தூரப்பட்டவர்களா யிருக்கு மென்று அஸ்ஹாபிமார்களுக்கு நபிநாயகஞ் சொன்னார்கள்.

இன்னும் அவ்வஸ்ஹாபி மார்களைப் பார்த்து நபிநாயகம், மனிதர்களாலே சில மக்குறூமானவர் களுண்டாமென்று சொன்னார்கள். அப்போது அஸ்ஹாபிமார்கள் நபிநாயகத்திடம், எங்கள் நாயகமே அந்த மக்குறூமானவர் யாராயிருக்குமென்று கேட்டார்கள். அதற்கு நபிநாயகம் அவ்வஸ்ஹாபிமார்களைப் பார்த்து யாதாமொருவன் ஒரு தங்கடமின்றி வலியத் தொழுகையை விடுவானாகில் அவன்தான் நாளையக் கியாமத்திலே எல்லோருங்கூடிய மஜ்லிஸென்னும் சபை முகத்திலே மக்குறூமாகக் கடைகெட்டுத் திரிகிறவனாக யிருக்குமென்று சொன்னார்கள்.

இன்னும் நபிநாயகம் அவ்வஸ்ஹாபிமார்களைப் பார்த்து தொழுகையைத் தவிர்ந்து செய்யப்படுகிற நற்செய்கை களொன்றையும், அல்லாஹுத் தஆலா கபூலாக்கமாட்டான். இன்னும் அவர்கள் செய்கிற தௌபாவையும் கபூலாக்கமாட்டான். மலக்குகளும் அவர்களை விட்டுத் தூரப்படுவார்கள். அல்லாஹுத் தஆலாவுடைய றஹ்மத்தான பார்வையும் அவர்கள்பேரில் உண்டாக மாட்டாது. இவ்விதமான பாவிகளாயிருக்குந் தொழுகையில்லாத பேர்களென்று திருவுளமானார்கள்.

இன்னும் யாதாமொருவன் தன் சுபுஹுத் தொழுகையை விட்டானாகில் அவனில் நின்றும் ஈமான் தூரப்பட்டுப் போகும். இன்னும் யாதாமொருவன் ளுஹறுத் தொழுகையை விட்டானாகில் அன்பியாக்களை விட்டுத் தூரப்பட்டவனாகி விடுவான். இன்னும் யாதாமொருவன் அஸறுத் தொழுகையை விட்டானாகில் அவன் மலாயிக்கத்துக்களை விட்டுத் தூரப்பட்டவனாகிவிடுவான்.

இன்னும் யாதாமொருவன் மஃரிபுத் தொழுகையை விட்டானாகில் அவன் குறுஆனைவிட்டுந் தூரப்பட்டவனாகிடுவான். இன்னும் யாதாமொருவன் இஷாத் தொழுகையை விட்டானாகில் அவன் அல்லாஹு தஆலாவுடைய றஹ்மத்தைவிட்டுத் தூரப்பட்டவனாகி விடுவானென்று நபிநாயகந் திருவுளமானார்கள்.

இன்னும் நபிநாயகம் திருவுளமானார்கள், யாதாமொருவன் மிடைகூறுந் தங்கடமுமின்றி ஐந்துநேரத் தொழுகையை விடுவானாகில் அவன் ஐந்துபள்ளிவாசலை இடித்தவருக் கொப்பாவான். அவ்வைந்து பள்ளிவாசலில் 1-வது மக்காநகரத்தி லிருக்கும் கஃபத்துல்லா 2-வது பைத்துல் முக்கத்தீசு, 3-வது ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய வீடு 4-வது பைத்துல் மஃமூறு 5-வது ஜாமிஉ ஆகிய இவ்வைந்து ஸ்தலங்களையு மிடித்த வனாகயிருக்கும்.

இன்னும் நபிநாயகந் திருவுளமானார்கள், எவர்களேனுந் தொழுகை யில்லாதவர்களை 4-காரியத்திலே தள்ளிவைக்கிறது துரிஸ்தாயிருக்கும். அதிலே 1-வது அவன் அறுக்கிற உயிர்ப் பிராணிகளைச் சமைத்து தின்னலாகாது 2-வது அவன் சொல்லு கிற சாட்சியைத் துரிதென் றெடுக்கக்கூடாது 3-வது அவனுடைய குசுல் முழுக்குத் துரிஸ்தாகாது. 4-வது அவனுடைய கூடயிருந் துண்ணுகிறதும் துரிஸ்தில்லையென்று.

இன்னும் நபிநாயகம் திருவுளமானார்கள், யாதாமொருவன் தொழுகையை விட்டுவிட்டிருப்பவனுக்கு ஒருபிடிச்சோறு கொடுத் தாலுந் தண்ணீர் கொடுத்தாலும் அவர்க ளெப்பேர்ப்பட்டவ ராவார்களென்றால் மக்கம் கஃபாவை இடித்தவர்போலும் நபி மார்களைக் கொன்றவர்கள்போலும் எழுபது குறுஆனை சுட்ட வர்கள்போலுமாக யிருக்குமென்றார்கள்.

இன்னும் நபிநாயகந் திருவுளமானார்கள், என்னுடைய உம் மத்துகளில் நின்றும் பத்து வகையாரை முகம் குப்புரவாகி இழுத் துக்கொண்டு நரகத்துக்குப் போவார்கள். அவர்களுடைய சதைக ளெல்லாம் பிய்ந்து நைந்து போகுமென்று சொன்னார்கள். அப் போது அஸ்ஹாபிமார்கள் நபிநாயகத்தைப்பார்த்து. அல்லாஹுத் தஆலாவுடைய றசூலே! அந்தப் பத்து வகையார்களும்

யாரென்று கேட்டதற்கு, நபிநாயகம் சொன்னார்கள், அந்தப்பத்து வகையாரில் 1-வது வகையார் ஸினாச்செய்தவர்கள் 2-வது வகையார் அன்னீதஞ்செய்த சுல்தான்கள் 3—வது வகையார்கள் சாராயங் குடித்தவர்கள் 4-வது வகையார் தாய் தகப்பன் மனதை நோவித்தவர்கள் 5-வது வகையார் கோட்குண்டுனி சொன்னவர்கள் 6-வது வகையார் பொய்சாட்சி சொன்னவர்கள் 7-வது வகையார் தனக்குப் பொருளுண்டா யிருந்தபோது ஸக்காத்துக் கொடாதவர்கள் 8-வது வகையார் வட்டிக்கு கொடுத்து காலங்கழித்தவர்கள் 9-வது வகையார் தொழுகை யில்லாதவர்கள் 10-வது வகையார் ஒப்பாரி சொல்லி யழுதவர்கள். ஆகிய இப்பத்து வகையாரையும் நரகத்திலே அடித்து அதாபு செய்யும்படிக்கு அல்லாஹுத் தஆலா ஏவுவான். அப்படி ஏவினவுடனே சிலமலக்குகள் அந்தப் பத்துவகையார்களைப் பின்கட்டாய் கைகளை இழுத்துக் கட்டி முதுகிலடிப்பார்கள். சிலமலக்குகள் அவர்களை விலாப் பக்கங்களி லடிப்பார்கள். இவ்வித அதாபுகளையும் அடிகளையும் அந்தப் பத்து வகையாரும் பொருக்கக்கூடாமற் கதறியழுவார்கள். அவ்வழுகையைக் கேட்டுச் சொர்க்கமானது அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து என்னையும் படைத்தாளுகிற ஆண்டவனே! இந்தப்பாவிகளை என் வீட்டளவிலே சேர்க்காதே யென்று சப்தித்துச் சொல்லும். அப்போது காமான்காறுணிவர்கள் கிடைக்கிற நரகம் இரைந்து சப்தித்து, ஆண்டவனைப் புகழ்ந்து என்னைப் படைத்தாளுகிற நாயனே! அந்தப்பாவிகளை எனக்குக் கொடுவென்று கேட்கும். உடனே அல்லாஹுத் தஆலாவுடைய உத்திரவின்பேரில் அந்தப் பத்துவகையாரையும் அந்நரகத்திற் போடப்படுவதிலே அவர்கள் கிடைந்ததாபுப்படுவார்களென்று திருவுளமானார்கள்.

இன்னும் நபிநாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் அஸ்ஹாபிமார்களைப் பார்த்து, என்னன்புள்ள நேசர்களே! நீங்களே ஹஜ்ஜிநசரு இவர்களுக்குச் சலாம் சொல்லுங்கள். தொழுகையில் லாதவர்கட்குச் சலாம் சொல்லாதீர்களென்று சொன்னார்கள். இன்னும் நபிநாயகமவர்கள் அஸ்ஹாபிமார்களைப் பார்த்து தொழுகையாகிறது தீனுக்குத் தூணாயிருக்கும், ஆதலால் யாதாமொருவன் விடாமற் தொழுவார்களாகில் அவர்கள் தான் தீனுடைய தூணைநிருத்திவைத்தவர்களாயிருக்கும்.

யாதாமொருவர் தொழுகையை விட்டு விட்டார்களாகில் அவர்கள் தான் தீனுடைய தூணை யெடுத்தெரிந்தவர்களா யிருக்கு மென்று சொன்னார்கள்.

இன்னும் நபிநாயகம் அஸ்ஹாபிமார்களைப் பார்த்து யாதா மொருவன் என்பேரில் தொழுகை விதியில்லை யென்று சொல் வானாகில் அவன் தான் காபிராகிவிடுவான். ஆனால் தங்கடமுண்டா யிருக்கில் அதற்குத் தகுந்தபடி தொழுதுக்கொள்ளலாம். தொழு கையாகிறது இவன் செய்த பாவகுற்றத்திற்குத் தண்டனையா யிருக்குமென்று சொன்னார்கள்.

இன்னும் நபிநாயகந் திருவுளமானார்கள், சுவர்க்கவாதிகட்கு 4-அடையாளமுண்டு. அதிலே 1.வது குளிர்ந்தமுகம் 2.வது நாவிலே நல்வசனம், 3-வது சஹியானகுணம், 4-வது தக்குமா ஆகிய இந்நான்கு நற்குணமுமுண்டாயிருக்கும். நரகவாதிகட்கு 4-அடையாளமுண்டு. அதிலே 1-வது கடுகடுத்தமுகம், 2-வது நாவிலே கெட்டவசனம், 3-வது பகில்க்குணம், 4-வது அல்லா ஹுதஆலாவை யறியமாட்டாதவன் நெஞ்சு. அப்படி அல்லா ஹுதஆலாவை யறியாத பாவதாரிகளை அவனை யறியாதவனைக் கொண்டு அநியாயஞ் செய்விப்பேனென்று அல்லாஹுதஆலா சொன்னானென்று சொன்னார்கள்.

இன்னும் நபிநாயகம் திருவுளமானார்கள், கியாமநாளையிலே அதுஷாத்தென்னும் வெளியிலே ஒரு பாம்பு புறப்பட்டுவரும். அதற்கு பெயர் சுறைக என்று சொல்லப்படும். அதினுடையதலை ஏழுவர்னத்திற்கு முயர்த்தியா யிருச்கும். அதினுடைய வாய் ஏழு பூமிக்குங் கீழாலே கண்டுகொண்டிருக்கும். இப்பேற்ப்பட்ட பெரிய பாம்பானது அல்லாஹுதஆலாவைப் புகழ்ந்து என்னைப் படைத்தாள்கிற நாயனே! எனக்கு ஏதுவாகிலும் தரவேண்டும் மென்று கேட்கும். அப்போது அல்லாஹுத்தஆலா ஜிபுரீலைக் கொண்டும் அந்தப் பாம்பினிடத் திலுனக்கென்ன வேண்டுமென்று கேட்கும் போது, அந்தப் பாம்பு எனக்கு முஹம்மது நபியவர் களுடைய உம்மத்துகளில் நின்றும் ஐந்து வகையார்களைத் தரவேண்டுமென்று சொல்லும். அவ்வைந்து வகையாரில் 1—வது தொழுகை யில்லாதவர்கள், 2—வது சக்காத்துக் கொடுக்காதவர்கள் 3—வது கள் குடியர்கள், 4—வது தாய்தகப்பனை மனம் நோவித்

தவர்கள், 5-வது பள்ளிவாசலிலிருந்து கொண்டு துன்யாவுடைய பேச்சுகளைப் பேசுகிறவர்கள் ஆகிய இவ்வைந்து வகையாரையும் அப்பாம்பு அதாபு செய்யப்படுமென்றும்.

இன்னும் நபிநாயகம் திருவுளமானார்கள், துன்யாவிலே 7 வீடுகளில் அல்லாஹுதஆலாவுடைய றஹ்மத்திறங்காது. அதிலே 1-வது புருஷன்சொல்லைக் கேட்காத பெண்சாதிகளிருக்கிற வீடு, 2-வது புருஷனுடைமையைப் பாதிக்கச் சிறுவீடு தேடுகிற பெண்சாதி யிருக்கிறவீடு, 3-வது சனச்செய்கிற வீடு, 4-வது சக்காத்துக் கொடாதவர் களிருக்கிற வீடு, 5-வது கள்ளு சாரயம் குடிக்கிறவர்களிருக்கிற வீடு, 6-வது கள்ளுசாரயம் வைத்து விற்கிறவர்கள் வீடு, 7-வது மவுத்தாகும் போதையிலே வசிய்யத்துச் செய்யாதவர்கள் வீடு. ஆகிய இவ்வேழு வீடுகளிலும் அல்லாஹுதஆலாவுடைய றஹ்மத்திறங்காதென்று சொன்னார்கள்.

அல்லாஹுதஆலா திருவுளமானன், ஆதமுடைய மக்களே! நீங்கள் பெரியதான பாவத்தைச் செய்கிறீர்கள். ஆனல் நீங்கள் பொழுதினுடைய சூட்டுக்கு ஆற்றமாட்டீர்கள், அப்படிப் பொழுதினுடைய சூட்டுக்கு ஆற்ற மாட்டாதவர்களாகிய நீங்கள் பிரமாண்டமாகிய பாவங்களைச் செய்தால் அதற்காக ஏழு தட்டுகளில் நஞ்சுடைய நரகங்களைப் படைத்து நிரப்பியிருக்கிறான். அந்தத் தட்டுகளெல்லாம் மிகவும் செய்தானதென்றும்.

அதை யறிந்து நபிநாயகம் திருவுளமானர்கள், அல்லாஹுதஆலா நரகத்தட்டு களோவ்வொன்றிலும் 70,000 ஆறுகளை நெருப்பின லுண்டாக்கியிருக்கிறான், அவ்வாறு களோவ்வொன்றிலும் எழுபதினயிரம் பாம்புகள் நெருப்பினலுண்டாயிருக்கிறது. அப்பாம்பு களோவ்வொன்றின் வயிற்றிலே நெருப்பினல் எழுபதினயிரம் திரையுண்டாயிருக்கிறது, அந்தத்திரை யொவ்வொன்றிலும் நெருப்பினல் எழுபதினயிரம் வீடுகளுண்டாயிருக்கிறது, அந்த வீடுகளோவ்வொன்றிலும் நெருப்பினல் எழுபதினயிரம் கிணறுகளுண்டாயிருக்கிறது. அக்கிணறுவ்வொன்றிலும், நெருப்பினல் எழுபதினயிரம் பெட்டகமுண்டாயிருக்கிறது. அந்த பெட்டகம் ஒவ்வொன்றிலும் நெருப்பினல் எழுபதினயிரம் கள்ளிமரமுண்டாயிருக்கிறது, அக்கள்ளிமரமொவ் வொன்றின் கீழ் மூட்டில் நெருப்பினல் எழுபதினயிரம் இருப்பிட முண்டா

யிருக்கிறது. அந்த யிருப்பிடம் ஒவ்வொன்றிலும் நெருப்பினால் எழுபதினாயிரம் மலக்குகளுண்டாயிருக்கிறார்கள். அந்த மலக்குகள் ஒவ்வொருவருக்கு முன்னில் நெருப்பினால் எழுபதினாயிரம் பாம் புண்டாயிருக்கிறது. அந்தப் பாம்பு ஒவ்வொன்றின் நீளமாகிறது எழுபதினாயிரம் வருடத்தொலை தூரமாயிருக்கும். அந்தப் பாம்பு களுடைய வயிற்றிலே குறுக்கடற்போலே குடலுண்டாயிருக்கிறது அந்தக் குடலொவ்வொன்றிற்குள்ளே எழுபதினாயிரந் தேளுண்டா யிருக்கிறது. அந்தத்தேட்களொவ்வொன்றிற்கும் எழுபதினாயிரம் கொடுக்குண்டா யிருக்கிறது. அந்த கொடுக்களொவ்வொன்றிலும் எழுபதினாயிர முழமுண்டும். அந்தக் கொடுக் களொவ்வொன் றிலும் எழுபதினாயிரஞ்சாடி நஞ்சுண்டாயிருக்கிறது. அந்த நஞ்சினுடைய நிறம் சிவந்த நிறமாயிருக்கும். இவைகளெல்லாம் யாருக்காக உண்டாக்கப் பட்டதென்றால் அல்லாஹுதஆலா அறுஷைக் கொண்டும் வானத்தைக் கொண்டும் மசுகூறென்னுங் கடலைக்கொண்டும் சத்தியஞ்செய்து சொன்ன படிக்குக் காபீரின் கட்கும் கோட்குண்டுணி சொன்னவர்களுக்கும் தாய்தகப்பன் மனதை கோவித்தவர்கட்கும் பிறரை இகழ்ச்சி செய்தவர்கட்கும் தனக்கு முதலுண்டாயிருக்கும்போது சக்காத்துக் கொடாதவர் கட்கும் தொழுகையை விட்டவர்கட்கும் எத்தீம்களை அநியாயஞ் செய்தவர்கட்கும் கூலிக்காரருக்கரிந்திருந்து கூலியைகுறைப்பவர் கட்கும் ஒப்பாரிசொல்லி யழுகிறவர்கட்கும் அசல்வீட்டாரை நெருக்கடி செய்தவர்கட்குமா யிருக்குமென்று சொன்னார்கள். ஆதலால் நாமெல்லோரும் இப்பேர்ப்பட்ட கெட்டசெய்கைகளை எல்லாம் விட்டுவிட்டுக் கலப்பறுதலான வணக்கஞ் செய்து சாலிஹான அடியார் கூட்டத்திற்சேரும்படி அல்லாஹுதஆலா கிருபை செய்வானாகவும். ஆமீன் யாறப்பில் ஆலமீன்.

இன்னும் நபிநாயகம் திருவுளமானார்கள் கள்ளுக்குடியருக்குச் சலாம் சொன்னாலும் அவர்களுடைய கைமைத் தொட்டாலும் நாற்பது வருஷஞ்செய்த அமல்கள் அழிந்துபோகும் மென்றும், இன்னும் தீமையெல்லாமொன்றாகச் சேர்த்துவைத்த வீட்டுக்குப் பூட்டாகிறது ஸனாவாயிருக்கும். அதற்குத் திறவுகோலாகிறது கள்ளுக்குடியாயிருக்குமென்றும் நன்மைகளை யெல்லாஞ் சேர்த்து வைத்த வீட்டுக்குப் பூட்டாகிறது தொழுகையாயிருக்கும், அதற்கு

திறவுகோலாகிறது உலூவாயிருக்குமென்றும், இன்னும் கள்ளுக் குடியாகிறது பாவத்திற்கெல்லாந் தலையாயிருக்கும் அந்தக் கள்ளைக் குடித்தவர்கட்கு மஹ்ஷர் நாளையில் தவிக்கிறதாகத்திற் ஒருபோதுந் தண்ணீர் கிடையாதென்று. இன்னும் கள்ளுசாராயமாகிறது இபுலீசுடைய மூத்திரமாயிருக்கும். அப்பேர்பட்ட வஸ்துகளை யாதாமொருவன் ஹலாலென்று சொன்னால், அவன் காபிராவானென்றும் இன்னும் நரகத்திலோர் ஒடையுண்டாயிருக்கிறது. அந்த வோடையிலுண்டாயிருக்கிற நெருப்புச்சூடு தாங்காமல் மற்ற நரகங்களெல்லாம் அல்லாவை நோக்கி நாளொன்றுக்கு எழுபது தரம் துஆக்கேட்கும். அப்பேர்பட்ட ஓடை நெருப்பினாலே ஒரு வீடுண்டாயிருக்கிறது. அந்த வீட்டிலே நெருப்பினாலே ஒரு பெட்டக முண்டாயிருக்கிறது. அந்தப் பெட்டகத்திற்குள்ளே நெருப்பினாலே ஒரு பாம்புண்டாயிருக்கிறது. அந்தப் பாபுக்குத் தலை ஆயிரம், அந்தத்தலை ஒவ்வொன்றுக்கு வாய்ஆயிரம், அந்த வாய் ஒவ்வொவ்வொன்றிற்குப் பதினாயிரம் பல் அந்த பல் ஒவ்வொன்றிற்கு நீளம் ஆயிரம் முழமென்றுஞ் சொன்னார்கள்.

அப்போது அஸ்ஹாபிமார்கள் நபிநாயகத்தைப்பார்த்து அல்லாவுடைய றசூலே! எங்கள் நாயகமே! இப்பேர்பட்ட அதாபு யாருக்கென்று கேட்டதற்கு, நபிநாயகம் அவ்வஸ்ஹாபிகளைப் பார்த்து இஸ்லாமானவர்கள் கள்ளுசாராயங் குடிப்பார்களே யவர்களுக்கென்று சொன்னார்கள்.

ஆதலால் மூமீன் முஸ்லிமான! இகுவான்களே இவ்விதம் அல்லாஹு தஆலாவும் றசூல் நாயகமும் சொல்லியிருக்கின்ற ஏவல் விலக்கல் இன்னதென்று அறிந்துபெரியோர்கள் சொல்லிப்பேணி நடந்தால் மேற்சொன்ன பாவதண்டனை குற்றத்திற்காளாகமாட்டோமென்று அறிந்து, இந்த நஸீஹத்துல் இஸ்லாம் ஹனபியாவில் வருகிற மார்க்க விதிகளையும் ஏவல் விலக்கல்களையும் பார்வையிட்டு இஸ்லாத்திலைந்து காரியமும் ஈமானிலாறு காரியமும் ஆகப் பதினொரு காரியத்தையும் பேணுதலாகச் செய்துவரவேண்டும். அப்படி பேணுதலாக இருந்தால் றசூல்நாயகத்தின் மன்றூட்டமும் மற்றும் அவ்லியா அன்பியாக்களுடைய துவாப்பேறுமுண்டாகி நற்கதியைப்பெறலாம். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

ARCH

நஸீஹத்துல் இஸ்லாம் ஹனபிய்யா முற்றிற்று.

வெளி வந்துவிட்டது! முதல் பதிப்பு!

# பத்ஹுர் ரஹ்மான்
# பில் பிக்ஹின் னுஃமான்.

பிரயோஜனமான கல்வி, பிரயோஜனமில்லாத கல்வி என்று இரண்டு வகையுண்டு. உலக வாழ்வைமட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜனமில்லாத கல்வி. நம் மனமும் ஒழுக்கமும் சீர் பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக்கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல் செய்யவேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும். இதுதான் இம்மை, மறுமை இருலோகத்தில் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுகவேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. உதாரணமாக: ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத், நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கம், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கியிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்கு அரபுமொழியில் ஓதவேண்டிய கலி[illegible]; துஆ முதலானவைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால்தான் தெரியும்.

விலை ரூ. 2-12-0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.